ISSN 2792-1650

# வெண்ணிலா

காலாண்டுச் சஞ்சிகை
Quarterly Magazine

வெண்ணிலா
VENNILA

இணைய தளம்
www.vennilamanjari.com

## சமூக மாமணி முர்ஷிதா ஷிரீன்



இதழ்: 18. ஜுலை-செப்டம்பர் 2025. ரூபா. 150/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



TYPESETTING

GRAPHIC DESIGNING

PHOTOCOPY

OFFSET PRINTING

DIGITAL PRINTING

LAMINATING

BINDING

&

MUCH MORE SERVICES

at Cheapest rates.

**Jesa Grafix**

FINEST CREATIVE & PRINTING SOLUTION

| PHOTOCOPY | PRINT | SCAN |

075 656 9393

No. 281, Main Street, Maruthamunai

**jesagrafix24@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டுச் சஞ்சிகை **வெண்ணிலா** ISSN 2792-1050

**ஐந்தாவது ஆண்டு - இதழ்: 18 ஜூலை-செப்டம்பர் 2025.**

*இணைய தளம்:* www.vennilamanjari.com

வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.

**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314
இலங்கை.

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com

**தொடர்பு** : 077 6968 697
**வட்ஸ்அப்** : 077 6968 671

**தகவல் தொழிநுட்பம்:**
ஏ. ஜி. அப்ரான் முஹம்மத்
(Associate Software Engineer)

**அட்டை, பக்க வடிவமைப்பு:**
எஸ். ஏ. அப்துல் கப்பார் DICP, DIHE & DIEC.
abdulgaffar9@gmail.com

**அச்சு:**
எஸ். ஏ. ஜெஸீம்
ஜெஸா கிரபிக்ஸ், மருதமுனை.

**வெளியீடு:**
டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம்
தொடர்பு: 07 5858 5656

**படங்கள்:**
நன்றி - கூகிள்.

வெண்ணிலா காலாண்டுச் சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துகளுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை அறியத்தரல் வேண்டும். பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. படைப்புகள் கணினியில் அல்லது கைத் தொலைபேசியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சல் அல்லது வட்ஸ்அப் மூலமாக மட்டுமே அனுப்பவேண்டும்.

வெண்ணிலா சந்தா விபரம்:
தனியிதழ் **150/=** தபாற்செலவு **100/=**
ஆண்டுச் சந்தா **1000/=**
(4 இதழ்கள் - தபாற்செலவு உட்பட)

வங்கி மூலம் பணம் செலுத்துவோர்
S A ABDUL GAFFAR
Bank of Ceylon, Kalmunai
A/C - 6106068
என்ற இலக்கத்திற்கு பணத்தை வரவிலிட்டு பற்றுச் சீட்டின் பிரதியை
ஆசிரியர் - வெண்ணிலா
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314
என்ற முகவரிக்கு அல்லது
vennilakavithaimanjari@gmail.com
என்ற மின்னஞ்சலுக்கு அல்லது
0776968671 என்ற வட்ஸ்அப்
இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


**ஆசிரியரிடமிருந்து: (5)**
- சமர்ப்பணம்...

**அட்டைப்படக் கட்டுரை: (6-11)**
- சமூக மாமணி முர்ஷிதா ஷிரீன்

**மருத்துவக் கட்டுரை: (12-17)**
- சிறுவர்களுக்கு ஏற்படும் கக்குவான் இருமல் நோயும்...
- Dr. ஜலீலா முஸம்மில்

**சிறப்புப் பார்வை: (18-22)**
- வண்ணப் பூச்சூடவா வெண்ணிலா!
- கலாபூஷணம் எம். எம். மன்ஸுர்

**தொடர்கதை: தொடர் - 1 (23-30)**
- நீ வாசிக்க மறந்த வரிகள் நான்
- ஏ. எம். கஸ்புள்ளா

**நூல் நயம் / அறிமுகம்: (31-40)**
- இப்படிக்கு என் இதயம்
- அகந்தை அழிந்தது
- இன்னொரு மனசு
- சுவடுகளின் நோக்கு

**சிறுகதைகள்: (41-66)**
- பின்தொடரும் தர்மங்கள்
- அபூ அப்ராஸ் ஃபியாத்
- அவளவனின், 'மேக தூதம்'
- இமையி, கம்பளை.
- நெஞ்சக் கனல்
- கிண்ணியா சபீனா.
- மறந்தது மலருமா?
- செம்மைத்துளியான்
- படிப்பு முக்கியம் ராசா
- ஏ. எம். ஏ. றநூல்

**கட்டுரைகள்: (67-78)**
- போட்டு, வாங்கி, குடுக்கிற கதை
- அஷ்ரபா நூர்தீன்
- மருதமுனை வரலாறும் வாழ்வியலும் - தொடர்: 1 மருதமுனையில் கொடியேற்று விழா (1959-1963)
- ஏ. ஆர். ஏ. சத்தார்

**வாழ்த்துப்பா: (79)**
- வெண்ணிலாவுக்கு வாழ்த்துக்கள்
- ஏ. ஆர். அப்துல் றசூல்

**மொழிபெயர்ப்புக் கவிதை: (80)**
- அபி சுபேதியின் தன்கா கவிதைகள்
- மாவனல்லை எம். எம். மன்ஸுர்

**தடம்பதித்த மூத்த கவிஞர்: (81)**
- கடலோடு பேசிய வனங்களின் சிறகுகள்
- மு மு மு பாசில்

**மஞ்சரி கவிதைகள்: (82-100)**
- கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்.
- வெலிகம ரிம்ஸா முஹம்மத்
- கிண்ணியா சபீனா
- வேலணையூர் ரஜித்தன்
- ஏ. சீ. எப். பஸீயா
- செண்பகச்சோலையாள் ஆய்ஷ்
- சுமை
- ரிஹானா ஹரிஸ்கான்
- முகம்மது றியால்
- மக்கொனையூராள்
- கவிப்பொய்கை ஜவ்ஸன் அகமட்
- ஒலுவில் நழீம் ஹனீபா
- ஏயாறே
- தியத்தலாவ எச். எப். ரிஸ்னா
- நிஸ்வா ஸலாம்
- மூதூர் நிஸ்வின்
- செல்வத்தமிழ், தென்காசி
- சம்மாந்துறை மஷூறா

**உங்களிடமிருந்து: (101-102)**
- வாசகர் பதிவுகள்.
- தமிழ்நெஞ்சம் அமின்
- கவிப்பொய்கை ஜவ்ஸன் அகமட்
- ஏரூர். கே. நௌஸாத்
- சபீனா வைத்துள்ளா
- அலெக்ஸ் பரந்தாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

வெண்ணிலா சஞ்சிகையின் பதினெட்டாவது இதழை வெளியிடும் இவ்வேளையில் எனது தம்பி டாக்டர் எஸ். ஏ. ஜஹ்பர் அவர்களை நினைவு கூர்தல் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. 1978ஆம் ஆண்டு வெண்ணிலா சஞ்சிகையின் முதல் இதழை மருதமுனை இளம்பிறை அச்சகத்தில் அச்சேற்றி வெளியிட்டபோது அவரது பதினாறு வயதிலும் அவர் எனக்கு ஊட்டிய உற்சாகம் என்னால் என்றும் மறக்க முடியாதது. 2021 ஆம் ஆண்டில் மீண்டும் வெண்ணிலா சஞ்சிகையை வெளியிடத் தீர்மானித்தபோது எனக்கு பக்க பலமாக இருந்து சஞ்சிகையின் முதற் சந்தாத்தாரராக சேர்ந்து சிரேஷ்ட ஆலோசராகச் செயற்பட்ட அவர் 2023-05-28 ஆந் திகதி 'வபாத்'தாகி இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அன்னாரின் நினைவுகளுக்கு இந்த இதழை சமர்ப்பணம் செய்கின்றேன்.



டாக்டர் மர்ஹூம்
எஸ். ஏ. ஜஹ்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படக் கட்டுரை.

# சமூக மாமணி முர்ஷிதா ஷிரீன்



**அறிமுகம்:**

அம்பாறை, சம்மாந்துறைப் பிரதேசத்தில் பிறந்து ஒரு விவசாய போதனாசிரியர் ஆகவும் சமூக சேவகி ஆகவும் இருந்து வருபவர் முகம்மது ஹனீபா முர்ஷிதா ஷிரீன்.

இலங்கையின் விவசாய திணைக் களத்தின் ஏறாவூர் பிரதேசத்திற்கான பொறுப்பு உத்தியோகத்தராக கடமை யாற்றுகிறார். இத் துறை பல்வேறு விதமான சமூகசேவைப் பணிகளுடன் தொடர்புபட்டதாகவும் மற்றும் பல்வேறுபட்ட சமூக பணியாளர் களுடன் தொடர்புடையதுமான துறையாகும். அதாவது, இவரது சேவை திணைக்களத்தின் வேலைத் திட்டங்களுக்கு அப்பால், வியாபித்துக் காணப்படுகின்றது. அத்துடன் இவரது தொழில் விவசாயம் சார்ந்த ஒன்றாக இருப்பதனால் அதனோடு இணைந்த சமூக நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு பயணிக்கிறார்.

**இலக்கியப் பயணம்:**

இவரது இலக்கியப் பயணம் மூன்றாம் தரத்தில் படிக்கும்போது ஆரம்பிக்கப்பட்டது எனக் கூறுகிறார். அன்றைய மாணவர் மன்றம், தமிழ் தின விழா, கலை நிகழ்ச்சிகள் என தொடங்கிய பயணம் பல விருதுகளையும் சான்றிதழ்களையும் நினைவுச் சின்னங்களையும் பெற உறுதுணையாக அமைந்தது.

பிரதேச செயலக மட்டத்தில் இடம் பெற்ற கலை கலாசார விழாக்களிலும் சிறுகதை, கவிதை, நாட்டார் பாடல், கட்டுரை போன்ற தனது கலைப் படைப்புகளுக்கு பல சான்றிதழ்கள் பெற்றுள்ளார். மேலும் விவசாய கட்டுரைகள் பல எழுதியுள்ளார். அவை அவரி, நிஸா, கலசம் போன்ற இதழ்களில் வெளியாகியுள்ளன. அதே போன்று இவரது கவிதைகள் தேசிய பத்திரிகைகள், முக நூல், கீறல் சஞ்சிகை, இறகு (நூறு கவிதைகளும், கவிஞர்களும்) போன்றவற்றில் பதிவாகி உள்ளன.

'Mohammed Haniffa Murshida Shreen' என்பது இவரது Facebook id. இது இவரது தனிப்பட்ட பதிவுகளுக்காகவும் கவிதைகள், ஏனைய இலக்கிய விடயங்களைப் பதிவிடவும் பயன்படுத்துகிறார்.

சமகாலத்தில் நூல் வெளியீடு களில் பங்குபற்றுவதனால் அந்நூல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மற்றும் அதனை எழுதுபவர்கள் தொடர்பான விமர்சனக் கட்டுரைகளை அவரது முகநூல் பக்கத்தில் எழுதி வருகிறார். எதிர் காலத்தில் விவசாய கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை தொகுதிகளாக அச்சு வடிவில் வெளியீடு செய்ய ஆயத்தமாக உள்ளார் என்பது வரவேற்கத்தக்கது.

**முர்ஷிதா விவசாயமும் மகத்தான சேவைகளும்:**

இவரது சுயமுயற்சியின் பயனாக சமூக வலைத்தளங்களான WhatsApp, YouTube, Instagram, Facebook, Tiktok மற்றும் Google Search Engine என்பவற்றில் முர்ஷிதா விவசாயம் எனும் திறவுச்சொல்லின் (Keyword) மூலம் விவசாய உலகில் ஊடுருவி பல்வேறு வகையான விவசாயத் தகவல்களை பெறத்தக்கதாக, இத்திறவுச்சொல் உலகெங்கும் வியாபித்துள்ளது. WhatsApp குழுமத்தில், முர்ஷிதா விவசாயம் மற்றும் முர்ஷிதா விவசாயம் 2 என இரு குழுமங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அதில் உலகளாவிய ரீதியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன்பெறுவதுடன் ஏறாவூர் விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள அனைத்து விவசாயிகளும் ஒரு முன்னோடி விவசாயிகளாகவும் மாறியுள்ளனர். இதற்கு சான்றாக விவசாய திணைக்களத்தினால் வருடம் தோறும் நடாத்தப்படும் விவசாய விருது வழங்கல் போட்டிகளில் பல்வேறான தலைப்புகளில் குறைந்தது நான்கு விவசாயிகளாவது முதல் இடங்களை பெறுவதானது, குறிப்பிட்டு சொல்லத்தக்க வரலாற்று நிகழ்வாகும்.

இவரது தொழில் விவசாயம் சார்ந்ததாக உள்ளமையால்,



பல்வேறுபட்ட தரப்பினருடன் பழகுவதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதன் காரணமாக சமூக ரீதியான பல பிரச்சினைகளையும் சவால்களையும் கண்ணூடாகக் காண்பதுடன் அதற்கான தீர்வுகளை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி, இவரால் அல்லது சமூக நிறுவனங்களைக் கொண்டோ பலவற்றிற்கு தீர்வுகள் அல்லது உள்ளீடுகளை வழங்கி வருகிறார். மேலும், விவசாய திணைக்களத்துடன் இணைந்து இயங்கும் தொண்டு நிறுவனங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், மகளிர் சங்கங்கள், அரசியல்வாதிகள், பிரதேச செயலகம், நகர சபை மற்றும் வெளிநாட்டு-உள்நாட்டு முதலீட்டாளர்கள் போன்ற தனியார் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து வாழ்வாதார, சமூக, நல்லிணக்க, சுகாதார, கல்வி, நன்னடத்தை, பொலித்தீன் பாவனையற்ற உலகம் மற்றும் போதைப் பொருளற்ற சமூகம் என்பனவற்றை உருவாக்குவதுடன் மாத்திரமல்லாது இரத்ததான முகாம்களில் கலந்துகொண்டு தனது பங்களிப்பினை வருடா வருடம் வழங்குவதுடன் நின்றுவிடாது இரத்தமும் தானம் செய்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேலும், வரட்சி, வெள்ளம் போன்ற இடர்மிகு காலத்தில், உலர் உணவுப் பொதி வழங்களில் ஈடுபட்டும் வருகிறார். எடுத்துக்காட்டாக, சக்தி குழுமத்தினால் வழங்கப்பட்ட உலர் உணவு பொதிகளுக்கான பயனாளிகளை தெரிவு செய்ததுடன் மாத்திரமல்லாது அதனை வழங்கு வதிலும் தொண்டராக கடமை யாற்றியுள்ளார்.

அனாதை இல்லங்கள், பாட சாலைகள், குர்ஆன் மத்ரசாக்கள், புற்றுநோய் பராமரிப்பு நிலையம் என்பனவற்றிலும் தனது சமூக சேவைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். கிழக்கு மாகாண புற்றுநோய் பராமரிப்பு நிலையம், ஏறாவூரில் கைவிடப்பட்ட அல்லது நோயின் இறுதிக்கட்ட தீவிரத்தால் அவதியுறும் புற்றுநோயாளர்கள் தமது நோய்களை மறந்து இதமான சூழலில் வாழத்தக்கதான நில அலங்காரத்தை மரங்கள், செடி மற்றும் கொடிகளினால் உருவாக்கியதுடன் அவர்களுக்கான உணவுகளை இரசாயனமற்றதாக மாற்றும் வகையில் சுமார் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் இலங்கையில் காணப்படும் அனைத்து பயிர்களையும் கொண்ட இரம்மியமான தோட்டமொன்றும் இவரது தொழிநுட்ப அறிவினால் உருவாக்கம் பெற்று அமைந்துள்ளது. இவ்வுருவாக்கத்திற்கும் பல அன்பளிப்பாளர்களின் உதவிகள் மற்றும் ஒத்தாசைகள் இவரால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிட்டு பதியத்தக்கதாகும்.

இன்றைய சூழலில், அரசாங் கத்தின் தேசிய திட்டங்களில் ஒன்றான சேதன உணவு உற்பத்தியும் உள்ளூர் விதை உற்பத்தியும் திட்டத்தில், அனைத்து பங்களிப்புகளாக விவசாய பயிற்சி வகுப்புகள், விழிப்புணர்வு கருத்தரங்குகள், செய்து காட்டுதல்கள், செயன்முறை பயிற்சிகள், அறுவடை விழாக்கள் மற்றும் பிரச்சாரத்திட்டம் (Campaign Programme) என்பவற்றை வழங்கி வருகிறார். இச்சேதன விவசாயத்தினால் சூழல் மாசுபடுதல் தடுக்கப்படுவதுடன் சூழல் சுத்தமானதாகவும் பசுமையான தாகவும் மாற்றமடையும். சூழலில் காணப்படும் குப்பை கூழங்கள், பிளாஸ்டிக், பொலித்தீன் தவிர்ந்தவை தவிர, மீள் சுழற்சியாக சேதன உரமாக மாற்றப்படுகின்றது. இது தாவரத்துக்கான போசணையாக வழங்கப்படுகின்றது. இதன் காரணமாக, இரசாயன பசளை பாவனைக்கான அளவு குறைகின்றது. இவ்வாறே சூழல் மற்றும் நீர் நிலைகள் சுத்தமானதாக மாற்றப்படுகின்றது. இதனை ஊக்குவிக்கும் ஒரு விவசாய போதனாசிரியராக இலங்கையில் செயற்பட்டுவருகிறார். இரசாயனமற்ற உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக சேதன பழங்கள் மற்றும் மரக்கறி விற்பனை நிலையம் ஒன்றினையும் ஏறாவூர் நகர சபை வளாகத்தில் விவசாய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தின் உதவியுடன் ஸ்தாபித்துள்ளார்.

கொரோனா மற்றும் அனர்த்தங்களின் போதும் தனது பிரதேசத்தில் தொடர்ந்தேர்ச்சியாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான முழு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். இதற்கு சான்றுபகரும் விதமாக அண்மையில் எமது நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரினால் சிறந்த விவசாய உத்தியோகத்தர் என்று கௌரவிக்கப்பட்டதுடன் அன்பளிப்பும் வழங்கப்பட்டது. அத்துடன் இவரது திணைக்களத்தினால் நடாத்தப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள், வல்லுனர்கள் கலந்து கொள்ளும் ஆராய்ச்சி மற்றும் விதை, நாற்று வர்க்கங்கள் பரிந்துரை செய்யும் ASDA நிகழ்விலும் இவ்வருடம் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் விவசாய போதனாசிரியர்களில் இவருக்கு மாத்திரம் விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

இவரது திணைக்களத்தினால் நடாத்தப்படும் NVQ 04 கற்கை நெறிக்கு வளவாளராக செயற்படுவதோடு மாத்திரமல்லாது ZOOM தொழிநுட்பத்தின் மூலம் இலவசமாக மாவனல்லை ஆயிஷா சித்தீக்கா மத்ரசா மாணவிகள் மற்றும் பழைய மாணவர்களுக்கான வளவாளராகவும் மற்றும் சில தொண்டு நிறுவனங்களின் மனைப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் வளவாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

மேலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - தேசிய சேவை,



மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியில் பிரதி வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் முப்பது நிமிட விவசாயம் சம்பந்தமான ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார். இதேபோன்று, வியூகம் தொலைக்காட்சியின் நேரலை நேர்காணல் நிகழ்ச்சியில் ஒரு மணி நேரம் பங்குபற்றி விவசாயம் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார். மேலும் பிரான்சில் உள்ள துளி வானொலி, இலங்கையில் காணப்படும் ஊவா சமூக வானொலி என்பவற்றிலும் இவரது நேரலை நேர்காணல் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் காலநிலை வலயங்களில் ஒன்றான இடை வலயத்துக்கே உரித்தான பயிராகக் காணப்பட்ட இஞ்சி, மஞ்சள், கறுவா, கராம்பு, சாதிக்காய். கொறுக்காய், விரலு, ரம்புட்டான், சப்போடில்லா என்பவற்றை 2014ஆம் ஆண்டு முதன்முதலாக உலர் வலயத்திற்கு அறிமுகப்படுத்தியவர் என்ற தனிப் பெருமை இவருக்கானதாகக் காணப்படுவதோடு, ஆசிய வலயத் திற்கான மா வர்க்கமான TOM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



EJC வர்க்கத்தினை முதன்முதலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நடுகை செய்ததுடன் Dragon Fruit, இலந்தை அல்லது இலங்கை அப்பிள் (Masan-Indian Jujube), பாதாம் என்பவற்றை 2016ஆம் ஆண்டில் நடுகை செய்தார். மேலும், 2018ஆம் ஆண்டில் இந்தியாவின் இனமாகிய விதையற்ற மாதுளை இனங்களில் ஒன்றான, செந்நிற ஏற்றுமதி வர்க்கமான செந்தேவதை (Red Angel) இனை இலங்கை மண்ணில் முதன் முதலாக நடுகை செய்தார். 2014ஆம் ஆண்டு முதன் முதலாக, இலங்கையின் அம்பாரை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறைப் பிரதேசத்தில் பாகிஸ்தான் நாட்டுக்கே உரித்தான நெல் இனமாகிய Basmathi இனை தனது சொந்த முயற்சியினால் இவருக்குத் தெரிந்த பாகிஸ்தான் பிரஜையிடமிருந்து பெற்று, நடுகை செய்து சிறந்த விளைச்சலைப் பெற்று விவசாய திணைக்களத்திற்கு பெருமை சேர்த்தார். மனைப் பொருளாதார அபிவிருத்திக்கான அல்லது மகளிர் பங்களிப்புடனான விவசாய செயற்பாடாகிய காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு என்பனவற்றையும் கிழக்கு மாகாணத்தில் 2016ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியதுடன் பல்வேறு விதமான உணவுப் பெறுமதி சேர் (Value added) உற்பத்திகளான பப்படம், மரவள்ளி, சீவல், காளான் சேர் பதனிடல் உணவுகள், அரிசியிலான உணவு உற்பத்திகள் என்பவற்றுக்கான பயிற்சி வகுப்புகளை மாதம் ஒரு முறை நடாத்துவதுடன் விவசாயிகளின் பயிர்ச் செய்கையில் ஏற்படும் நோய், பீடைத்தாக்கங்களுக்கான தீர்வுகளை விவசாயிகள் இலகுவாகப் பெறும் விதமாக நிரந்தர பயிர் சிகிச்சை முகாமினை ஒவ்வொரு மாதமும் முதலாவது வியாழக்கிழமைகளில் விவசாயிகள் அதிகளவில் கூடும் இடமான சந்தைக்கே சென்று, வழங்கி வருகிறார். 2016ஆம் ஆண்டு எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் ஏறாவூர் வருகையின் போது 6000 மா மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை தலைமை தாங்கி நடாத்தி முடித்த பெருமைக்குரியவர். தற்போது வலது குறைந்தோருக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் பொலித்தீன் பாவனையை முற்றாக ஒழித்தல் போன்ற செயற்றிட்டங்களை YMCA அமைப்புடன் இணைந்து தொண்டராக கடமையாற்றிவருகிறார்.

விவசாயிகளின் விவசாயம் தொடர்பான பிரச்சினைகள், நோய்ப் பீடைத்தாக்கங்கள் போன்றவற்றுக்கான தீர்வுகளை கள விஜயத்தின் போது வழங்கினாலும் இன்றைய கால கட்டத்தில் உள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக விவசாயிகள் தங்களது பிரச்சினைகளைத் தீர்க்க நேரடியாகச் சென்று சரியான ஆலோசனைகளைப் பெறுவதில் சில சிரமங்கள் உள்ளதை உணர்ந்து இவரது சிந்தனையில் உதித்த ஒன்றே முர்ஷிதா விவசாயம் எனும் WhatsApp குழுமமாகும். இது இவரது பெற்றோர் இருவரும் மரணித்து விட்டதனால் அவர்களின் மறுமை வாழ்வின் நன்மை தேடலுக்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சதக்கத்துல் ஜாரியாவாக) ஓர் ஊடகமாக அவர்களது பிள்ளை என்ற ரீதியில் இவரால் உருவாக்கப்பட்டது. இக்குழுமத்தில் நாடு முழுவதிலும் உள்ள அநேகமான விவசாயிகள், மலேசியா, இந்தியா, பாகிஸ்தான், கட்டார், சவூதி அரேபியா போன்றவற்றில் உள்ள விவசாயிகளும் தங்களது விவசாய தாவரங்களில் ஏற்பட்டுள்ள நோய்ப் பீடைகளின் புகைப்படங்களுடன் மற்றும் குரல்வழி மூலமான கேள்விப் பதிவுகளை பதியும் போது அதற்கான தீர்வுகளை வழங்குவதுடன் மேலதிக தகவல்களுக்கு YouTube மூலமான காணொளிகள் மூலமும் விளக்கம் அளிக்கப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவும் இவரது இலவச சேவைகளில் ஒன்றாகும்.

இலங்கையின் தேசிய பத்திரிகைகளான தினகரன் வார மஞ்சரி, வீரகேசரி, டெய்லி மிரர் போன்றவற்றில் இவரது ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். காணொளிகள், பத்திரிகைச் செய்திகள், புகைப் படங்கள், சான்றிதழ்கள், நன்றி நவிலல் பத்திரங்கள் என்பன இவ்வாறான சேவைகளுக்கு சான்றாக காணப்படுகின்றன.

அண்மையில், ஏறாவூர் நகரசபை தவிசாளரினால் தவிசாளர் விருது-2022 எனும் விருது வழங்கல் விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அது மாத்திரமல்லாது, மர்ஹூம் அல்-ஹாஜ் ஏ.எஸ்.எம். ஷம்சுதீன் ஆலிம் கலை கலாசார ஊடக சமூக மேம்பாட்டுக்கான அமையம் மற்றும் Lacsdo Media Network Sri Lanka வினால் நடாத்தப்பட்ட திறமைக்கான தேடல் விருது விழா-




2023 விருது வழங்கல் விழாவில் **சமூக மாமணி** விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்ட மகளிர்தின நிகழ்வில் கௌரவ அதிதியாக அழைக்கப்பட்டதுடன் பரிசிலும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

எதிர்காலத்தில் பசுமையும் அபிவிருத்தியும் அடைந்த இரம்மியமான இலங்கையை உருவாக்குவதும் மற்றும் தன்னைப் போன்றே சமூக சேவையாளர்கள் உருவாக ஊக்கப்படுத்துவதுடன், அவர்களை வளர்த்து விடுவதும் இவரது பேரிலக்குகளில் பிரதானமான ஒன்றாக காணப்படுகின்றது எனக் கூறுகிறார், **சமூக மாமணி முர்ஷிதா ஷிரீன்** அவர்கள்.

இவரது எண்ணம் நிறைவேற நாமும் வல்ல நாயனைப் பிராத்திப்போம்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருத்துவக் கட்டுரை**

# சிறுவர்களுக்கு ஏற்படும் கக்குவான் இருமல் நோயும் நிவாரணமும்

(வூப்பிங் இருமல் / பேர்டஸிஸ் - WHOOPING COUGH/PERTUSSIS)


**Dr. ஜலீலா முஸம்மில் (MBBS/SL)**

சிரேஷ்ட வைத்திய அதிகாரி

ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்.






தற்காலத்தில் சிறுவர் முதல் பெரியோர் வரை சுவாச நோய்களின் தாக்கம் அதிகரித்த வண்ணம் உள்ளது. சுவாச நோய்த்தொற்றுகள் உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்கும் ஒரு பொதுவான உடல்நலப் பிரச்சினையாக உள்ளது. பல்வேறு வகையான சுவாச நோய்த் தொற்றுகளைப் புரிந்துகொள்வது, பயனுள்ள தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகளுடன், சுவாச ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு மிக முக்கியமானது.

மனித சுவாசத் தொகுதியில் சுவாசக் குழாய், தொண்டை, மூச்சுக்குழாயின் இரு பிரிவுகள், மூச்சு சிறுகுழாய், மூச்சுச் சிற்றறைகள், புடைச்சவ்வு, புடைக்குழி மற்றும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசத்துடன் தொடர்புடைய நரம்புகள் மற்றும் தசைகள் போன்ற வாயு பரிமாற்றத்தை மேற்கொள்ளும் உறுப்புக்கள் மற்றும் திசுக்களைப் பாதிக்கும் நோயியல் நிலைமை சுவாச நோய்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. சுவாச நோய்கள் சாதாரண சளி, தடிமன் போன்ற சுயமாக கட்டுப்படுத்தும் நோய்களில் இருந்து சுவாசப் பாதை தொற்றுகள், பக்றீரியா நியூமோனியா, நுரையீரல் இரத்தக்குழாய் அடைப்பு, இன்.்ப்ளுவன்ஸா மற்றும் நுரையீரல் புற்றுநோய் போன்ற வாழ்க்கையை அச்சுறுத்தும் நோய்கள் வரை காணப்படுகின்றன.

அந்த வகையில் சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற வூப்பிங் இருமல்/ கக்குவான் இருமல் அல்லது பேர்டசிஸ் இருமல் (Pertussis) எனப்படும் உயிராபத்தை விளை விக்கக்கூடிய நோயைப் பற்றி இந்த கட்டுரையில் காணலாம்.

வூப்பிங் இருமல் என்பது எளிதில் தொற்றக் கூடிய நோயாகும். இது யாருக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம். குறிப்பாக இது குழந்தைகளுக்கு கடுமையான நோயை ஏற்படுத்தும். சில சமயங்களில் இது தீவிரநிலையை ஏற்படுத்தவல்லது. இது எளிதில் தொற்றக்கூடிய சுவாசப் பாதை மற்றும் நுரையீரலைப் பாதிக்கின்ற தொற்று நோயாகும். அதிகரித்த இருமல் வலியை ஏற்படுத்துவதோடு சுவாசத்தை அடைக்கும் பக்டீரியா தொற்றென அறியப்பட்டுள்ளது. சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் கக்குவான் இருமல் அறிகுறிகள் மற்றும் சிகிச்சை பற்றி அவசியம் யாவரும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இது உயிர் ஆபத்தை விளைவிக்க கூடியது.

இந்த நோய் Bordetella pertussis என்ற பக்டீரியாவால் ஏற்படுகிறது. இந்த தொற்று ஒரு கட்டுப்பாடற்ற, கடுமையான இருமலை ஏற்படுத்துகிறது. சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட உலகின் பல பகுதிகளில் இந்த பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் தகவலின்படி, இதற்கான தடுப்பூசி கண்டுபிடிப்பதற்கு முன்பு இதனால் இறப்புக் கூட ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நோயின் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து முறையான சிகிச்சை பெறுவது அவசியம். நோய்த்தொற்று ஏற்பட்ட பிறகு அறிகுறிகள் தோன்றுவதற்கு *5 முதல் 10* நாட்கள் ஆகும்.

**இந்நோய் மூன்று நிலைகளாகப் பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கும்**

*1)* தடிமனோடு மூக்கு ஒழுகுதல் மற்றும் இலேசான இருமல் போன்ற அறிகுறிகள் காணப்படத் தொடங்கும்.

*2)* இருமல் படிப்படியாக தீவிரம் அடைந்து தொடர்ச்சியானதும் கடுமையானதுமான இருமல் இருக்கும். சடுதியில் பெருக்கமடைந்து உருவாகும் திடீர் குறுகிய, விரைவான இருமல்களாக பிள்ளைகளை அது தாக்கும். இருமல் குழந்தைகளின் சுவாசித்தலைக் கடினமாக்குவதோடு கொத்தாக உருவாகியிருக்கும் இருமல், அவர்கள் சுவாசிக்கும்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹூப்' என்ற உரத்த சத்தத்தை ஏற்படுத்தும். குழந்தையின் முகம் இவ்வாறான தீவிரத் தன்மையினால் அடிக்கடி சிவப்பாக மாறிவிடும். தொற்றுநோய் மூக்கிலும் தொண்டையிலும் அதிக அடர்த்தியான சளியை உருவாக்கலாம். தீவிரத்தன்மையுடைய இருமலால் வாந்தியும் ஏற்படும்.

3) குணமடைதலையும் நிவாரண மடைதலையும் உள்ளடக்குகிறது. குழந்தைக்குத் தொடர் விடாப்பிடியான இருமல் காணப்படும். ஆனால் இது இரண்டாம் நிலையைவிட மிகவும் வீரியம் குறைந்ததாக இருக்கும்.

சிறு குழந்தைகளின் மூச்சுக் குழாய்கள் வளர்ந்தவர்களை விட சிறியதாக இருப்பதால் பேர்டஸிஸ் நோய் குழந்தைகளுக்கு மிகவும் கடுமையானதாக இருக்கலாம். பேர்டஸிஸ் நோயுள்ள சிறு குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படும்.

**குணங்குறிகளின் பட்டியல்**

- மூக்கு ஒழுகுதல்
- இருமல்
- காய்ச்சல் (<102 டிகிரி ஃபரனைட்)
- மூக்கடைப்பு
- சிவந்த மற்றும் நீர்நிறைந்த கண்கள்
- காது நோய்த்தொற்றுகள்

ஒரு வாரமோ இரண்டு நாட்களிலோ அறிகுறிகள் மோசமடையலாம்.

**வூப்பிங் இருமலின் தீவிர அறிகுறிகள்**

- கடுமையான நீடித்த இருமல் (விடாப் பிடியான, கடுமையான கொத்துக்களாக உருவாகும் இருமல்)
- இருமும்போது முகத்தில் நிற மாற்றம்
- இருமலுக்குப் பிறகு ஊப் சத்தம்
- இருமலைத் தொடர்ந்து பால், உணவு, அல்லது சளி வாந்தி
- மிகுந்த சோர்வு
- மூச்சு விடுவதில் சிரமம்

**பரவல்**

வூப்பிங் இருமலை ஏற்படுத்தும் பக்டீரியாக்கள் காற்றில் பரவும். பாதிக்கப்பட்ட நபர்கள் இருமும்போது அல்லது தும்மும்போது, அவர்கள் தொற்று பரவக்கூடிய சிறிய துகள்களை வெளியிடுகிறார்கள். நேரடி தொடர்பு மூலமாகவும் அல்லது பாதிக்கப்பட்ட நபருடன் அதே சுவாச இடத்தைப் பகிர்வதன் மூலமாகவும் இவை பரவலாம்.

**பேர்டஸிஸ் நோய்த்தடுப்பு**

தடுப்பூசி ஏற்றுவதன் மூலம் பெரும்பாலும் பேர்டஸிஸ் நோயை தடுக்கலாம். பேர்டஸிஸ்க்கு முழுமையான தடுப்பூசி பெறாத குழந்தைகள் தொற்றுநோய் ஏற்படும் ஆபத்திலுள்ளவர்களாவர்.

டிபிடி தடுப்பூசி (டிஃப்தீரியா, பெர்டசிஸ், மற்றும் டெட்டனஸ்) நோய்களுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை வழங்க உதவுகிறது. பின்வரும் மாதங்களில் குழந்தைகளுக்கு DPT தடுப்பூசி போட வேண்டும்:

2 மாத வயது
4 மாத வயது
6 மாத வயது
வயது 15 - 18 மாதங்கள்
3-5 வயது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பூசியிலிருந்து வரும் நோய் எதிர்ப்பு சக்தி 11 வயது வரை பயனுள்ளதாக இருக்கும். தடுப்பூசி ஏற்றப்பட்டால், நோயெதிர்ப்பு சக்தி (பாதுகாப்பு) காலப் போக்கில் படிப்படியாக குறையலாம். ஊக்குவிக்கும் தடுப்பூசி (Booster dose) ஏற்றப்படாத பெரியவர்களும் தொற்று நோய்க்காளாகி அதைப் பிள்ளைகளுக்குக் கடத்தலாம். எனவே பெரியவர்களுக்கு, தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள பூஸ்டர் ஊசி எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. டிப்தீரியா, டெட்டனஸ் மற்றும் பெர்டசிஸ், இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுவது மட்டுமல்லாமல், நோய் பரவுவதை நிறுத்தவும் உதவுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு, கர்ப்பத்தின் 27-36 வாரங்களில் தடுப்பூசி போட பரிந்துரைக்கப்படுகிறது, இது உங்கள் பிறக்காத குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வழங்க உதவுகிறது.

**சிக்கலான நிலைமைகள்**

பேர்டஸிஸ் நோய், விஷேசமாக சிறு குழந்தைகளுக்கு தீங்கிழைப்பதாக இருக்கலாம். பேர்டஸிஸ் சிக்கல் நிலைமைகளில் நியூமோனியா, சுவாசம் நின்று போதல், வலிப்பு, மற்றும் மரணம் ஆகியவற்றை ஏற்படுத்தலாம். கக்குவான் இருமல் ஆறு மாதங்களுக்கும் குறைவான குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளில் இது மிகவும் ஆபத்தானது. மற்றும் அவசர மருத்துவ பராமரிப்பு அல்லது ICU Care பராமரிப்பு இதற்குத் தேவைப்படும். கக்குவான் இருமல் கர்ப்ப காலத்தில், அடிக்கடி ஏற்படுதல் மற்றும் உயிருக்கு ஆபத்தான



சிக்கல்கள் போன்றவற்றால் குழந்தைகளின் மரணம் கூட ஏற்படலாம்.

மேலும், மூளை இரத்தக்கசிவு, வலிப்பு, நுரையீரல் அழற்சி, நீல நிற மாற்றம், விலா எலும்பு முறிவு அல்லது விரிசல் அடிவயிற்று அல்லது உதரவிதான குடலிறக்கம், சுவாசத்தை நிறுத்தம், கடுமையான நீர்ப்போக்கு, எடை இழப்பு (உணவு கொடுக்க இயலாமை காரணமாக).

**நோய்க்கான ஆபத்துக் காரணங்கள்** (Risk Factors)

- பேர்டஸிஸ் நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்படாமை
- தொற்று நோயால் பாதிக்கப்பட்ட வளர்ந்த பிள்ளைகள் மற்றும் பெரியவர்களுடனான கூட்டுறவு
- குழந்தைகள் தொற்று நோயுள்ள மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் போது மிக விரைவில் நோயால் பாதிக்கப்படலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசோதனை**

குழந்தைக்கு பேர்டஸிஸ் நோய் இருப்பதாக மருத்துவர் சந்தேகிக்கும் போது, மூக்கிலிருந்து வெளியேறும் திரவப் பொருளில் சிறிதளவு சோதனைக்காக எடுத்துக் கொள்ளப்படும். சோதனை முடிவு தெரிய வர 5 முதல் 7 நாட்கள் வரை ஆகலாம். பக்டீரியாவைக் கண்டுபிடிக்க மாதிரி பின்னர் ஆய்வகத்தில் வளர்க்கப்படுகிறது. அதன் தோற்றம் போர்டெடெல்லா பெர்டசிஸ் நோய்க்கான உறுதியான கண்டுபிடிப்பு ஆகும்.

**இரத்த சோதனை:**
முறையான நோய்த்தொற்றுகளின் அறிகுறிகளைக் கண்டறிய இரத்தத்தின் மாதிரி பரிசோதனை (FBC- FULL BLOOD COUNT). பொதுவாக, WBC (வெள்ளை இரத்த அணுக்கள்) எண்ணிக்கையில் அதிகரிப்பு தொற்று இருப்பதைக் குறிக்கிறது.

**மார்பு எக்ஸ்ரே:**
நுரையீரலின் மார்பு எக்ஸ்ரே, நியூமோனியாவின் அறிகுறிகள் அல்லது நுரையீரலுக்குள் திரவங்கள் குவிந்த நிலைமை கண்டறியப்படும்.

**நுண்ணுயிர் கொல்லி (அன்டி பயோடிக்) உபயோகித்து சிகிச்சை:**
மருத்துவர் பேர்டஸிஸ் நோய் இருப்பதாகச் சந்தேகித்தால், பரிசோதனையின் முடிவு வருவதற்கு முன்பே அன்டிபயோடிக் சிகிச்சையை ஆரம்பிக்கும்படி சிபாரிசு செய்யலாம். நோய் ஆரம்பித்த முதல் 3 நாட்களுக்குள்ளேயே, அன்டிபயோடிக் சிகிச்சையை ஆரம்பித்தால் அது



மிகுந்த பலனைக் கொடுக்கும். அன்டிபயோடிக் சிகிச்சை முறை மருந்துகளை முழுமையாக உட்கொள்ள வேண்டும். தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக உங்கள் குழந்தையுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர்களும் அன்டிபயோடிக் மருந்துகள் எடுத்துக் கொள்ள வேண்டப்படுகிறார்கள்.

**முன்னெச்சரிக்கைகள்**

நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க நிறைய ஓய்வெடுக்க வேண்டும்.

தேவைப்படும் போது சிறிதளவு உணவை உண்ணுவதும் நல்லது, இது தொடர்ச்சியான இருமல் காரணமாக வாந்தியைத் தடுக்க உதவும்.

சுத்தமான காற்றை சுவாசிக்கவும், உங்கள் சுற்றுப்புறங்களை தூசி, புகை போன்றவற்றில் இருந்து சுத்தமாக வைத்திருக்கவும். அது நோயை மோசமாக்கும்.

**சேலைன் கரைசல்**

மூக்கிலும் தொண்டையிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியுள்ள சளியை அகற்ற உதவி செய்வதற்காக, மூக்கு சம்பந்தமான சேலைன் கரைசல் உபயோகித்தல்.

உங்கள் குழந்தை உறங்கும் நிலைமையையும் சரி செய்ய வேண்டும். வசதியற்ற மற்றும் சுவாசத்தை சிக்கலாக்குகின்ற உறக்க நிலைகள் மாற்றப்பட வேண்டும்.

துப்புதல் மற்றும் வாந்தி எடுத்தலைக் குறைப்பதற்காக உங்கள் குழந்தையை, பாலூட்டுவதற்கு முன்பும் பாலூட்டிய பின்பும் செங்குத்தாகத் தூக்கிப்பிடிக்கவும். இந்த நிலை சுவாசித்தலையும் இலகுவாக்கும்.

அடிக்கடி சிறிய அளவில் பானங்களை பருகிக் கொண்டே யிருக்கும்படி உங்கள் குழந்தையை உற்சாகப்படுத்துங்கள். தண்ணீர் சாறு வகைகள் போன்ற திரவங்கள் பயன்படுத்தப்படலாம்.

உங்கள் குழந்தை வாந்தி யெடுப்பதாக இருந்தால் உடலில் நீரேற்றம் குறைவுபடாதபடி பார்த்துக் கொள்வது முக்கியம். பாலூட்டப்படும் குழந்தைகள் தொடர்ந்து பாலூட் டப்படவேண்டும்.

புகை சூழ்ந்துள்ள இடங்களைத் தவிர்த்திடுங்கள்.

உங்கள் பிள்ளையை புகை சூழ்ந்துள்ள இடங்கள் மற்றும் எரிச்சலூட்டக்கூடிய சுற்றுப்புறங்களில் வைத்திருப்பதைத் தவிர்க்கவும். சிகரெட் புகை இருமலை மேலும் மோசமானதாக்கலாம்.



பின்வரும் நிலைமைகள் இருந்தால் உங்களுக்கு மிகவும் அண்மையிலுள்ள அவசர சிகிச்சை நிலையத்துக்குச் செல்லவும்.

- இருமலினால் குழந்தையின் முகம் நீல நிறமாக மாற்றமடைதல் அல்லது பிள்ளை சுவாச நிறுத்தம்.
- இருமல், சுவாசச் சிரமம். வேகமான சுவாசம்.
- குழந்தை எந்தவொரு பிரதிபலிப் பையும் காண்பிக்காது அல்லது உற்சாகமற்று (சோம்பலாக) காணப்படுதல், மற்றும் சோர் வடைதல்.
- குழந்தை வலிப்பு நோயால் பாதிக்கப்படுதல் (நிறுத்த முடியாத படியாக உடம்பு தொடர்ச்சியாக குலுங்கிக் கொண் டேயிருத்தல்)
- குழந்தை பானம் எதுவுமே குடிக்கவில்லை, அதிகரித்த வாந்தி, உடலின் அதீத நீரிழப்பு.
- குழந்தைக்கு காய்ச்சல் உச்ச நிலைக்கு ஏறிச்செல்லுதல்

இவ்வாறான சந்தர்ப்பங்களில் குழந்தையை அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும். வைத்தியரின் அவசரமான சிகிச்சை குழந்தைக்கு அவசியமாகும்.

**நன்றி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப் பார்வை

*வெண்ணிலா 17ஆவது இதழ் மீதான சிறப்புப் பார்வை.*

# வண்ணப் பூச்சூடவா வெண்ணிலா!

கவிஞர் எஸ். ஏ. கப்பார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் வெண்ணிலாவின் 5வது ஆண்டில் 17வது இதழ் தற்பொழுது வெண்ணிலா அபிமானிகள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சந்தாதாரர்கள் என இலக்கிய உள்ளங்களின் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் இவ் வேளையில் வெண்ணிலாவைப் பற்றியதொரு சிறப்புப் பார்வையை நோக்குவது பொருத்தம் என நினைக்கிறேன்.




வெண்ணிலா 17வது இதழின் அட்டைப் படத்தை கலாஜோதி பீ. ரீ. அஸீஸ் அவர்களின் புகைப் படம் அலங்கரிக்கிறது. உள்ளே ஆசிரியர் பக்கத்தை நோக்கும் போது ஏனைய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது சஞ்சிகை ஆசிரியரின் கவனம் ஏனைய இரண்டு சஞ்சிகைகளின் மீது திரும்பி இருப்பது ஆசிரியரின் அபிமானத்தையும், அவற்றின் மீது ஆசிரியருக்கு இருக்கும் ஆர்வத்தையும் தெளிவாகக் காட்டுகிறது.

ஆம், ஈழத்தின் வடகிழக்கிலிருந்து க. பரணீதரன் அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் **ஜீவநதி**யைப் பற்றிச் சொல்லி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார். ஏனெனில் ஜீவநதி இதழுக்கு 2024ம் ஆண்டு சாதனையாண்டாக அமைந்துள்ளது. அது 12 மாத இதழ்கள் 10 ஆளுமைச் சிறப்பிதழ்களை வெளியிட்டிருக்கிறது. ஒவ்வொரு மாத இதழுடனும் இவ்விரண்டு இதழ்கள் கிடைத்து வருவதை வாசகர்கள் அறிவார்கள். அதில் ஒன்று பொதுவாகவும், மற்றது சிறப்பிதழாகவும் வெளிவருகிறது. இது ஆசிரியர் க. பரணீதரனின் அயராத உழைப்பின் வெளிப்பாடு. மேலும் 3 ஆவணச் சிறப்பிதழ்களை அது வெளியிட்டிருக்கிறது மட்டுமல்லாமல் 111 நூல்களை ஜீவநதி பதிப்பகம் வெளியீடு செய்து

**கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை படைத்துள்ளது. 44 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை உள்ளடக்கிய சிறுகதைச் சிறப்பிதழ் ஒன்றினையும் அது வெளியிட்டிருக்கிறது.

அதே போன்று கடந்த 25 வருடங்களாக வெளிவந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும் கலை இலக்கிய மாத சஞ்சிகையான **ஞானம்** சஞ்சிகையைப் பற்றியும் குறிப்பிட்டு அதன் பிரதம ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன், இணை ஆசிரியர் திருமதி ஞானம் ஞானசேகரன், நிருவாக ஆசிரியர் ஞானம் பாலச்சந்திரன் ஆகியோரின் முயற்சிகளைப் பாராட்டி வாழ்த்தியிருக்கிறார். ஞானம் சஞ்சிகையும் பல சிறப்பிதழ்களை வெளியீட்டு வருகிறது என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். குறிப்பாக 'ஈழத்துப் புலம் பெயர் இலக்கியம்' என்ற ஓர் இலக்கிய வகையை அறிமுகப்படுத்திய பெருமை ஞானம் சஞ்சிகையையே சாரும். பன்முக ஆளுமை கலாஜோதி கலாபூஷணம் பி. ரீ. அஸீஸ் அவர்களைப் பற்றிய அட்டைப்படக் கட்டுரையை எழுத்தாளர் ஏ. எம் ஹஸ்புள்ளா அவர்கள் எழுதியுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னரே கிண்ணியா மண் சிறப்புப்பெற்று வருகிறது என்பதை அங்கு வாழும் கலை வடிவங்கள் நிரூபிக்கின்றன. இக்கலை வடிவங்கள் உயிர்ப்புப் பெறுவதற்கும், வெளியுலக மக்கள் அறிவதற்கும் கலாஜோதி பி. ரீ. அஸீஸ் அரும்பணியாற்றுவதை பாராட்டாமல் இருக்க முடியாது. அவரது இலக்கிய செயற்பாட்டை கௌரவிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட 50 ஆண்டுகள் கடந்த பொன் விழா சிறப்புப் பெறுகிறது. அதே வேளை கலை இலக்கியத்தின் மூலம் சிறந்ததொரு சமுதாயக் கட்டமைப்பை உருவாக்குவதில் பன்முக ஆளுமை கொண்டவராக அவர் காணப்படுகிறார்.

கவிதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், திறன் நோக்கு என பல்வேறு வகையான இலக்கியச் சேவைகளைச் செய்துவரும் ஒரு தலை சிறந்த எழுத்தாளராக இருவரை 19 நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

2023-12-03ம் திகதி கிழக்கு மாகாண ஆளுனர் திரு. எஸ். தொண்டமான் அவர்கள் விருது வழங்கி கௌரவித்திருக்கிறார். இவர் 50 எழுத்தாளர்களின் படைப்புகளை திரண் நோக்கி **முதுமையில் விளைந்த புதுமைகள்** எனும் நூலையும் **மர்ஹூம் அண்ணல் கவிதைகள்** என்ற நூலையும்



**கலாபூஷணம்**
**மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டு கிண்ணியா மண்ணுக்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

1974ம் ஆண்டு 'பேசும் தெய்வம்' என்ற தலைப்பில் சிறுவர் பாடல் ஆக்கம் தினகரனில் வெளிவந்ததைத் தொடர்ந்து இலக்கிய உலகுக்குள் நுழைந்தார். அலை ஓசை இருமாத தட்டச்சு இதழுக்கும், முத்துக்கள் கையெழுத்துப் பத்திரிகை 1980, 1981 இதழுக்குப் பொறுப்பாசிரியராகவும் கவிதைச் சரம் மாத இதழுக்கு துணை யாசிரியராகவும் பணியாற்றியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர், 2011 முதல் 2014 வரையிலான ஆண்டுகளில் பல்வேறு வகையைச் சேர்ந்த 21 நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுக்கான நூற் பரிசுகளையும், 2023ம் ஆண்டு சரச்சந்திர ஐயகொடி தேசிய விருது, தேசிய கலை இலக்கிய விருது, மாகாண மாவட்ட பிரதேச விருதுகளையும் 2013ம் ஆண்டு அரச கலாபூஷண தேசிய விருது உட்பட இன்னும் பல விருதுகளையும் பெற்றுள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அடுத்து இதழில், தடம்பதித்த மூத்த கவிஞர்கள் பகுதியில் அஷ்ரபா நூர்தீன் அவர்களது கவிதை ஒன்றும், 'இதுதான் வெண்ணிலா' என்ற தலைப்பில் சம்மாந்துறையைச் சேர்ந்த கவிஞர் அலியார் T.O. அவர்களின் வெண்ணிலா பற்றிய கவிதை ஒன்றும் சிறப்புக் கவிதையாக இடம் பெற்றிருக்கிறது. அதேவேளை நான் (கலாபூஷணம் மாவனல்லை எம்.எம். மன்ஷூர்) வெண்ணிலாவின் இதழ் 16 பற்றிய சிறப்புப் பார்வைக் கட்டுரையை ஆசிரியர் கவிஞர் எஸ்.ஏ. கப்பார் அவர்கள் பதிவிட்டிருக்கிறார். மிக்க நன்றிகள்.

மற்றும் துணிந்தெழு சஞ்சிகை ஆசிரியர் குழு உறுப்பினர்களில் ஒருவரான கவிப்பொய்கை ஜவ்ஸான் அஹமட் அவர்கள் தமிழுக்குத் தொண்டு செய்த காலஞ் சென்ற கவிஞர் பிரமிள் பற்றிய அரிய பெரிய தகவல்களைத் தனது கட்டுரையில் மிகமிகச் சிறப்பாக பதிவிட்டிருக்கிறார். கவிஞர் பிரமிள் 1939ம் ஆண்டு திருகோணமலையில் பிறந்து இந்தியாவின் தமிழகத்தில் 1959ம் ஆண்டு முதல் வாழ்ந்து தனது 57வது வயதில் 1997ல் மறைந்த, புகழ் பெற்ற எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இதழில் மூன்று நூல்களைப் பற்றிய நயவுரைகள் இடம் பெற்றுள்ளன. வெலிகம ரிம்ஸா முஹம்மதின் 'பிஞ்சுமனம்' பற்றிய நூலினை சுமைரா அன்வர் அவர்களும், மூதூர் முகைதீன் அவர்களின் 'வண்டில் மாமா'வை மூதூர் றிஸ்வின் அவர்களும், மருதமுனை கவிஞர் மலீஸ் அமீன் அவர்களது 'மொழியின் சுவாசம்' என்ற நூலை பேராசிரியர் அ. சுமதிமணி அவர்களும் தமது நயவுரைக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எழுத்தாளரும் கவிஞருமாகிய டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களது 'மஞ்சள் மாம்பூ' ஹைக்கூ கவிதை நூல் கடந்த 21.02.2025 அன்று ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம். எச். எம். ஹமீம் தலைமையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறாவூர் வாவிக்கரைப் பூங்காவில் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வுக்கு நகர பிரதேச செயலாளர் எம். எச். முஸம்மில் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு செங்கலடி பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் எச். எம். மௌஜூத், வைத்திய அதிகாரி டாக்டர் ஜலீலா முஸம்மில், கவிஞர்கள். இலக்கிய ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வின் புகைப்படங்கள் வெண்ணிலாவின் ஒளியில் பிரகாசிக்கின்றன.

மேலும் இதழில் ஆறு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. டீன் கபூரின் 'கொட்டார்ர சந்தியின் கதை', எம்.எஸ்.எம். ஜமீலின் 'ஆறாத நெஞ்சம்', மருதமுனை முஸத்திக் ஜே. முஹம்மதின் 'அஸ்தமிக்கின்ற ஆசைகள்', கலாபூஷணம் கிண்ணியா சபீனாவின் 'சிறகிழந்த பறவை', பன்னூலாசிரியர் ஏ.ஆர்.ஏ. சத்தாரின் 'எனது அலமாரி', கஸ்புள்ளாவின் 'வாப்பாவின் துவா' என்ற சிறுகதைகளே அவை.

'கொட்டார சந்தி' காலமாற்றத் திற்கேற்ப வளர்ச்சி கண்டு நவீன காலத்துக்கு ஏற்றவாறு மாற்றங்கள் பெற்று புதுப் பொலிவுடன் காணப்பட்டாலும் கடந்த கால எண்ணங்களும் நினைவுகளும் மக்கள் மனங்களில் இருந்து இன்னும் மாறவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மதமாற்றத்தின் மனமாற்றத்தால் வந்த வினை தாபரிப்பு வழக்கு வரை நீதி மன்றத்தில் அவளை நிற்க வைத்தது. நீதிக்கு ஏற்றவாறு காரணங்கள் சோடிக்கப்பட்டு வழக்கு தாபரிப்புச் செலவுக்கான தீர்ப்பைப் பெற்றிருந்ததால் அப்பணத்தைப் பெற நீதிமன்றம் சென்றிருந்தாலும் அவளது உண்மையான கணவன் மீதான அன்பை வெட்டிச் சாய்த்து விட்டதை 'ஆறாத நெஞ்சம்' எடுத்துக் காட்டுகிறது.

'அஸ்தமிக்கின்ற ஆசைகள்' என்ற சிறுகதையானது இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்படும் விருப்பு வெறுப்புகளையும் காதல், உறவு, பிரிவு என்ற தன்மைகளில் சிக்கி முடிவுகாண முடியாத விரிவாக்கம் பெற்று பவித்திராவுக்கும் முகுந்தனுக்கும் இடையில் ஏற்பட்ட காதல் உறவுகள் விதி வசத்தால் பிரிவுக்கு உட்பட்டு அவரவர்களின் விதியின்படி திருமண வாழ்க்கை அமைகின்றது. அவர்களது பிள்ளை களும் காதல் கலியாணம் என்று சென்று இறுதியில் இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் பிள்ளைகளின் மூலம் ஒன்று சேரும் தருணத்தில் முகுந்தனின் பிரிவு எல்லோரையும் சோகத்தில் ஆழ்த்த வல்லதாக முடிவு பெறுகிறது.

இதே போன்று 'சிறகிழந்த பறவை'யானது ஒன்றை ஒன்று பிணைந்த இரு அன்பு உள்ளங் களின் ஆசாபாசங்கள் நடந்தேறும் போது குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. என்றாலும் விதி வசத்தால் ஒன்றை ஒன்று பிரியும் போது ஏற்படும் துயரத்தை பகிர்வதற்கு பாதை இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு நல்லதொரு உதாரணம்.

பன்னூலாசிரியர் ஏ. ஆர். ஏ. சத்தார் அவர்களின் 'எனது அலமாரி' என்ற சிறுகதை அன்றைய சங்கதிகளை அறியாத புதிய வாரிசுகளாக இருப்பவர்களுக்கு காலத்தைப் பின்னோக்கிப் பார்ப்ப தற்கு நல்லதொரு வாய்ப்பாக இருக்கிறது.

வலிமையுள்ளவன் எதனையும் சாதித்து தனது ஆளுமைக்குள் கொண்டுவருகின்றான் என்றாலும் பாதிக்கப்பட்டவர்கள் படைத்தவனில் உதவியை நாடி நிற்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற உண்மையை ஹஸ்புள்ளாவின் 'வாப்பாவின் துஆ' என்ற சிறுகதை எடுத்துக் காட்டுகிறது.

மேலும் இதழில் 'விளங்கின் கீழ்' என்ற எனது மொழி பெயர்ப்புக் கவிதை ஒன்றும் சேர்த்துக்கொள் ளப்பட்டிருக்கிறது. வெண்ணிலாவில் உலா வரும் போது வாசகர்கள் கண்டுகொள்ளலாம்.

மஞ்சரி கவிதைகள் பக்கத்தில் வெலிகம ரிம்ஸா முஹம்மதின் 'சோக மூட்டைகள்', தியதலாவ எச். எப். ரிஸ்னாவின் 'காலப் பெருவெளி', ஹஸீனா ஆதம்பாவாவின் 'கண்ணிய மாய் கற்றிடு' மற்றும் 'குதூகலிக்கின்றோம்', கம்பளை மாஹிரா ஹமீட் அஸ்ஹரின் 'தலையாய கடன்', கம்பளை இமையியின் கவிதை, கலாபூஷணம் மருதூர் ஜமால்தீனின் 'வெண்ணிலா ஒரு வெண்பா', புதுக்குடியிருப்பு அலெக்ஸ் பரந்தாமனின் 'வடிவம் பெறுமொரு கவிதை', கிண்ணியா சபீனாவின் 'வருக்க மோனையில் அமைந்த பாடல்' ஒலுவில் நழீம் ஹனீபாவின் 'பாதை மாற்றும் போதை' என்ற பத்துக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

படித்தவற்றில் பிடித்தவை பகுதியில் இந்தியாவைச் சேர்ந்த கோபி கோபிகையின் 'காதலி' என்ற கவிதையும், எழுகவியின் 'ஆற்றில் நனைந்த ஆட்டுக்குட்டியாய்' என்ற கவிதையும் இடம்பெற்று வெண்ணிலாவைச் சிறப்பிக்கின்றன.

இது தவிர ஓய்வு நேரங்களைப் பயனுற எப்படி கழிப்பது என்பது பற்றி கிண்ணியா ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான் சிறந்ததொரு கட்டுரையைத் தந்திருக்கிறார். ஒலுவில் நழீம் ஹனீபாவின் 'நகைச்சுவை' என்ற கட்டுரையும், டாக்டர் ஜலீலா முஸம்மிலின் 'பித்தப்பைக் கற்களும் நிவாரணமும்' என்ற மருத்துவக் கட்டுரையும் நாமும் அறிவோம் பகுதியில் 'பனிக்கரடி' பற்றிய கட்டுரையும் இதழுக்கு மெருகூட்டுகின்றன.

முழுவதுமாக 96 பக்கங்களில் பல்சுவை ஆக்கங்களைத் தந்துள்ள வெண்ணிலாவில் உங்களிடமிருந்து... பகுதியில் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா சரிபுத்தீன் அவர்களின் நன்றி நவிலலும், பிரபல எழுத்தாளர், நாடறிந்த ஒலிபரப்பாளர், சஞ்சிகை யாளர் அஷ்ரப் சிஹாப்தீன் அவர்களினதும் ஏ. எம். ஹஸ்புள்ளா அவர்களினதும் வெண்ணிலா பற்றிய பார்வைகளும் காணப்படுகின்றன.

**- வாழ்த்துக்கள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கதை | ஏ. எம். கஸ்புள்ளா | 1

# நீ வாசிக்க மறந்த வரிகள் நான்



மணல் பரப்பிய உப்பாறு கடற்கரை நேற்று பெய்த மழையால் வெள்ளப் பெருக்கத்கெடுத்து கடற்கரைகளும் கடலாக மாறிக் கிடந்தது. இளைப்பாற பலரும் வந்து போகுமிடம் இவ்வாறு காட்சியளித்தது மனசுக்குள் கவலைதான். அங்கு வந்தவர்கள் எல்லோரும் வேறு இடங்களைப் பார்க்கலாமென திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர்.

கண்டல் காடுகளும் முயல் படுத்துறங்கும் பற்றைகளும் கொண்ட பசுமையான இடமல்லவா அது. இன்று மனிதர்கள் மட்டுமல்ல மாவலி பாய்ந்தோடிவந்து ஓய்வெடுக்கும் கொட்டியாரக்குடாவும் சோபை இழந்து நின்றன.

ஊரின் வனப்பைக் காட்டவென தன்னுடன் படித்த பல்கலைக் கழக நண்பர்களான சரத், தீபன், மதுமிதா, ரஜிவன் ஆகியோரை விடுமுறைக்காக வீட்டுக்கு அழைத்து வந்த சாதீர் அவர்களையும் அந்த இடத்தைப் பார்ப்பதற்கு அழைத்து வந்திருந்தான். மழைபெய்ததால் அந்த இடம் சீரற்றிருப்பதை உணர்ந்து அங்கிருந்து அவர்கள் பளிங்குக் கடற் கரையைப் பார்வையிடப் புறப்பட்டனர். போகும் வழியில் கிண்ணியா தெருக்களில் விற்பனைக்காக வைக்கப்பட்ட பனங்கிழங்கு, சோளக்கதிர், கச்சான் என்பவற்றை வாகனத்ததை நிறுத்தி வாங்கிக் கொண்டனர். பளிங்குக் கடற்கரை வந்ததும் இங்குள்ள அழகான அமைதியான சூழல் அவர்களை கவர்ந்தது. இதுதான் எங்களது முதல் விஜயம் என்று நண்பர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். சரத்திற்கும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்திருந்ததால் மொழிபெயர்ப்புத் தேவைப்படவில்லை.

இலங்கையில் பார்ப்பதற்கு எவ்வளவு இடமிருந்தாலும், திரு கோணமலை முக்கிய தளமாக இடம்பெறுவதற்குக் காரணம் அதன் இயற்கை அமைப்புத்தான். மேலும் அந் நகரம் பொருளாதாரத்தின் கேந்திர நிலையமாகவும் கடல்வழி போக்குவரத்திற்கு பாதுகாப்பாகவும் அமைந்துள்ளது என்று மதுமிதா திரு கோணமலையைப் பற்றி புகழ்ந்தாள். அவள் புகழ்வதை சந்தோஷமாக சாதீர் உள்வாங்கிக் கொண்டான். "ஆமாம்! மச்சான் திருகோணமலை வேற லெவல்" - சரத்தும் வாய் திறந்தான். தீபனும் ரஜிவனும் பேசாமல் இருந்ததை அவதானித்த மதுமிதா "என்ன நீங்க ரெண்டுபேரும் ஒன்றுமே சொல்லாமல் இருக்கிறீங்க" எனக்கேட்டபோது...

"எப்படிச் சொல்வது? இது 'எனது தாய் பூமி' என தீபனும் 'என் தந்தையின் பிறப்பிடமும் இதுதான்' என்று ரஜிவனும் சொன்னார்கள்." 'இவ்வளவு நாளும் இந்த விசயம் பற்றி இருவரும் சொல்லவே இல்லையே' என சாதீர் கேட்டான். "சொல்லும் நிலையில் அப்போது எங்கள் மனநிலை இல்லை. அவர்களின் பிரிவிலிருந்து எங்களுக்கு மீள முடியாத கவலைகள் எங்களுக்குள் இருந்து கொண்டே இருந்தன. வந்து பலருடன் பழகிய பின்னர்தான் அதிலிருந்து சின்னதாய் மாற்றம் ஏற்பட்டது" என்று தீபன் தன் அம்மாவைப் பற்றி சொல்லத் தொடங்கினான்.

"என் அம்மா சம்பூரைப் பிறப்பிட மாகக் கொண்டவங்க, நாட்டில் ஏற்பட்ட கலவரம் காரணமாக இடம்பெயர்ந்து நுவரெலியாவுக்கு வந்து அங்கு வாழ்வை அமைத்துக் கொண்டார்கள். நிலைமை சீராகி வருகிறது என நினைத்து 'நான் மட்டும் போயி வீடு, காணியெலாம் பார்த்திட்டு வாரேன்' என்று சொல்லி ஊருக்குப்போனாங்க. அங்கு திடீரென பிரச்சினை மீண்டும் உருவெடுத்தது. அன்றைய செல்லடி தாக்குதலுக்குள் அகப்பட்டு அம்மா சடலமாகத்தான் வீடு வந்து சேர்ந்தார்கள்." தொடர்ந்து ரஜிவனும் சொல்லத் தொடங்கினான். "எங்கட அப்பா திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் சின்னவயதிலே பெற்றோரை இழந்து உறவு சனத்திடம் வளர்ந்து வந்தார். பின்னர் குறிப்பிட்ட வயதாகிட கொழும்புக்கு வந்து தொழில் மற்றும் வாழ்க்கையென நீண்ட காலம் வாழ்ந்து வந்தார். ஒருநாள் தன்னை வளர்த்த உறவுகளை ஒருக்கா போயி பார்த்து வருகிறேன் என்று சொல்லிப்போனவர் திரும்ப வரவில்லை. எல்லாரிடமும் விசாரித் துப் பார்த்திட்டோம். இப்போ வரைக்கும் இருக்காரா இல்லையா? என்ற தகவல்கள் ஒன்றுமில்லை. காணாமல் போனவர்கள் பெயர் பட்டியலில் மட்டும்தான் இன்னும் அவருடைய பெயருள்ளது."

அவர்கள் இருவரின் வாயிலிருந்து வெளிவந்த 'அந்த வார்த்தைகள்' எங்களின் கண்களையும் நனைத்தன. அவர்களது கதையை கேட்டபின் நிலவிய சிறு அமைதியோடு "எல்லாருக்கும் சரியாகப் பசிக்கும் வாங்க சாப்பிடுவோம்" என அவர்கள் கவனத்தை திசை திருப்பிய சாதீர், காலையில் தன்னுடைய வீட்டிலிருந்து சமைத்துக் கொண்டு வந்த சாப்பாட்டை நண்பர்களுக்குப் பரிமாறினான். எல்லாரும் சாப்பிட்டு முடிந்ததும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க வேண்டிய பட்டியலில் உள்ள அடுத்த இடம் சுடுதண்ணி கிணறு என அழைக்கப்படும் 'கன்னியா வெந்நீருற்று' நோக்கி பயணித்தார்கள்.

இங்குதான் ஏழு வகையான சுடுதண்ணி கிணறுகள் உண்டு. ஒவ்வொரு கிணறும் வெவ்வேறு விதமான சூட்டைத் தந்து நிற்கும். இதுவொரு இயற்கையான வெந் நீரூற்றாகும். தமிழ் மக்களது வரலாற்றின்படி, பத்துத்தலை படைத்த 'இராவணன்' தனது தாயாருக்கு இறுதிக் கிரியைகள் செய்வதற்காக உடைவாளை உருவி ஏழு இடங்களில் குத்தியதாகவும் அந்த இடங்களில் இந்த வெந்நீர் ஊற்று உருவாகியது என வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

கன்னியாவில் உள்ள ஏழு வெந்நீருற்று பற்றி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய பாடல் எங்களது பழைய தமிழ் பாடத்திட்டத்தில் உள்ளது. இந்தக் கிணற்றின் சூடு பற்றி அழகாக அவர் பாடியுள்ளார். எனக்கு இப்போதும் ஞாபகமிருக்கிறது. சொல்கிறேன், கேளுங்க.

**காதலனைப் பிரிந்தவளின் மனம்போல ஒன்று**
**கவிபாடி பரிசு பெறான் மனம்போல ஒன்று**
**தீது பழி கேட்டவன் தன் மனம்போல ஒன்று**
**செய்த பிழைக் கலங்குபவன் மனம்போல ஒன்று**
**நீதி பெறா வேழைதுயர் மனம்போல ஒன்று**
**நிறை பழித்த கற்புடையாள் மனம்போல ஒன்று**
**காது மழுக்காறுடையாள் மனம்போல ஒன்று**
**கனலேறு மெழு நீர்கள் உண்டு கன்னி யாயில்,**

சாதீர் சொல்லி முடித்ததும், மச்சான் 'உனக்கு நல்ல பவர்புல் மெமரி' பாடலை அழகாக சொல்லிட்டியே! தமிழ்ப்பாடம் கற்பித்த ஆசிரியரைப் பொருத்துத்தான் அந்தப் பாடத்தின் மீது அதிக விருப்பம் உண்டாகியது. சரி வாங்க, குளிக்க விருப்பமுள்ளவர்கள் வாங்க குளிக்கலாம் என சாதீர் அவர்களை அழைப்பு விடுத்து நண்பர்கள் குளிக்கும் வரை வெந்நீருற்றுப் படியில் அமர்ந்து காத்திருந்தான். வெந்நீருற்று குளியல் முடிந்ததும் புராதன திருகோணமலை கோட்டையை நோக்கி வேன் சென்றது. எங்கள் வாகனம் வீதியை குறுக்கறுத்துச் செல்லும்போது சின்னச் சின்ன புள்ளிமான்கள் துள்ளிக் குதித்து ஓடின. அது எங்களை வரவேற்பது போன்ற உணர்வொன்றை சின்னதாய் ஏற்படுத்திச் சென்றது.

"பழைய கலையம்சங்களுடன் தொழில்நுட்பம் குறைந்த காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் இன்னும் பிரமிக்கச்செய்கின்றன. இன்றைய தொழில்நுட்பங்களை தூக்கிச்சாப்பிடும் அளவுக்கு அக்காலத்தில் அறிவுத்திறன் எந்தளவுக்கு உயர்ந்துள்ளது என ஒவ்வொரு கட்டடமும் சாட்சியாக இருக்கிறது இல்லையா?" - தீபன் நண்பர்களிடம் சொல்லி வியந்தான்.

"உண்மைதான் தீபன். இந்த ஆயுதங்களைப் பாரு. பிரித்தானிய காலணித்துவத்தின் கீழ் திருகோணமலை இருந்தபோது அவர்கள் கையாண்டவை. இப்படி நிறைய விடயங்கள் இங்கு காணப்படுகின்றன. இவையெல்லாம் முழுதாகப் பார்த்திட இரண்டு நாள் சரி வேண்டும்" என மதுமிதாவும் சொன்னாள்.

அருகில் கோணஸ்வரக் கோயிலும் அதன் கீழே கடலுமென தூரமிருந்து பார்த்தால் கடலின் மேலே நிமிர்ந்து நிற்பதுபோல அந்தக் கோயில் கண்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி தரும். இலங்கை மன்னன் இராவணனை ஞாபகப் படுத்தும் இராவணன் வெட்டு என்கிற மலையை வெட்டி பிளந்ததுபோல இருக்கும் காட்சியதனை பார்க்க எத்தனையோ கூட்டம் கூட்டமாக வாகனத்தில் வந்திறங்கிக் கொண்டிருப்பதும் எதைப் பார்ப்பதென உள்ளம் ஒரு பக்கம் தத்தளிக்க, பார்க்கக்கூடிய சில இடங்களைச் சுருக்கிக் கொண்டு புறாமலை பார்க்க ஆயத்தமானோம்.

புறாமலை கடலுக்குள்ளே தீவாகவுள்ள இடம். கல்மலையும் அதைச்சுற்றி காடுகளும் கொண்ட நிலாவெளி எனும் ஊருக்குச் சொந்தமான உல்லாசப் பயணி களைக் கவர்ந்த இலங்கையின் வருமானத்திற்கு முக்கிய பங்களிப்புச் செய்கின்ற அழகு மிகுந்த பூமியாகும்.

நமக்கும் இந்தப் பயணத்தில் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது மட்டில்லா சந்தோசம்தான். நண்பர்கள் பேசிக் கொண்டார்கள். பின்னர் படகில் ஏறி புறாமலைத் தீவை அடைந்தோம். இங்கும் சமையல் ஒரு பக்கம், குளியல் இன்னொரு பக்கமென கூட்டம்.

சந்தோச களைகட்டிக் கொட்டிக் கிடந்தது. அந்த இடத்தை விட்டுப்பிரிய மனமின்றி பாதியிலே நேரம் இடம் கொடுக்காமல் படகேறி வீட்டுக்கு திரும்பும் வழியில் சீனக்குடா இயற்கைத் துறைமுகத்தையும் பார்க்க நேரம் இடம் கொடுக்காமல் நண்பர் சாதீரின் வீடு திரும்பினோம்.

மறுநாள் அவரவர் வீடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை இரவோடு இரவாகச் செய்து விடிகாலையில் ஊருக்குச் செல்வ தற்காக பஸ் நிலையம் வந்து சாதீர் அவர்களை வழியனுப்பி வைத்தான். பல்கலைக்கழக படிப்பு முடிந்த பின் அதுவே அவர்களது கடைசிச் சந்திப்பாக இருந்தது. காரணம் வேலைகிடைத்து ஒவ்வொருவரும் தனிப்பட்ட வாழ்வில் இணைந்து கொண்டார்கள். காலங்களும் கடந்தே போயின.

சாதீர் சுயதேவை நிமித்தம் ஒருநாள் தலைநகரம் கொழும்புக்கு சென்றிருந்தான். தனது தேவைகளை நிறைவேற்ற வேண்டிய இடத்தில் இருந்து போய் வருவது தூரமா கையால் ஓய்வெடுத்துச் செல்ல வாடகை அறையில் தங்கிருந்தான். அன்று மாலைநேரம் வெளியே வந்தவன் கடையில் தனக்கான பொருட்களை வாங்கி வரும் வழியில் ஒருவர் மூட்டையுடன், அங்குமிங்குமாக அலைவதைக் கண்டு பரிதாபப் பட்டான். அந்த மனிதரோ முகம் தெரியாதளவுக்கு முழுதும் முடி வளர்ந்து தாடியுடன் சேர்ந்து யாரென அடையாளம் கண்டு கொள்ள முடியாத நபரான அவருக்கும் ஒரு உணவுப் பார்சலை வாங்கிக்கொண்டு அவரது கையிலே கொடுத்தான். வாங்கியதும் "தைங்யூ" என்ற வார்த்தையை அந்த மூட்டை சுமந்தவர் சொன்னார்.

அந்த வார்த்தையைக் கேட்ட சாதீர் சற்று அதிர்ந்து போனான். அந்த வார்த்தை ஏற்கனவே பல தடவை கேட்டுப் பழகிப்போன வார்த்தையல்லவா? அதனால் அவரது அருகிலே நெருங்கி மீண்டும் அவன் அவரிடம் கதைகொடுத்த போது பல்கலைக்கழக சகோதர இன 'சிங்கள நண்பன்' சரத் என அடையாளம் கண்டு அவனைக் கட்டித் தழுவி உடனே தானிருக்கும் அறைக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முன்னர் அவனுக்கு வந்திட்ட இந்த நிலையை அங்கிருந்தவர்களிடம் விசாரித்தான். இவர் வேலைக்குப் போனபின் வேறொருத்தருடன் தொடர்பாகி இவரது மனைவி ஓடிவிட்டார். அதிலிருந்து மனசை விட்டிட்டார். எல்லாருடனும் நல்லா பழகிய மனிதர். அவரும் அவரது மனைவியும் ஒரே ஊர்தான். வேலை கிடைத்ததும் இங்கு வாடகைக்கு வீடெடுத்து நீண்ட காலம் வாழ்ந்து வந்தார்கள். கடைசியில் அவள் இப்படிச் செய்திட்டாள். "அந்தப் பெண்தான் சரியில்லை", விசாரித்தபோது அவர்கள் இந்த விடயத்தைச் சாதீரிடம் சொன்னார்கள்.

சரத்தின் நிலையை தெரிந்து கொண்ட சாதீர் அவனை ஒரு சலூன் கடையில் சவரம் செய்ய அழைத்துச் சென்று அங்கிருந்து தனது அறைக்கும் அழைத்துச் சென்றான். இது பற்றி நண்பர்கள் மற்றும் சரத்தின் பெற்றோருக்கும் தகவலை தொலைபேசியில் தெரியப் படுத்தினான். அவர்களும் கேள்விப் பட்டதும் எவ்வளவு விரைவாக கொழும்புக்கு வரமுடியுமோ வந்து சேர்ந்தார்கள். சரத்தின் பெற்றோர்கள் அவனைப் பார்த்தவுடன் அழுது விட்டார்கள். அவர்களுக்கு ஆறுதல் சொல்லி ஊருக்கு வழி அனுப்பி வைத்தது மட்டுமல்லாமல். நாங்களும் இடையிடையே வந்து பார்க்கிறோம். நீங்க நல்ல டொக்டரிடம் முதலில் காட்டுங்க. எல்லாம் சரியாகிடும். நண்பர்கள் எந்த வேறுபாடுகளையும் பார்க்காது நட்பைத் தூய்மை படுத்தினார்கள்.

'துன்பத்துல் துப்பாயர் நட்பு' என்பதுபோல சரத்திற்கு கொடுக்கப்பட்ட மருத்துவம் நல்ல பயனைத் தந்தது. அவன் மெல்ல மெல்ல பழைய நிலைக்குத் திரும்பினான். அவனது மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பித்து அவனுக் கான வேலையையும் பெற்றுக் கொடுக்க நண்பர்கள் முயற்சித்தார்கள். அதன்படி அவனுக்கு வேலையும் கிடைத்தது. முன்னர் வேலை செய்த அதே இடம் என்பதால் அவனுக்கும் பரவாயில்லை. காலம் கடந்தோடியது.

வருடாந்த இடமாற்றம் மூலம் சரத் தன்னூருக்கே மாற்றலாகும் சந்தர்ப்பம் அவனை நாடி வந்தது. சந்தோசமாக இடமாற்றத்தை ஏற்றுக் கொண்டவன் ஊருக்குச் செல்வதற்காக, முன் கூட்டியே புகையிரத நிலையத்திற்கு ஆசன பதிவு செய்திட வேண்டும் என்பதால் அதற்காக வந்து பெற்றுச் சென்றான்.

அன்றைய இரவு தன்னுடன் பணிபுரியும் கொழும்பு நண்பர்கள் அளித்த சந்தோசமான விருந்திலும் கலந்து கொண்டு அவர்களிடமிருந்து விடைபெற்று தனது நாளைய பயணத்திற்கான ஒழுங்குகளை செய்து நிம்மதியாக உறங்கியெழுந்து விடிகாலைப் பொழுதில் உரிய நேரத்திற்கு புகையிரத நிலையம் வந்து சேர்ந்தான். அங்கே அலங்கோலமாக கிழிந்த அழுக்கான ஆடைகளுடன் பிளட்பாமில் ஒருத்தி பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாள். ஆமாம்! யாரை தன் வாழ்வில் சந்திக்கக் கூடாது என நினைத் தானோ, தன்னை ஏமாற்றிச் சென்றவள், அவள் அங்கு அவனது கண்ணில் தென்பட்டாள். 'அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்' என்பது இதுதானா? அவன் தனக்குள் நினைத்துக் கொண்டிருக்கையில்... புகையிரத நிலைய சமிக்கை சரத்தை ஆசனத்தில்


noolaham.org | aavanaham.org

விரைவாக அமர வைத்தது. தனது ஊரை நோக்கி அந்தப் புகையிரதம் புறப்படுகின்ற வேகத்தில் ஜன்னலின் வழியே வந்து மோதும் மெல்லிய காற்று பழையனவற்றை கலைந்து செல்ல ஜன்னலின் பக்கம் சரத் தனது முகத்தை மெதுவாக திருப்பிக்கொண்டான்.

ஊருக்குள் காலடி எடுத்து வைத்த அவனது உள்ளத்தில் ஒருவித சந்தோசம் எழுந்தது. அந்த வண்ண பட்டாம் பூச்சிகளின் கனவுகளுக்குள் போய் வந்தான். இன்முக வரவேற்பை தந்திட தாயும் தந்தையும் கூடி நின்ற உறவுகளும் வாசல் முற்றத்தில் காத்து நின்றனர். அம்மா அப்பாவின் காலில் விழுந்து எழுந்தவன் மறவாமல் உறவுகளையும் கைகளைப் பிடித்து அணைத்துக் கொண்டான். இரவிலே பயணம் மேற்கொண்டதால் வீட்டுக்குள் நுழைந்ததும் ஒரு நிம்மதியான தூக்கம் போட்டான். சரத் படுத்துறங்கும்வரை பகல் சமையல் வேலைகளை அவனது அம்மா தொடங்கினாள். மகனுக்கு என்னென்ன பிடிக்குமோ அந்த உணவையெல்லாம் சமைக்கத் தொடங்கினாள். அவற்றில் கத்தரிக்காய் பொரியல், இறால் பொரியல், மீன் பொரியல், வாழைக்காய் பொரியல் என பல விதமான உணவுப் பண்டங்கள் சாப்பாட்டு மேசையை அலங்கரித்தன.

கிராமம் என்றால் கண்முன் காட்சி தருவது விவசாய நிலமும் கடலும்தான். அந்த வகையில் சரத்தின் ஊரைச்சுற்றி ஒரு பக்கம் கடலும் மறு பக்கம் விவசாயமும் விளைந்து நிற்கும் கண் கவரும் பசுமை மிகுந்த பூமியாகும். இந்த இரண்டு தொழிலுமே அந்த ஊர்மக்களின் பிரதான தொழிலாக இருந்து வருகிறது. சரத்தின் அப்பாகூட பரம்பரையாக விவசாயம் செய்து வருகின்றவர். அதனைச் செய்தே சரத்தை படிப்பிக்க வைத்து இன்று அரச உத்தியோகம் பார்க்கும் ஒரு நிலையில் அவன் இருப்பதற்கு காரண கர்த்தாவாக இருக்கிறார். அவர் பெயர் நிமல் ரத்னாயக்க. சுருக்கமாக ஊரில் நிமல் ஐயா என்றே அழைத்து வருகின்றனர். இந்த ஊரில் அவருக்கென்று தனியான மரியாதை உண்டு. நிமல் ஐயாவின் இரண்டு பிள்ளைகளில் மகளொருத்தி இரேஷா. திருமணம் முடித்து கணவரோடு தனிக்குடித்தனம் போய் கணவரின் ஊரிலே வாழ்ந்து வருகிறாள். இப்போது சரத் மட்டுமே அவர்களுடன் வாழ்ந்து வருகின்றான்.

சாப்பிடுவதற்கான நேரம் வந்ததும் நிமல் ஐயா மகனை எழுப்பி விட்டார். சரத் நீண்ட நாளைக்குப் பின்னர் அம்மாவின் கைப்பக்குவத்தில் சுவைத்து சாப்பிட்டான். மகன் திருப்தியாக உண்டதைப் பார்த்து இருவரும் சந்தோஷம் அடைந்தார்கள். மனித வாழ்வில் பிள்ளைகளின் சந்தோஷத்திலேயே பெற்றவர்களின் சந்தோஷமும் அடங்கியிருக்கிறது.

சரத் தன்னுடன் சிறுவயதில் ஒன்றாகப் படித்த நண்பர்களைத் தேடி அந்தி சாய்ந்த பொழுதில் அப்பாவின் துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டான். அவன் புறப்படும்போது அந்த இடங்கள் எல்லாமே வயல் பிரதேசம். நெல் விளைந்து நிற்கும் பூமி. அறுவடை செய்யக் கூடிய பருவத்தில் இருப்பதால் அந்த நெல்லை உண்டு பசியாற குருவிகளும் இன்னும் பல பறவைகளும் வானில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

பக்கத்து வயலில் மிருகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வேளாண்மையைப் பாதுகாக்க பொம்மைகளை நிறுத்திக் கட்டப்பட்டிருந்தது. வயல்கள் தாண்டி பிரதான வீதிக்குள் துவிச் சக்கரவண்டி வேகமெடுத்தது. தான் படித்த ஆரம்ப பாடசாலை முன்னால் வர அதன் வேகம் தானாகக் குறைந்தது. இந்த பாடசாலை வீதியில் நடை நடையாக பள்ளிக்கு வந்த கடந்த காலங்கள் சில அவனது நினைவுகளில் மிதந்தன. பாடசாலையின் முன் கேற்றில் மத்தம்மா எப்போதும் சிரித்த முகத்துடன் நிழற்குடையின் கீழ் வீதியோரமாய் அந்தக்கடையில் அமர்ந்திருப்பாள். அவள் அவ்வாறு அமர்ந்திருப்பது மாணவர்களுக்கு தான் கொண்டுவந்த தீன் பண்டங்களை விற்பனை செய்வதற்காகத்தான். சுத்தமாகவும் சுவையாகவும் குறைந்த விலையிலும் அவரிடம் வாங்கும் பொருள்கள் இருக்கும். ஆசிரியர்கள் சிலரும் அவரிடமே வந்து காலைச் சாப்பாட்டை வாங்கிச் செல்வார்கள். கணவனை இழந்த மத்தம்மா தனது இரண்டு பெண் பிள்ளைகளைக் கரைசேர்க்க இந்த வீதியோரக் கடையை செய்து வந்தாள். அவரது பிள்ளைகள் இப்போது பெரியவர்களாக இருப்பார்கள்.

மத்தம்மா - நினைவுகளில் இருந்து மீளமுடியாதவள். அவளது அணுகுமுறை எல்லோருக்கும் பிடித்தே இருந்தது. மகன், மகள் என்றே பிறரை அழைத்திடுவாள். காசேயில்லாதபோதும் எங்கள் வயிற்றை காயவிடாத இன்னொரு தாய், மத்தம்மா. அந்த ஊர் மகளிர் பாடசாலை முடிவடைந்து தனது பெண்பிள்ளைகள் இருவரும் வந்தவுடன் மத்தம்மாவின் கடை மூடப்பட்டுவிடும். சின்னதான நினைவுகளுடன் அவனது சைக்கிள் நண்பன் செபஸ்டியன் வீட்டை அடைந்தது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் செல்வதால் நண்பனின் வீடு மாற்றமாக இருக்கும் என்று அவனுக்குள் நினைத்தது பொய்ப் பித்துப் போனது. "செபஸ்டியன், செபஸ்டியன்" என்று நண்பனை அழைத்தான். வெளியே வந்தவனைப் பார்த்த சரத்தின் கண்கள் அந்த நிமிடமே கலங்கிப்போனது. ஆமாம், வறுமையின் நிலையை செபஸ்டியனின் உடல் தோற்றம் சொல்லி நின்றது. செபஸ்டியனை ஏற்றிக் கொண்டு அவர்கள் முன்னர் வழமையாக சந்திக்கும் கடற்கரைப் பக்கம் சென்றார்கள். கண்டல் மரங்கள் சூழ்ந்த கடலைப் பார்த்தவாறு அடுக்கி வைக்கப்பட்ட, பாவனையில் இல்லாத, பழைய தோணியில் அமர்ந்து கொண்டு கடந்தகால மற்றும் நிகழ்கால விடயங்களைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டார்கள். நேரம் போனதே தெரியவில்லை. பல வருடங்களின் கதைகள் அல்லவா?. திடீரென தனது பக்கெற்றில் இருந்து சரத் சிறுதொகைப் பணத்தைக் கையில் எடுத்து நண்பன் கையில் வைத்தான். செபஸ்டியன் அதை வாங்க மறுத்தான். மீண்டும் அவன் அந்தப் பணத்தை செபஸ்டியனின் பக்கெற்றில் வைத்தான். அதை மறுதலிக்க மனம் வராமல் ஏற்றுக்கொண்டான். செபஸ்டியனை வீட்டில் இறக்கி விட்டு தனது வீட்டுக்கு சரத் வந்துசேர்ந்தான்.

ஏதோவொரு வகையில் ஒவ்வொருத்தரும் கஷ்டமான வாழ்வைக் கடந்துதான் வாழ்வில் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது. இரவு பகல் போல - காலை மாலை போல இன்ப துன்பங்கள் மாறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி வந்து செல்கின்றன. நண்பன் செபஸ்டியன் வாழ்வில் நல்ல மாற்றம் ஏற்படவேண்டும் என்ற எண்ணங்களுடன் அவனது கண்கள் நித்திரையைத் தழுவின.

கிராமத்தின் பொழுது விடியல்கள் சொல்லவா வேண்டும்? கோழிகளின் கூவல்கள், வான் பறவைகள் எழுப்பும் ஒலிகள் எல்லாம் தூக்கத்தைக் கலைத்துவிடும். ஆனால் அதையும் பொருட்படுத்தாமல் சரத்தின் தூக்கம் நீடித்தது.

சரத் ஊருக்கு வந்திருப்பது கேள்விப்பட்டு உறவினர்கள் பலர் அன்றைய தினம் வீட்டுக்கு வருகை தந்திருந்தனர். சரத், அவர்களின் கண்களில் படாததால் எங்காவது போயிருக்கிறாரா என விசாரித்துக் கொண்டனர்.

அவனது அம்மா, "இல்லை, அவர் கொஞ்சம் தூக்கத்தில் இருக்கிறார்" என்று அவர்களுக்குப் பதிலளித்தார். இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும்போதே சரத்திற்கு விழிப்புவந்து, குளித்து தன்னைத் தயார்படுத்திக் கொண்டு உறவுகளின் முன்னால் வந்து நின்றான். அவர்களுடன் உறவாடிய பின் வந்தவர்களுக்கான தேனீர் விருந்து பசாரம் நடைபெற்றது.

இன்னும் சற்று நேரத்திற்குப் பின் அவர்களுக்கான பகல் உணவும் பரிமாறப்பட்டது. உறவினர்களில் மிகவும் நெருக்கமான சிலர் சரத்தின் குடும்பத்தையும் விருந்திற்கு வருமாறு அழைத்தார்கள். அந்த அழைப்பை மனமுவந்து ஏற்றதால் "வருகின்றோம்" என்று பதிலளித்தார்கள்.

அப்பா தோட்டத்தில் வேலை செய்துவருபவர். அவரின் நிலை அறிந்து போவதற்கான திகதியை குறிக்கவேண்டும் என்று சரத்தின் அம்மா அவனிடம் பேசிக் கொண்டாள். தோட்டவேலை முடிந்து வீடுவந்த சரத்தின் அப்பா இன்ன திகதியில் போவோம் என்று தனது சம்மதத்தை தெரிவிக்க, அவர்களின் பயணம் குறிப்பிட்ட திகதியில் நடைபெற்றது. அதுவும் ஒரு கிராமம்தான். அழகிய பயிர்கள் எங்கும் செழித்து வளர்ந்து நிற்கின்றன. அக்காவின் கணவர் வெளிநாடு போனதால் தொழிலுக்கு ஆள் வைத்தே தோட்டத்தை பராமரித்து வருகிறாள்.

அன்றெனை அவள் தோழியின் வீட்டுக்கு போயிருந்தாள். அவளது சிறிய தம்பி தரம் ஆறில் படிக்கும் அவனிடம் அவளைப் பற்றிய தரவுகளைத் தெரிந்து கொண்டான். அக்காவின் வீட்டில் மகள் படித்துவிட்டு தொழிலுக்காகக் காத்திருப்பதாக சொன்னாள். எப்போதோ கண்டது. அவளை ஒரு தடவை பார்க்கவேண்டும் என்று சரத் மனதில் ஆசைப்பட்டான்.

பகல் சாப்பாட்டு நேரம் பார்த்து அக்காவின் மகளும் வந்து சேர்ந்தாள். வந்தவுடன் வந்தவர்கள் பற்றி தீவிரமாக அம்மாவிடம் விசாரித்தாள். நெருங்கிய உறவினர்கள் என்ற விடயம் அவளுக்கு தெரியவருகிறது. சரத்துடன் பேசிட வெட்கித்து தலை குனிந்து நின்றாள்.

அவள் பேசும் வரை அவனுக்குள் மௌனமொழி களைய ஆரம்பித்தது...

**(இன்னும் வரிகள் தொடரும்...)**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் நயம்**

# இப்படிக்கு என் இதயம்

நூல் கண்ணோட்டம்:-

**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**

ஏட்டுலா கனவாக்கத்தின் மூன்றாவது நூல் வெளியீடாக மாவனல்லையைச் சேர்ந்த பாத்திமா சில்மியாவின் **இப்படிக்கு என் இதயம்** என்ற கவிதைத் தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது. இந்த நூலின் ஆசிரியர் பாத்திமா சில்மியா இலக்கியத் துறையில், அதிலும் கவிதைத் துறையில் அதிக ஆர்வம் காட்டிவரும் ஓர் இளம் தலைமுறைக் கவிஞராவார். 124 பக்கங்களை உள்ளடக்கியுள்ள இந்த நூலை சிறியதும் பெரியதுமான கவிதைகள், கவித்துளிகள் உட்பட 120 கவிதைத் தலைப்புகள் அலங்கரிக்கின்றன.

பக்கம் 29 இல் அமைந்துள்ள "வெள்ளைச் சீருடை நாட்கள்" என்ற கவிதை பாடசாலைக் காலத்து நினைவுகளை மீட்டி மனதில் சந்தோஷத்தை நிறைக்கின்றது. எவ்வளவு காலம் கடந்து போனாலும் பாடசாலைக் காலத்தை நினைக்கும் போது மனதில் ஒரு புதுத்தெம்பும் உற்சாகமும் ஏற்பட்டு மனது சந்தோஷத்தால் நிரம்பி வழியும் என்பதை யாராலும் மறுக்க முடியாது. உங்களின் இரசனைக்காக இந்தக் கவிதையின் வரிகள் இதோ:




மீட்டிப் பார்க்கிறேன்
என் மனக் கண்ணில்
வெள்ளைச் சீருடையில்
சுற்றித் திரிந்த – அந்தப்
பொக்கிஷமான காலத்தை!

அன்பான பரிமாறல்கள்
செல்லச் சண்டைகள்
குறும்பு சேட்டைகள்
முடியக் காத்திருக்கும்
பாடவேளைகள்
பாசம் நிறைந்த கண்டிப்புகள்!

புத்தகப்பை மட்டுமே
சுமையாகத் தெரிந்த
அழகிய நாட்கள்
வராதோ மீண்டும்
நம் வாழ்வில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பெற்ற தாய்க்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இந்த நூலில் தாய் பற்றிய "அன்புள்ள அம்மாவுக்கு" (பக்கம் 32), "கர்ப்பம் முதல் கல்லறை வரை" (பக்கம் 49) ஆகிய இரண்டு கவிதைகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

அந்தவகையில் பக்கம் 32 இல் அமைந்துள்ள "அன்புள்ள அம்மாவுக்கு" என்ற கவிதை பெற்ற தாயின் தியாகத்தை இயம்புவதாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் அன்பிற்கும் ஆதாரமாகத் திகழ்வது தாயின் அன்பாகும். தாயன்பிற்கு ஈடு இணை இல்லை. எத்தனை பெரியவர்களாக வளர்ந்த போதும் ஒரு தாய்க்கு தன் பிள்ளை குழந்தை போன்றே தோன்றும். தாய் பற்றிய தனது உள்ளத்து உணர்வை இக் கவிதையின் பின்வரும் வரிகளில் பிரதிபலிக்கிறார் நூலாசிரியர்.

ஈரைந்து மாதங்கள் எனை சுமந்து
என் சிரிப்பிலே மனம் மகிழ்ந்து
பசி தாகம் துறந்து களைப்பும் மறந்து
எனக்கெனவே அர்ப்பணித்த
என் அன்பின் அன்னையே!

என் செய்வேன் – உனக்கான
கடன் அடைத்திட நான்
ஈடாகுமோ உன் சேவைக்கு
அவனியிலே ஏதும்!

இந்த உலகத்தில் எல்லோரும் இன்னொருவரை சார்ந்தே வாழ வேண்டி இருக்கிறது. நாம் அன்றாடம் காணும் ஒவ்வொன்றும் நமக்கு ஒரு புதிய பாடத்தை நிகழ்த்துகிறது. ஒவ்வொரு ஜீவராசியிடம் இருந்தும் ஒரு புதிய விடயத்தை நாம் தினமும் கற்றுக் கொள்ளும் படியே இயற்கை அமைந்திருக்கிறது. ஆம் அன்றாடம் நடைபெறுகின்ற ஒவ்வொரு விடயங்களில் இருந்தும் ஒவ்வொரு சம்பவங்களிலிருந்தும் சில பாடங்களைக் கற்றுக் கொண்டால்தான் வாழ்க்கையை நாம் சிறப்பாகக் கொண்டு செல்ல முடியும். கவிஞர் "கற்றுக்கொள்" (பக்கம் 33) என்ற தன் கவிதையில் கூறும் விடயங்கள் எமக்கும் நெருக்கமான விடயங்களாகவே அமைந்துள்ளன. கவிஞர், தனது அனுபவத்தில் தான் கண் கூடாகக் கண்டவற்றை பின்வரும் வரிகளினூடாக ஆழமாகப் பதிவு செய்கின்றார்.

பொறுமையைக் கற்றுக்கொள்
எல்லா சுமைகளையும் தாங்கிடும் பூமியிடம்
விடாமுயற்சியைக் கற்றுக்கொள்
ஓயாது அலை வீசும் கடலிடம்!

சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்
ஓய்வில்லாமல் இயங்கும் தேனீக்களிடம்
நம்பிக்கையை கற்றுக்கொள்
பசியுடன் சென்று
இறையுடன் கூடு திரும்பும் பட்சிகளிடம்!

அவதானத்தைக் கற்றுக்கொள்
தொலைதூரத்திலிருக்கும் இரையை
இலக்கு வைக்கும் பருந்திடம்!

பக்கம் 35 இல் உள்ள "வா - சிக்கலாம்" என்ற கவிதையின் மூலம், வாசிப்பு மழுங்கிப் போன இக்காலத்தில் இணையத்தில் மணிக் கணக்கில் மூழ்கி நேரத்தைக் கழித்துவிடும் மனோபாவம் கொண்ட இளைய தலைமுறையினருக்கு சிந்தித்துப் பார்ப்பதற்கு முக்கியமான, மிகவும் அருமையான கருத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கிறார் கவிஞர். வாசிப்பு என்பது இன்று செயல் வடிவம் அற்றதாக ஆகிவிட்டது. நூல் ஒன்றை பிரித்து வாசிக்கும் அந்த சுகானுபவம் இன்றைய இளையோர்களுக்கு இருக்கின்றதா என்பது சந்தேகமே. அந்தளவுக்கு தொலைபேசியும் இணையமும் மனிதர்களைத் தன்வசம் ஈர்த்துக் கொண்டுவிட்டது. இதிலிருந்து இனி உலகம் மீண்டுவிடும் என்ற நம்பிக்கைச் சுடர் அணைந்து விடும் காலம் வெகு தூரத்திலில்லை. அந்த ஆதங்கத்தை நூலாசிரியரின் கவிதை இவ்வாறு கோடிட்டுக் காட்டுகின்றது.

வாசிக்கலாம் என்கிறது
புத்தகம்..
வா சிக்கலாம் என்கிறது
கைப்பேசி..

ஒன்றில் நாம்
தொலைந்து விடுவோம்..
மற்றையது நம்மைத்
தொலைத்து விடும்..

காகிதமோ தொடுதிரையோ
சிக்குவது எதிலாயினும்
பிரதிபலன் – பாவனை
முறையைப் பொறுத்தே!

பக்கம் 68 இலுள்ள "சாயங்கள் தருவாயா?" என்ற கவிதையானது அழகியல் பூர்வமாக எழுதப் பட்டிருக்கும் பாங்கு சிலாகிக் கத்தக்கது. தன் மனதில் தோன்றிய ஒரு உருவத்திற்கு இயற்கையிடம் வர்ணங்களைக் கேட்டு நிற்கின்றார் நூலாசிரியர். இவரது கற்பனைத்திறன் இந்தக் கவிதையினூடாகப் புலப்படு கின்றது.

மனக்கண் தோன்றிய ஓர் ஓவியத்திற்கு உருவம் கொடுக்க நினைக்கின்றேன்... அதற்கு வர்ணம் தீட்ட சாயங்கள் மட்டும் இயற்கை யிடம் வேண்டி நிற்கின்றேன்... இரா வானின் இளவரசனாகிய பால் நிலாவிடம் கொஞ்சம்... மங்கையவள் கயல் விழியின் கண்மணியிடம் கொஞ்சம்... நறுமுகையோடு மலர்ந்திடும் செவ்விதழ் ரோஜாவிடம் கொஞ்சம்... கற்பாறையைப் பிளந்து துளிர்விடும் இளந்தளிரிடம் கொஞ்சம்... நீந்தும் மேகங்கள் நிலவிடும் நீலவானிடம் கொஞ்சம்... பொழுது சாய பொற்கரம் நீட்டும் செங்கதிரவனிடம் கொஞ்சம்... மழை மறைய மெல்லமாய் முகம் காட்டும் வானவில்லிடம் கொஞ்சம்... இயற்கையுடன் ஒன்றித்த எனது ஓவியம் வெளுத்திடாதல்லவா...? என்று கவிஞர் கேட்கும் பாங்கு இரசிக்கத்தக்கது.

"இப்படிக்கு என் இதயம்" என்ற இந்த நூல், நூலாசிரியர் சில்மியாவின் கன்னி முயற்சி. இனிவரும் காலங்களில் இன்னும் கனதியான கவிதைத் தொகுதிகளை இவர் வெளியிடுவார் என்ற நம்பிக்கையோடு, நூலாசிரியருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்!!!

**நூல் - இப்படிக்கு என் இதயம்**
**நூல் வகை - கவிதை**
**நூலாசிரியர் - பாத்திமா சில்மியா**
**வெளியீடு - ஏட்டுலா கனவாக்கம்**
**விலை - 650 ரூபாய்**
**நூல் கண்ணோட்டம்:**
**- வெலிகம ரிம்ஸா முஹம்மத்.**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் அறிமுகம்**

# அகந்தை அழிந்தது

நூல் : அகந்தை அழிந்தது
வகை : உருவகக் கதைகள்
ஆசிரியர் : மருதூர் ஜமால்தீன்
முதற்பதிப்பு : மே 2025
வெளியீடு : அபாபீல்கள் கவிதா வட்டம், சாய்ந்தமருது
விலை : ரூபா. 600
தொடர்பு : 0775590611




நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலக்கிய உலகில் தொடர்ச்சியாக எழுதி வரும் கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன் அவர்கள் மரபுக் கவிதை, காவியம், இசைப் பாடல்கள், நாட்டார் பாடல்கள், சிறுகதை, உருவகக் கதை என இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தன் பங்களிப்பைச் செய்துவரும் சிறந்ததொரு படைப் பாளியாவார்.

இதுவரை 15 நூல்களை எழுதியுள்ள இவரது 15ஆவது நூல் இந்த **அகந்நை அழிந்தது** எனும் உருவகக் கதைத் தொகுதியாகும். ஏற்கனவே 2011-2016 வரையான காலப் பகுதியில் நவமணி, சுடர் ஒளி, பூங்காவனம் ஆகியவற்றில் வெளிவந்தவற்றில் 15 உருவகக் கதைகளைத் தெரிவு செய்து அழகிய அட்டைப் படத்துடன் எமக்கு விருந்துவைத்துள்ளார், நூலாசிரியர் மருதூர் ஜமால்தீன்.

உருவகக் கதைகளின் வருகை வெகுவாகக் குறைந்துள்ள இக் கால கட்டத்தில் இதன் வருகை வரவேற்கத்தக்கது.

பன்னூலாசிரியரும் சிறந்த சிறுகதை எழுத்தாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எஸ். முத்துமீரான் அவர்கள் தான் உயிருடனிருக்கும் போது வழங்கிய அணிந்துரை நூலுக்கு மேலும் வலுசேர்க்கிறது. அத்துடன் இந்நூலுக்கு சிறந்ததொரு பின்னட்டைக் குறிப்பினை வழங்கி யுள்ளார் கலாபூஷணம் மூதூர் முகைதீன் அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் இந்நூலினை எழுத்தாளரும் கவிஞருமான தனது இனிய நண்பர் காலஞ்சென்ற எம். எம். நூறுல்ஹக் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார்.

இந்நூலிலுள்ள பதினைந்து உருவகக் கதைகளுமே ஒன்றை யொன்று விஞ்சி நிற்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியுள்ளது. நூலாசிரியர் ஒரு மார்க்க அறிஞர் என்பதால் இறைபக்தி, மனிதாபிமானம், அன்பு, இரக்கம், உண்மை, நேர்மை போன்ற நற் குணங்கள் எல்லாக் கதைகளிலும் மேலோங்கியிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளன.

எடுத்துக்காட்டாக, **உருவத்தால் உயர்வில்லை** (பக்கம் 53-55) என்ற கதையில் "பிள்ளைகளே ஒருவரின் உருவத்தைச் செயற்பாடுகளை, புகழ் பெருமையை வைத்து உங்களுக்குள் ஒருவரையொருவர் எடை போடாதீர்கள். ஒருவர் என்ன உருவத்திலிருந்தாலும் அவரிடம் உண்மை, நேர்மை, இறையச்சத்துடன் அவரின் பணி சிறக்குமென்றால் அதுதான் அவருக்கு எப்போதும் நன்மையைப் பெற்றுத்தரும் என்று வாழப்பழகுங்கள்" என்று அறிவுரை கூறுகின்றார்.

அடுத்து **அகந்தை அழிந்தது** (பக்கம் 17-20) என்ற கதையில் "ஏதோ ஒரு வகையில் பணமும், வசதியும், செல்வாக்கும் சமூகத்தில் அந்தஸ்தும் இருந்துவிட்டால் பிறரைக் கேலி செய்வது, உருவத்தை ஏளனப் படுத்துவது போன்றன பலரது தீய கொள்கை" எனச் சாடுகிறார்.

இவ்வாறு 15 கதைகளையும் தனித்தனியே சிறப்பித்துக் கூறலாம். மொத்தத்தில் இந்த **அகந்தை அழிந்தது** நல்ல வாசிப்பை நாடும் வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகாது.

இந்த உருவகக் கதைத் தொகுதியை ஒவ்வொருவரும் கட்டாயம் படித்து இன்புறுவது மட்டுமல்லாது, தங்கள் பிள்ளை களுக்கும் படித்துக் காட்டவேண்டியது கடமையாகும்.

கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன் அவர்கள் எதிர்காலத்திலும் இது போன்ற சிறந்த உருவகக்கதைத் தொகுதிகளை இலக்கிய உலகிற்கு வழங்க வல்ல நாயன் துணைபுரிய வேண்டுமென பிராத்திக்கிறோம்.

●●●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

# இன்னொரு மனசு

| | | |
|---|---|---|
| நூல் | : | இன்னொரு மனசு |
| வகை | : | கவிதைகள் |
| ஆசிரியர் | : | எம்மெஸ்ஸெம் ஜமீல் |
| முதற்பதிப்பு | : | ஏப்ரல் 2025 |
| விலை | : | ரூபா. 700 |




சிரேஷ்ட சட்டத்தரணி எம். எஸ். எம். ஜமீல் அவர்கள் ஒரு சிறுகதை எழுத்தாளரும் நல்ல கவிஞருமாக தன்னை இலக்கிய உலகிற்கு அடையாளங் காட்டியிருப்பது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது.

இவரது **ஆறாத நெஞ்சம்** என்ற சிறுகதை சென்ற வெண்ணிலா இதழ் 17இல் பிரசுரமாகி வாசகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

இதற்கும் மேலே பல படிகள் சென்று **இன்னொரு மனசு** கவிதைத் தொகுதி ஒன்றைத் தந்திருப்பது உண்மையிலேயே ஆச்சரியப்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

நூல் வெளியீடு கடந்த 12-04-2025 அன்று கவிஞர் மருதமுனை ஹஸன் (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களின் தலைமையில் சிறப்புற நடந்தேறியது. இதன்போது நூலின் விலை ரூபா 700 என நூலில் குறிப்பிட்டிருப்பினும் கலந்துகொண்ட அனைவருக்கும் பிரதிகள் இலவசமாகவே வழங்கப்பட்டன.

நூலாசிரியர் இந்நூலினை என்றும் அவர் மனதோடு உறவாடும் அவரது நட்புகளான கயஸ் அப்துல்லாஹ், ஹம்ஸா மொஹிதீன், கலீலுர் றஹ்மான் ஆகியோருக்கு சமர்ப்பணம் செய்துள்ளார்.

இது இவரது இரண்டாவதும் கவிதை வரிசையில் கன்னிப் பதிப்புமாகும். இவரது முதலாவது நூல் **வணிக விதானம்** என்ற பெயரில் 2021ஆம் ஆண்டு தமிழ் மொழி மூல பல்கலைக்கழக மாணவர்களின் நலனை முன்னிறுத்தி முற்றிலும் இலவசமாகவே வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு மனசு கவிதை நூலுக்கான மிகச் சிறப்பானதொரு அணிந்துரையை "பொங்குது மனசு" என்ற தலைப்பில் வழங்கியிருக்கிறார் நூலாசிரியரின் அன்பு நண்பரும் சட்டத்தரணியும் சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளருமான ஏ. எம். தாஜ் அவர்கள்.

சட்டத்தரணி ஏ. எம். தாஜ் அவர்கள் நூல் வெளியீட்டிலும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

சட்டத்தரணி ஏ. எம். தாஜ் அவர்கள் தனது அணிந்துரையில், "ஒரு முழுமையான ரசிகன் ஒரு கலைஞனாக இருப்பான். சட்டத்தரணி ஜமீலிடம் கலை இருக்கிறது, காதல் இருக்கிறது, கனவு இருக்கிறது. அதனால், கவிதையும் இருக்கிறது. இக் கவிதையை நான் கண்டு கொள்வதில்தான் பிந்தியிருக்கி றேன். முந்திக்கொள்ள வைக்க இவர் முயற்சிக்கவும் இல்லை" எனக் கூறி, "நல்ல கவிதை வாசகன் நெஞ்சில் வேர் விடும்" என முடிக்கிறார்.

*104* பக்கங்களில் மொத்தம் *86* கவிதைகள் இடம் பெறுகின்றன. உள்ளடக்க விபரம் இல்லாமையால் படித்தவற்றில் பிடித்தவற்றை மீண்டும் கண்டுகொள்வது சிரமமாக உள்ளது. தொகுதியில் உள்ள எல்லாக் கவிதைகளும் ஏதோவொரு வகையில் ரசிக்கக்கூடியதாக இருப்பது வரவேற்கத்தக்கது.

**நாட்டம்**

எங்களோடு நீ ஒட்டிக்கொண்டபோது– உன்னை
எங்களின் இல்லாமைக்குக் கிடைத்த
குறை நிரப்பி என உணர்ந்தோம்.
உன்னை நீ அறிந்தவுடன் – உன் விலகல்
எங்களை மீண்டும் இல்லாமைக்கே
கொண்டு சென்றது. - என முதலாவது கவிதை ஆரம்பமாகி,

**அன்பு வலை**

வலை போட்டு வீழ்த்தி விட்டு
அலை போல இணைந்திருக்க விரும்புகிறாய்
வலையில் வீழ்ந்த மீன்கள்
துடித்துக் கொண்டுதானே இருக்கும் இறப்புவரை
- என 86ஆவது கவிதை, தொகுதியை நிறைவு செய்கிறது.

இது போன்ற நவ ரசங்களையும் கொண்ட இன்னும் பல கவிதைத் தொகுதிகளை சிரேஷ்ட சட்டத்தரணி எம்மெஸ்ஸெம் ஜமீல் அவர்களிட மிருந்து எதிர்பார்க்கிறோம்.

●●●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகளின் நோக்கு ஒரு விமர்சன நோக்கு

**எம்.எச்.ஏ.எம்.இஸ்மாயில்**
முதுமாணி (தொடர்பாடலும் இதழியலும்)
இலங்கை கல்வி நிர்வாக சேவை (ஓய்வுநிலை)

ஓய்வுபெற்ற ஆசிரியர் வித்தியா கீர்த்தி மு.மீ.அமீர் அலி அவர்களின் இரண்டாவது மரபுக் கவிதை நூலாக 2024 டிசம்பரில் வெளியான "சுவடுகளின் நோக்கு" அண்மைக் காலத்தில் வெளியான நூல்களுள் முக்கியமான இடத்தைப் பிடிக்கின்றது.

காத்தான்குடி பைத்துல் பறகத் பதிப்பகத்தின் வெளியீடான இந் நூல் 18 கவிதைகளைத் தாங்கி 60 பக்கங்களில் வெளியாகியுள்ளது. ஆசிரியரால் தன் பெற்றோருக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்நூலுக்கான அறிமுக உரையை காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களும் வாழ்த்துரையை "விடிவெள்ளி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம். பைறூஸ் அவர்களும் எழுதியுள்ளனர்.

இந்நூலில் அடங்கியுள்ள 18 கவிதைகளும் 8 உபதலைப்பு களுக்குள் அடங்கக்கூடியவை. கவிஞரின் ஊர்ப்பற்று, நாட்டுப்பற்று, பிரதேசப்பற்று என்பவற்றை,




தாய்மண்ணே!, எங்கள் மாநகர் போன்ற கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

கவிஞர் வாழும் சூழலின் கலாசாரம், பண்பாடு, மரபு ஆகியவற்றை ஈகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநாள் இளமை நினைவுகள், மூத்தம்மாவும் பன்பாயும், வாவியும் வாழ்வும் போன்ற கவிதைகள் மரபுமுறைகளினூடான வரலாற்றுச் சான்றுகளாக அமைகின்றன.

பண்பாடற்றவர்களின் செயற் பாடுகள் காரணமாக கிரியைகளை மட்டும் கொண்ட மக்களையும் சேவை செய்து மரணித்தலுக்கான மரபுச் செயற்பாடுகளையும் வானம் இன்னும்... கவிதையும், சமூகச் செல்வாக்கின் பிரதிபலிப்பையும் வைத்தியசாலைகளில் நோயாளர்களை பார்வையாளர்கள் எவ்வாறு பார்வை யிடுகின்றனர் என்பதையும் தனித்தேன் என்ற கவிதையும் கூறுகின்றன.

சமநிலையற்ற ஆளுமை காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை தனித்தேன், போதையினை நாம் வெறுப்போம்!, நிழலும் நிசமும் போன்ற கவிதைகளும் கூறுகின்றன. தனித்தேன் என்ற கவிதை இரு பொருட்களுள்ளும் அடக்கப்படலாம்.

தாயன்பையும் தந்தையின் வழிகாட்டலையும் பற்றிய வரலாற் றைக் கூறுவதாக தாயன்பை எண்ணுகையில்..., என் தந்தை ஆகிய கவிதைகள் அமைந்துள்ளன.

குடும்பத் தேவைக்காக உழைத்த தனயனையும் சமூகத் தேவைக்காகக் கற்ற மாணவியையும் சென்றுவா நண்பா!, புதிய தலைமுறை ஆகிய கவிதைகள் பறைசாற்றுகின்றன. இவை சமூகச் சீர்கேட்டை வெளிப்படுத்துகின்றன.

பாடசாலை பரிசளிப்பு விழா வொன்றில் மாலை தாங்கும் பிரமுகரையும் கால் கடுக்க நின்று வாழ்த்தி வரவேற்கும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் மையமாகக் கொண்ட கவிதை யொன்று இந் நூலில் இடம் பெற்றுள்ளது. விழாவின் நாயகர் களான மாணவர்களையும் ஆசிரியர் களையும் கௌரவிப்பதற்குப் பதிலாக பிரமுகரைக் கௌரவிக்கும் போலிச் செயற்பாட்டை கவிஞரின் யதார்த்த சிந்தனையினூடாக குனியவைக்கும் செயலெதற்கு! என்ற அந்தக் கவிதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தி சூட்டுக்கோல் பாய்ச்சுகின்றது.

நியாயமற்ற வல்லரசுகளின் மேற்பார்வையில் காசாமீது கட்ட விழ்த்துவிடப்பட்ட அநியாயம் பற்றி பலஸ்தீன மண்ணே! கவிதையும், 1990 இல் பள்ளிவாயல்களில் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட வரலாறை எழுச்சி கண்ட பூமி என்ற கவிதையும் கூறுகின்றன.

மொத்தத்தில் 18 கவிதைகளும் வரலாறு, பண்பாடு, மரபு ஆகியவற்றைக் கொண்டுள்ளதோடு ஒரு கவிஞனின் விறைத்த, யாருக்கும் அஞ்சாது துணிவுடன் கருத்துரைக்கும் பாணியை சுவடுகளின் நோக்கு நோக்கி நிற்கின்றது.





எவரும் விளங்கக்கூடிய இலகுவான நடை இக் கவிதைகளின் சிறப்பம்சமாகும். மரபுக்கவிதை வரைவோர், மரபு இலக்கணத்துள் பிரவேசிக்கும்போது பாமர மக்களைப் பார்ப்பதா, மரபைப் பார்ப்பதா என்ற பிரச்சினையில் சிக்குவதை நாம் பார்க்கிறோம். மரபைப்பேணி, மக்களை இலகுவாக பொருளுணர வைப்பதில் கவிஞர் வெற்றி கண்டுள்ளார்.

புதுக்கவிதை வளர்ந்துவரும் இன்றைய நிலையில், அதன் நிலையாமையை வரலாறுகள் கூறுகின்றன. எனவே, இன்றைய தலைமுறை இலகுவில் மரபுக் கவிதை படைக்கலாம் என்ற தன்னம்பிக்கையை அவர்களுக்கு விதைத்து நம்பிக்கையூட்டும் வகையில் இந்நூல் அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பின்தொடரும் தர்மங்கள்

- அபூ அப்ராஸ் ஃபியாத் -



மாளிகாவத்தையின் மத்தியில் அமைந்திருந்த 'ஆப்தீன் ∴ப்ளட்ஸ்' எனும் மாடி வீட்டுக் குடியிருப்பின் கீழ்மாடி வீடொன்றின் அறையொன்றில் கட்டிலிலே முனகியவாறு சுருண்டு படுத்திருந்தான் ஸம்மி. வீதியில் வேகமாக செல்லும் வாகனங்களின் இரைச்சல், அவற்றின் 'ஹோர்ண்'களின் ஓலி என்பவற்றுக்கு மேலதிகமாக, புகையிரதத் திணைக் களத்தின் பிரதான 'லைன்'னில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், பதுளை, கண்டி, மன்னார் ஆகிய நகரங்கள் வரை செல்லும் தொடரூந்துகளின் இரைச்சல்களும், அவற்றின் 'ஹோர்ண்'களின் ஓலிகளும் வழக்கமாக சிறிய தொந்தரவாயிருந்ததாயினும் இன்று ஸம்மி இருக்கும் நிலையில் அவனுக்கு அவை எந்தப் பாதிப்பினையும் ஏற்படுத்தவில்லை.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் எம்.பி.பி.எஸ் பட்டத்துக்காகக் கற்றுக்கொண்டிருந்த உறவு முறையில் தம்பியாகிய - அதாவது தனது தந்தையின் சகோதரனின் மகனின் வருகையை எதிர்பார்த்தவாறு படுத்திருந்தான் ஸம்மி.

"மிஸ்டர் ஸம்மி, ஓங்களப் பார்க்க எனக்குப் பயமாயிருக்கு. நீங்க ரெண்டு நாளா சாப்பிடவுமில்ல... ஓங்கட கண்கள் மேலே உயர்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல எனக்குத் தெரியுது. சுலைமான் ஹொஸ்பிட்டல்ல ஒங்கள எட்மிட் பண்ணப் போறேன். ஒங்கள இங்க வெச்சிக்கிட்டிருக்க ஏலாது". ஸம்மி மாதம் ஆயிரம் ரூபா வாடகையில் இருக்கும் அறையின் உரிமையாளரான வீட்டுக்காரி பவுசியாவின் எச்சரிக்கையைத் தொடர்ந்துதான் ஸம்மி வேண்டிக்கொண்டிருந்தான் "இல்ல அன்ரி... எண்ட சாச்சாட மகன் கலம்பு மெடிக்கல் ஃபெக்கல்டியில படிக்கிறார்... அவரைக் கூப்பிட்டு எடுங்க..." என்று. அத்துடன் ஸம்மி தனது தம்பி தங்கியிருக்கும் விடுதியின் தொலைபேசி இலக்கத்தையும், தம்பியின் பெயர், அறை இலக்கம் என்பவற்றையும் கொடுத்திருந்தான்.

வீட்டின் 'கோலிங் பெல்' ஒலித்து சற்று நேரத்தில் பவுசியா, ஸம்மி படுத்திருந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். கூடவே ஸம்மியின் தம்பியும் புன்னகைத்தவாறு நின்றுகொண்டிருந்தார்.

"என்ன நானா ஒங்களுக்கு நடந்தது...?" -தம்பியின் விசாரிப்புக்கு ஸம்மி விளக்கமளிக்கத் தொடங்கினான்.

"தம்பி நான் முந்தநாள் ஒ.ஃபீசில வேல செஞ்சிக்கிட்டிருந்தன். மூணு மணியாகக்குள்ள நெஞ்சுக்கு இடப்பக்கம் வலிச்சது... பக்கத்து மேசையில இருந்த ஃபிறண்ட் கட்டுக்கம்பலவுக்கு சொன்னன்... என்னச் சுத்தி மத்த ஸ்டாஃப்களும் கூடிட்டாங்க. யாரோ கென்ரீனுக்கு ஓடிப் போய் சுடுதண்ணி கொண்டந்து குடிக்கச் சொன்னாங்க... நோம்போட இருந்த நான் தண்ணியக் குடிச்சன்... நோவு நிக்கல்ல... பக்கத்தில இருந்த நியூ யூனிவர்ஸ் பிறைவெட் ஹொஸ்பிட்டலுக்கு நண்பன் கட்டுக்கப்பலதான் என்னக் கூட்டிக்கிட்டுப் போனார். அங்க ஓ.பீ.டி.யில இருந்த டொக்டருக்கிட்ட விஷயத்தச் சொன்னன். நானும் முஸ்லிம்தான் எண்டு டொக்டர் சொன்னார். ஈ.சீ.ஜீ எல்லாம் எடுத்து மருந்து தந்தார். மருந்தக் குடிக்க குடிக்க ரெண்டு நாளும் தொண்டை, நாக்கு எல்லாம் வரண்டு போச்சி... கண்களும் மேலே போற மாதிரி இரிக்கி..." - இப்படிச் சொன்ன ஸம்மி வெப்புசாரத்தால் அழுது விட்டான்.

"சரி நானா... அழாதைங்க... ஈ. சீ. ஜீ. யையும் டொக்டர் தந்த மருந்துகளையும் தாங்க...".

இருதய துடிப்பு சம்பந்தமாக எடுத்த ஈ.சீ.ஜீ துண்டையும், டொக்டர் மருந்து எழுதித் தந்த துண்டையும், மருந்துகளையும் தம்பியிடம் ஒப்படைத்தான் ஸம்மி.

இவற்றையெல்லாம் நோட்டமிட்ட ஸம்மியின் தம்பி "நானா...! இந்த மருந்தையெல்லாம் குடிக்கத்த நிப்பாட்டுங்க... ஒங்கட ஈ.சீ.ஜீ நோமல்தான். ஆனா டொக்டர் தந்திருக்கிற மருந்து இருதய நோய் உள்ளவங்களுக்கு குடுக்கிற மருந்து..." என்றார்.

"இவ்வளவு பெரிய நர்சிங் ஹோமில் இப்பிடியா மருந்து எழுதித் தாறாங்க..." அதிர்ச்சியடைந்த ஸம்மி தனக்குள் இப்படிச் சொல்லிக் கொண்டான். மருந்துகளை குடிப்பதையும் நிறுத்திக் கொண்டான்.

மறுநாள் ஸம்மியைப் பார்க்க வந்த அவனது தம்பி சொன்ன விடயம் ஸம்மியை மேலும் அதிர்ச்சிக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியத்துக்கும் உள்ளாக்கிற்று.

"நான் அந்த முஸ்லிம் டொக்டரைப் பத்தி விசாரிச்சன் நானா... அவர் வெளி நாடொன்றில மெடிசின் படிச்சிட்டு வந்து இலங்கையில மெடிக்கல் கவுன்சில்ல பதியுற எக்ஸ ாம் பாஸ் பண்ணாம அங்க வேல செய்யுறாராம்..."

"ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன் எண்டத மாத்தி ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்று இதுக்குத்தான் சொல்லுறாங்களோ..." தனக்குள் இப்படி நினைத்துக்கொண்டான் ஸம்மி.

மருந்துகள் இல்லாமல் ஸம்மி தேறி வருவதை அவதானித்த அவரது தம்பி "ஒங்கட லங்ஸ்சில, நுரையீரல்லதான் சின்ன பிரச்சினை இருந்திருக்கும்... பயப்பிடாதீங்க..." என்று தைரியமூட்டிச் சென்றதையும், அவரால் தனது உயிர் காப்பாற்றப் பட்டதையும் எண்ணி ஆறுதல் அடைந்தான் ஸம்மி.

"என்ன ஸம்மி யோசிக்கிறீங்க... ஒவ்வொரு ஆத்மாவும் மவுத்தை சுவைத்தே ஆக வேண்டும்... யோசிக்காதைங்க..." அஷ்ஷெய்க் அகமது அன்ஸார் மவுலானாவின் ஆறுதல் வார்த்தைகள் முப்பத்திரெண்டு வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவத்திலிருந்து ஸம்மியை விடுபட வைத்து "என்னுயிரைக் காப்பாற்றிய அந்த ஜீவன் இன்று மவுத்தாகிட்டுதே..." என்று எண்ணச்செய்து வெப்புசாரத்தால் ஸம்மியின் நெஞ்சத்தை அழவைத்தது.

'டிஸ்பென்சரி அன்ட் சர்ஜரி' என்ற பெயர்ப்பலகையில் அவரது தம்பியின் பெயரும், அதோடு எம்.பி.பி.எஸ் (கொழும்பு), டிப்புளோமா இன் மைக்ரோ பயலொஜி என்ற பட்டமும், இலங்கை மருத்துவ சபையின் பதிவு இலக்கமும் ஸம்மியின் கண்களுக்கு தெரிபட்டதும், ஒரு வருடத்துக்கு முன்னர் அவரது தம்பி 'கோமா' நிலையில் ஒரு மாதம் இருந்து சுயநினைவு திரும்பி மீண்டும் வைத்திய சேவை செய்தது இந்த ஊர் மக்களினதும், உறவினர்களினதும் பிரார்த்தனைகளுக்கு இறைவன் கொடுத்த பதில்தான் என்று நினைத்துக்கொண்ட ஸம்மியிடமிருந்து நெடுமூச்சொன்று வெளிப்பட்டது.

"என்ன சேர்... உங்கட பெஸ்ட் ஃபிரெண்ட் மவுத்தாகிட்டார்... என்ன செய்யலாம்... நாம ஏத்துக்கொள்ளத்தானே வேணும்..."

சைபுதீன் ஆசிரியர் ஸம்மியைப் பார்த்து கவலை தெரிவித்தார்.

தொழுகை முடிந்து பள்ளிவாயல் முற்றத்தில் ஸம்மியும் அவரது தம்பி டொக்டரும் சந்திக்கும்போது இருவரும் கைகோர்த்த வண்ணம் உரையாடிக் கொண்டிருப்பதை அவதானித்திருக்கும் சைபுதீன் 'சேர்', அவர்கள் இருவரையும் நண்பர்கள் என நினைத்திருப்பார். ஸம்மியும் டொக்டரும் சகோதர உறவு முறையைக் கொண்டவர்கள் என்ற ஸம்மியின் விளக்கத்தை கேட்டு புரிந்துகொண்ட சைபுதீன் ஆசிரியர் "அப்ப நீங்க நெருங்கிய சொந்தம் அல்லவா..." என்று சொல்லிக்கொண்டார்.

பகல்நேரத் தொழுகையாகிய 'லுஹர்', மற்றும் பின்னேரத் தொழுகையாகிய 'அஸர்', ஆகிய வற்றுக்கு பள்ளிவாயலுக்கு போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த நேரங்களைத்தவிர டாக்டரின் மையத்தை வைத்திய சாலையிலிருந்து கொண்டு வந்ததில் இருந்து இதுவரை மையத்துக்கு அருகாமையிலேயே நின்றுகொண்டிருந்தான் ஸம்மி.

இதுவரை அந்த மையத்தின் முகத்தை மூடவே வாய்ப்பில்லாமல் ஊர்மக்கள், டாக்டரின் நண்பர்கள், டாக்டரோடு கடமையாற்றியவர்கள், கடமையாற்றிக்கொண்டிருந்தவர்கள் என்று தொடர்ச்சியாக அவருக்கு இறுதி மரியாதை செலுத்திக் கொண்டேயிருக்கின்றனர்.

"ஒரு மருந்தெடுக்க ஓராளுக்கு ஆயிரம் ரூபாக்கு குறையாம காசு வாங்குற டொக்டர்மார் இரிக்கிற இந்தக் காலத்துல இன்னா படுக்கிற சீதேவிக்கிட்ட மட்டும் முந்நூறு ரூபா இருந்தாப் போதும். மருந்து எடுக்கலாம்... ஒரு தடவையோட கொணமாவும் போகும்..." மய்யித்தைப் பார்த்து இப்படிச் சொல்லிக்கொண்டு கண்களைக் கசக்கிக் கொண்டும் கண்களில் நீர் மல்கவும் சென்று கொண்டிருப்பவர்கள் பலர்.

"இந்தப் புள்ளக்கி எண்ட நெலம தெரியும்... எந்த நேரம் வந்தாலும் சிரிச்ச மொகத்தோட என்னக் கூப்பிட்டு என்ட ஒடம்ப நல்லாச் சோதிச்சி மருந்து தந்த மகாராசா... ஒரு நாளும் எனக்கிட்ட காசி எடுக்கவே மாட்டாங்க..." இப்படியும் சிலர்.

"நான் டொக்டருக்கிட்ட மருந்து எடுத்தில்ல... ஒரு நாள் நான் ஓடிப்போன திறீவீலர் கொண்ட்ரோல் இல்லாம டொக்டர்ட காருக்குப் பின்பக்கம் மோதிற்று... அவடத்த கூடின ஆக்கள் டொக்டரில பிழையில்ல... நீங்க போங்க டொக்டர் எண்டு சொன்னத்தக் கேட்டுக்கிட்டு நானும் போகப் போனன்... ஆனா டொக்டர் அவர்ட கார உட்டு எறங்கி வந்து என்ட திறீவிலர்ர முன் லைட் ஒடஞ்சத்தப் பார்த்துப் போட்டு ஐயாயிரம் ரூபாவத் தந்து லைட்ட மாத்தச் சொல்லிட்டுப் போன தங்கமான மனுஷன்... அள்ளாஹ் அவருக்கு சொர்க்கத்தக் குடுப்பான்..." இப்படியும் ஒருவர்.

"நீங்க இல்லாத ஒபீசில நான் இனி எப்பிடி வேல செய்வன் ஐயா..." என்று ஓலமிட்டுச் செல்லும் டாக்டரோடு கடமையாற்றிக் கொண்டிருந்த நெற்றியில் பென்னம் பெரிய பொட்டு ஒன்று வைத்த ஒரு பெண் ஊழியர்.

"டெலிகொம்மில நான் வேல செய்யக்குள்ள நானும் ஓங்கட தம்பியும் கொஞ்சக்காலம் ஒரு றூமில தங்கியிருந்தம். அவர்ட வாப்பாட பெயரும், என்ட பெயரும் ஒண்டுதான். டொக்டருக்கு படிக்கிறம் எண்ட கர்வமே இல்லாதவரா இருந்தார். நான் வேலைக்குப் போனா இரவு ஏழு மணிக்குத்தான் றூமுக்குத் திரும்புவன். அலங்கோலமா போட்டுட்டுப் போற எண்ட பெட்டை சரி செஞ்சி தலையணைகளையும் ஒழுங்குபடுத்தி, எண்ட றைட்டிங் டேபிளையும் ஒழுங்காக்கி வெச்சிருப்பார்..." டாக்டரின் மையித்தைப் பார்த்துவிட்டு செயினுலாப்தீன் ஸம்மியிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

"டொக்டர் சேர் இன்சார்ஜா இருக்க லெபோரட்டரிக்கு முன்னுக் குத்தான் எனக்கு டியூட்டி. டொக்டர் வேலைக்கு வரக்குள்ளயும் வெளியே போகக்குள்ளயும் கதிரையை விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும்புவன்... நானும் ஓங்களப் போல ஒரு சேவண்ட்தான். என்னக் காணக்குள்ள நீங்க எழும்பப் போடாது என்று கண்டிப்பான உத்தரவுபோட்ட ஜென்டில்மேன்தான் இவர்... ஒரு மனிதனின் பண்பைப் பற்றி அறிய விரும்பினால் அவன் அவனைவிட குறைந்த நிலையிலுள்ளோரிடம் எவ்வாறு பழகுகிறான் என்பதைப் பார் என்ற அரபுமொழி தத்துவத்தோட வாழ்ந்தவர்தான் இந்த ஆத்மா..." சாதாரண பாதுகாப்பு ஊழியன் என்றாலும் இப்படிக் கதைக்கிறாரே என வியக்க வைத்தது அவரது பேச்சு.

மய்யிதை குளிப்பாட்டவும், அதைத் தொடர்ந்து 'கபன்' இடவும் தயாராகிக் கொண்டிருந்தார்கள். "கிருஸ்ணகுமார் டொக்டரும் ஜகுபர் டொக்டரும்தான் மருதமுனை, பாண்டிருப்பு, நீலாவணை மக்களுக்கு காசு, நேரம் பார்க்காம அவங்கட டியூட்டி இல்லாத நேரங்கள்ள சேவைசெய்தாங்க... ஜகுபர் டொக்டரையும் அள்ளாஹ் கூப்பிட்டுட்டான்... யா அள்ளாஹ் அவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எண்ட சொர்க்கத்தை குடு நாயனே" ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொண்டு பிரார்த்திக்கும் உரிமை இல்லாவிட்டாலும் அந்த வயோதிபப் பெண் இரு கரம் ஏந்திப் பிரார்த்தித்தாள்.

மையித்தைக் குளிப்பாட்டும் போது ஓரமாக ஒதுங்கி நின்ற ஸம்மியிடம் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் வந்து "என்ன ஞாபகமிருக்கா சேர்..." என்று கேட்டாள்.

"எங்கேயோ கண்ட மாதிரித்தான் இரிக்கி..."

"முப்பத்திரெண்டு வருஷத்துக்கு



முந்தி எங்கட உம்மா தொண்டையால சாப்பாடு எறங்காம கஸ்டப்பட்டாங்க... இன்னா மவுத்தான ஓங்கட தம்பி ஜகுபர் தான் கொழும்பில ஸ்பெஷலிஸ்ட் டொக்டருக்கிட்ட எங்கள கூட்டிக்குப்போய் இங்கிலீசில உம்மாட வருத்தம் பத்தி வௌக்கம் செல்லி வாட்டில வெச்சாங்க. பெரிய டொக்டர் உம்மாவ மூணு மாதம் வாட்டில வெச்சி கவனிக்க வேணும் எண்டாங்க. நாங்கள் ஏழை எழியதுகள்... ஓங்கட தம்பிதானே அந்த மூணு மாதமும் நாள் தவறாம எங்கள வந்து பார்த்து சாப்பாடும் அவர் காசில வாங்கித் தந்து எங்களக் கவனிச்ச... இந்தச் சீவண்ட புண்ணியத்தாலயும், அள்ளாட கிருபயாலயும் தான் எங்கட உம்மா சொகமாகி வந்து முப்பது வருஷம் வாழ்ந்து... போன வருஷம் மவுத்தான..."

தனது தம்பி டொக்டருக்குப் படிக்கும் போதும் கொழும்புக்கு வரும் ஊரவர்கள் தங்கும் 'லொட்ஜ்'ஜுக்கு வந்து இப்படியும் நன்மை செய்திருக்கின்றாரா என்பதை நினைத்தபோது ஸம்மியின் உதடுகள் "மாஷா அள்ளாஹ், அள்ளாஹுஃம்மபிர்னஹு வறஹம்ஹு" என்று உச்சரித்தன.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

# அவளவனின், "மேக தூதம்".

- இமையி, கம்பளை. -



அத்தியாயம் - 01

"கல்யாணம் ஆகி முழுசா ரெண்டு வருஷம் ஆகல. அவளுக்காக நீ அம்மா கூட வாக்குவாதம் பண்ற. இதெல்லாம் நல்லா இல்லை பவித்ரா."

"அச்சோ அம்மா கொஞ்சம் சும்மா இருக்கியா? ரொம்பதான் புள்ள மேல பாசம். இத்தன நாள் எங்க போச்சு உன் பாசம்? எப்படி இந்த அம்மாங்களுக்கு பசங்க கல்யாணம் பண்ணிட்டதும் பாசம் பொங்குதோ.

"கடவுளே! நானும் என் பையனுக்கு கல்யாணம் ஆனதும் இப்டி மாமியாரா ஆகிடக்கூடாதுப்பா."

"டேய் ஹரி, நீ கல்யாணம் பண்ணி மண்டபத்துல இருந்து நேரா தனிக்குடித்தனம் போய்டு, அப்போதான் நானும் நிம்மதியா, உன் பொண்டாட்டியும் உன்கூட நிம்மதியா வாழலாம்."

"ம்மா யாருக்கு கல்யாணம்?" மூன்று வயது மகன், தன் அம்மாவை பார்த்துக் கேட்டான். தன் தங்கையை முறைத்த உதய், "பசங்க கூட, அவங்க முன்னாடி என்ன எப்படி பேசணும்னு தெரியாதா உனக்கு?"

"சாரிண்ணா. நீ போய் முதல்ல அண்ணிய அழைச்சிட்டு வா. அவங்களை கொண்டு போய் விட்டுட்டு வந்துதான் எங்கிட்ட சொல்ற. இதெல்லாம் நல்லாவா இருக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவனுக்கு எது சரியோ அதைத்தான் பண்ணிருக்கான். நீ சின்னவ வாய மூடிட்டு இருக்கியா?"

"ஓஹ் ரொம்ப சந்தோஷம். ரொம்ப நல்லது பண்ணி வச்சிருக்க. அவனை இப்டி தனியா பார்க்கத்தான் கல்யாணம் பண்ணி வச்சியா?"

"இப்போ நான் கொண்டுபோய் விட சொல்லி அவன் விட்டுட்டு வந்துட்ட போலல்ல நீ பேசுற."

"அச்சோ அம்மா, கொஞ்சம் சும்மா இருக்கியா. நானாதான் போய் விட்டுட்டு வந்தேன். எனக்கும் அவளுக்கும் தான் பிரச்சினை."

"எனக்கு எப்போ தோணுதோ அழைச்சிட்டு வரேன். தோணலையா அங்கேயே இருக்கட்டும்." - சொல்லிவிட்டு கிளம்பியும் விட்டான்.

"ம்மா, உனக்கு தான் அவ என்ன பண்ணுனாலுமே பிடிக்கலையே. இனி உன் இ'டப்படியே எல்லாம் இருக்கட்டும். இப்போ கொஞ்ச நாளாதான் சந்தோஷமா இருக்கான். உனக்கது பொறுக்கலயா?"

உதய் அழைப்பெடுக்க மெதுவாக வீட்டினுள்ளே சென்று பதிலளித்தாள்.

"சொல்லுண்ணா."
"பவி, அம்மாகூட கலை பத்தி எதுவும் பேசாத. நான் பார்த்துக்கிறேன்."
"அண்ணி கூட நான் பேசவாண்ணா?"
"அவகூட பேசுறதுக்கு என்னை எதுக்கு கேக்குற. உன் அண்ணிதானே, அப்றம் என்ன?"

"பவி, இப்டியே எங்க வீட்ல தினம் ஒரு சண்டை வந்துட்டேதான் இருக்கும். சோ, அதுக்கு நாந்தான் நடுவுல இருக்கணும். நான் பார்த்துக்குறேன். நீ அம்மாவை ஏதும் பேசாத."

"அவங்க உன் அம்மா மட்டும் இல்ல. எனக்கும் தான். ரொம்ப தான் பொழியாத உன் பாசத்தை. புரிதில்ல இப்போ என்னாச்சுன்னு."

"சரி வச்சுர்றேன்."

ஈஸ்வரி, தன் கணவனை பிள்ளைகளின் பள்ளிப் பருவத்திலேயே இழந்தவர். கணவன் சேர்த்துவைத்த சொத்துக்களைக் கொண்டு பிள்ளைகளை வளர்த்து படிக்கவைத்து இருவரையும் மணம் முடித்து வைத்த சாதாரண இல்லத்தரசி. மகன் உதயன் மகள் பவித்ரா. மகள் மணம் முடித்து பக்கத்து தெருவிலேயே குடியிருக்கிறாள். திருமணம் வேண்டாம் என இருந்தவனை தன்னுடைய முப்பதாவது வயதில் திருமணம் முடித்திருந்தான். இதோ இன்று மனைவியோடு கொண்ட பிணக்கில் அவளை அன்னை வீட்டிற்கும் அனுப்பிவிட்டான். இல்லையில்லை. கொண்டுபோய் அவனே விட்டுவிட்டு வந்திருந்தான்.

## அத்தியாயம் - 02

"அண்ணி..." பவித்ரா அழைக்க, அந்தப்பக்கம் மௌனம்.

"என்கூட பேசமாட்டீங்களாண்ணி?"

"பவி..." அவளால் பேசிட முடியாது அழுகை முந்திக்கொண்டு வந்தது.

"அண்ணி இருக்கீங்களா? உங்ககூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிரெண்டா பேசலாமா?"

"பவி?"

"என்னடி பவி? வீட்டுக்கு போன்னா போவியா, நா இங்கதான் இருப்பேன், நீ வேணும்னா போன்னு சொல்ல வேண்டியதானே? உனக்கு நான் முன்னமே சொல்லிருக்கேன். எங்கம்மா பேசுறதெல்லாம் மைண்ட்ல ஏத்திக் காதன்னு."

"அத்தை ஒன்னும் சொல்லல. அவங்க எப்போவும் போலத்தான்."

"அப்றமா என்ன?"

"மாமா தான்..."

"என்ன சொன்னான்?"

"ஒன்னில்ல பவி விடு. மாமா ரெண்டு நாள் வெளியூர் போறாங்கன்னு சொல்லித்தான் விட்டுட்டு போனாங்க." கூறியவளுக்கு கேவலோடு அழுகை வர வீட்டினர் அறியா வண்ணம் அடக்கிக் கொண்டாள்.

"மண்ணி... எதுக்குடி இப்டி அழுற, நா வேணும்னா அங்க வீட்டுக்கு வரவா?"

"வேணாம். வீட்ல ஏதோன்னு சந்தேகப்பட்டுட்டாங்கன்னா, அப்பாக்கு கஷ்டமாகிரும்."

இவள் மணிமேகலை. பவித்ராவின் அன்புத்தோழி. தன் அண்ணன் ஏற்கனவே காதல் கொண்டு அதை இழந்து திருமண வாழ்வை துறந்தவன் என்று அறியாதவள். காலேஜ் படிக்கும் போதே தனக்கு அண்ணியாகிவிடு என அண்ணி, மணி இரண்டையும் கோர்த்து 'மண்ணி' என்றே அவளை அழைப்பது வழக்கம். வீட்டில் தேவைக்கு அண்ணி என்ற அழைப்பு எப்போதாவது வரும்.

"மண்ணி, நா அவன் கூட பேசுறேன். நீ சும்மா அழாத. வீட்ல இருக்கவங்க கூட ஹாப்பியா இரு. அண்ணா நைட் வந்துடுவான்."

சரியென்று கூறி அழைப்பை துண்டித்தாள் மணிமேகலை. கடந்த நாட்கள் இருவருக்குள்ளும் ஏற்பட்ட சிறு சிறு வார்த்தை பரிமாற்றம் மனங்களிடையே பிணக்கை ஏற்படுத்த இரண்டு நாட்களாக கொஞ்சம் மிகைப்பட்டு இன்று காலை தன்னை அடிக்க கை தூக்கிடும் அளவுக்கு வந்து விட்டதை எண்ணி மிக ரணப்பட்டாள்.

தேன் கலந்த வெள்ளைச்சந்தன நிறமவள். மெல்லிய உடல் வாகு கொண்டவள், இடைத்தொட்ட கூந்தல், எந்த ஒப்பனையுமே இல்லாது பார்த்துக்கொண்டே இருக்க அழகு. தன் தோழியின் அண்ணன் என்றதும் வீட்டில் பேசி முடிக்க மறுப்பின்றி சரியென்றிருந்தாள். ஆனால் இவளை மணம் பேசிமுடித்த அன்றே அவளோடு அவன் பற்றி பகிர்ந்துக்கொண்டான்.

"பவிக்கு என்னைப் பற்றி தெரியுமா தெரில. நானாக சொன்னதில்லை. பட் என் லைப் லோங் ட்ராவல் பண்ற நீங்க தெரிஞ்சிக்கணும்னு நினைக்கிறேன். இப்போ இல்லன்னாலும் ஐந்து வருடங்களுக்கு முன்னால், நான் காலேஜ் போறப்ப இருந்தே ஒரு பொண்ணு லவ் பண்ணினேன். போத். பட், அவங்க வீட்ல பிடிக்காம அவ வேற லைப் செட்டில் ஆகிட்டா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட் ரொம்ப டீப் லவ் என்னோடது. அதுனால மனசலவுல இது என்னோட செக்கண்ட் மெரேஜ்னுதான் சொல்வேன். உங்களுக்கு ஓகேன்னா மட்டும் சொல்லுங்க. நான் வீட்ல பேசுறேன்."

அவன் பேசக் கேட்டுக் கொண் டிருந்தவள், மனம் சற்று வேதனைக் கொண்டாலும், ஏதும் யோசிக் காமலேயே அவனை ஏறிட்டாள்.

"அப்போ அவங்களை லவ் பண்ணுன போல காலம் பூரா என்னையும் பண்ணுவீங்களா?" - அவள் கேட்க, அவனோ ஆச்சர்யமாய் பார்த்தான்.

"உங்களால முடியும்னா சொல் லுங்க. நான் வீட்ல பேசுறேன், பவிக்காகவெல்லாம் யோசிக்க வேணாம்."

கூறியவள் புன்னகைத்துக் கொண்டே உள்ளே சென்று விட்டாள். இனி என்ன, திருமணம் இனிதாய் நடந்தேற ஒருவருக் கொருவர் ஒவ்வொரு விடயத்திலும் ஒருவரை ஒருவர் புரிந்துக் கொள்ள முயற்சித்தபடியே வாழ்ந்தனர்.

அவனுடனான வாழ்வை முழுதாய் ரசித்து ருசித்து வாழ்ந்தாள் மணிமேகலை. மனைவி கணவனி டையான பிணைப்பைக் கண்ட ஈஸ்வரிக்கு மனம் சந்தோஷப் பட்டாலும், இத்தனை வருடங்கள் அவர்களுடன் இல்லாத மகனின் முகச் சிரிப்பு இப்போது பார்க்க அதை தனக்கும் வேண்டும் என்று எண்ணினார் போல.

உதயும் காலேஜ் செல்லும் போதிலிருந்தே அமைதியாகி பின்னர் ஏற்பட்ட மனக்காயம், பகிர்ந்திட முடியா நிலை என வீட்டில் பேச்சை குறைத்திருந்தான். இப்போது மனைவியின் வரவால் அது மாற்றமடைய வீட்டினரோடு சகஜமாய் பேச நினைத்தாலும் அது முடியாமல் எப்போதும் போலவே இருந்துக் கொண்டான்.

அண்ணன் மகிழ்வாக இருப்பதைக் கண்டுகொண்ட பவித்ரா எப்போதும் மணிமேகலையை கிண்டல் செய்துக் கொண்டே இருப்பாள். அவள் திருமணவாழ்வு அவளையும் பக்குவப் படுத்தியிருந்தது.

நாட்கள் செல்ல இருவருக்கு மிடையான உறவில் வழு அதிகரித்ததோடு, புரிதல் நன்றாகவே இருந்தது. எப்போதும் மாலை பின்னே அவன் வேலை விட்டு வந்ததும் அவன் வியர்வையில் இவளை அழுக்காக்கிய பின்னரே இருவருமாக ஒன்றாய் அமர்ந்து தேநீர் அருந்துவது வழக்கம்.

ஒருமுறை உதயன் வேலை விட்டு வரும் வரை எப்போதும் போல மேகலை அலைபேசியை நோண்டிக் கொண்டு வாயிலில் அமர்ந்திருந்தாள். அப்போது அங்கே வந்த ஈஸ்வரி, "மேகலா, மேல மாடில இருக்க துணியெல்லாம் மடிச்சு எடுத்துட்டு வந்துரு."

"சரிங்கத்த." கூறியவள் வாயிலையும் அலைபேசியையும் பார்த்துக் கொண்டே மாடியிலேறினாள். கீழே வர, அன்னையும் மகனும் ஒன்றாக அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள். இவளை கண்டவன், முறைத்துக்கொண்டே முகம் திருப்ப, இவள் முகம் வாடிப்போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லமாய் உள்ளே சென்று அலமாரியில் துணிகளை வைத்துக் கொண்டிருக்க, பின்னோடு காலடி சத்தம். இவளோ வந்து அணைப்பான் என்றெண்ண, அவன் குளியல றைக்குள் புகுந்துக் கொண்டான். முட்டிக்கொண்டு வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

"மேகலா..." - ஈஸ்வரி மீண்டும் அழைத்தார்.

"இதோ வர்றேன் அத்த."

அதன் பின், இரவுணவுக்கான வேலைகள் வரிசையாக வர, குளியலறையில் இருந்து வந்த வனுக்கோ மனைவி அறையில் இல்லாதது இருந்த ஊடலை கோபமாய் மாற்றியது. சமையலறை சென்று பார்க்க அவள் அந்தப்பக்கம் திரும்பியிருந்தாள். இவனைக் கண்ட ஈஸ்வரி, "என்ன வேணும்டா?" என்றிட,

"ஒன்னுமில்லமா". - சொல்லிவிட்டு முன்னறைக்கு சென்று விட்டான்.

அந்த பேச்சுக் குரலில் திரும்பிய வளுக்கு அவன் முதுகுப் பக்கமே காணக் கிடைத்தது.

இரவு உணவை உதயன் எப்போதும் நேரம் சென்றே உண்ணுபவன். அன்று அன்னையோடே உண்ண அமர்ந்து விட்டான்.

ஈஸ்வரிக்கு அத்தனை சந்தோ'ம். ஆக இத்தனை நாள் மேகலைதான் அவனை இவரோடு நேரம் செலவிட அனுமதிக்கவில்லை. அவர் மனதில் அப்படியே குறித்துக்கொண்டார். ஏதும் கூறாமல் மணிமேகலையும் அவர்களுக்கு பரிமாறினாள்.

## அத்தியாயம் - 03

இரவு படுக்கைக்கு வர இந்த ஒன்றரை வருடத்தில் இவ்வளவு நேரம் இருவரும் ஒருக்குவருக்கொருவர் பேசாது இருந்ததில்லை. அதன் கடினத்தை தாங்க முடியாத பெண்ணோ,

"மாமா..." என்றிட, எப்போதும் அவர்களுக்கான தனிமையில் சொல்லப்படும் அந்த வார்த்தையில், தன்னை இழப்பவன் இன்றோ அவள் கண்ணீர் குரலில் திரும்பி பார்க்க முன்னமே அவனை பின்னோடு அணைத்திருந்தாள்.

"நான் வேணும்னு பண்ணல மாமா. கொஞ்சம் வேல அதான்." - அழுதுக்கொண்டே கூறினாள்.

"கலை, நா வர்றப்பவே உன்ன தேடுவேன் தெரியும்ல."

"ஹ்ம்ம்ம்..."

"அப்றம் என்ன?"

"குளிச்சிட்டு வெளில வந்தா அப்போவும் போய்ட்ட."

"அது அப்போவும் வே..." - அவள் முடிக்கவில்லை அவளை தன்பக்கம் திருப்பியவன் அவள் முகம் பார்க்க, அவளை அப்படியே மீண்டும் அணைத்துக்கொண்டான்.

"ஹேய் எதுக்குடி இப்டி அழுற?"

"நீங்க ரொம்ப கோபமா இருக்கீங்க. என்கிட்ட பேச கூட இல்ல. என்னை திட்டிட்டா கூட பரவால்ல. பேசாம இருக்க வேணாம் கஷ்டமாயிருக்கு."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே பேசிப் பேசி ஊடல் காதலாகியது அன்றிரவு.

இதுவே நாட்கள் செல்லச் செல்ல அவ்வப்போது நடந்தேற, வாழ்வில் இதுவெல்லாம் இயல்பென்று உதயன் பழகிக் கொண்டான். ஆனால் மேகலையின் மனதில் அதன் தாக்கம் பெரியதாக இருந்தது.

அத்தனை நேர்த்தியாக வீட்டு வேலைகளை செய்த போதிலும், அவர் தேவைக்கேட்ப எதுவும் வீட்டில் இருப்பதில்லை என எதிலும் அவளை குறைக் கூற ஆரம்பித்தார் ஈஸ்வரி. அவர் இயல்பை நன்கு புரிந்த மேகலை எதையும் காதில் வாங்கிக்கொள்வதில்லை.

அவ்வப்போது வந்து செல்லும் பவித்ராவும் அன்னையிடம் மேகலை அறியாது, "இப்படி இருக்காதம்மா, அவளுக்கு பிடிச்சமாதிரி வீட்ட வச்சுக்க விடு." என்று கூறிவிட்டே செல்வாள். இப்படியாக நாட்கள் நகர, ஒருநாள் உதயன் வரும் நேரம் கடந்திருந்தது. அவன் அலைபேசியும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

என்னவென்றாலும் அழைத்து கூறுபவன் என்பதால் யோசனை யாகவே இருந்தாள் மணிமேகலை.

"என்ன இந்த பையனை இன்னும் காணோம்."

"அத்தை ஆபிஸ்க்கு கால் பண்ணி பார்க்கட்டுமா?"

"வேணாம், அப்றம் திட்டுவான் அங்கெதுக்கு பண்ணீங்கண்ணு. கொஞ்ச நேரம் பார்க்கலாம் வந்துரு வான்." - கூறியவர், அவளுடன் வாயிலில் சிறிது நேரம் அமர்ந்திருக்க, மேகலா அவனை தொடர்புகொள்ள முயற்சித்துக்கொண்டே இருந்தாள். ஈஸ்வரி உள்ளே சென்று திரும்பி வந்தவர்,

"இப்போதான் ஆபிஸ்க்கு கால் பண்ணேன். ஏதோ அவங்க பேக்டரில பிரச்சினையாம். முடிச்சிட்டு இப்போதான் கிளம்புறேன், இப்போ வந்துருவேன் என்று சொன்னான்."

"ஓஹ்! சரிங்க அத்தை." - கூறியவள் அப்போதும் அவ்விடம் விட்டு நகரவில்லை. அவன் வண்டிச்சத்தம் கேட்கும் மட்டும் அப்படியே அமர்ந்திருந்தாள். அவன் வண்டி விட்டிறங்கவும்,

"ரொம்ப வேலையா மாமா?" - கேட்டப்படியே அவனருகே செல்ல,

"ரொம்ப அழுக்கா இருக்கேன் கலை. பசி வேற. சாப்பாடு எடுத்துவை குளிச்சிட்டு வந்துர்றேன்."- கூறிக்கொண்டே வீட்டினுள் நுழைய, "மாமா பத்தே நிமிஷம் பண்ணி டறேன்."

"இவ்ளோ நேரம் அப்போ என்ன பண்ணிட்டு இருந்த?" - வேலைத்த ளத்தில் இருந்த கோபத்தை மனைவி மீது இறக்கிவைத்தான்.

"நீ வரலன்னு இவ்ளோ நேரம் அந்த வாசலை விட்டு எந்திரிக்கல."
"நீ ஆபிஸ்க்கு கால் பண்ணுனி யாம்மா? "

"ஆமாடா. லேட் ஆனதும் என்ன ஏதுன்னு பதறுமா இல்லையா?" அவனோ மனைவியை பார்க்க, மீண்டும் திட்டுவானோ என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சியவள், அவசரமாக சமையல றைக்குள் புகுந்துக் கொண்டாள்.

இரவுணவை உண்டு முடிக்கவுமே உதயனுக்கு அத்தனை களைப்பு. இவள் அறைக்கு வரும் போதே உறங்கிவிட்டிருந்தான். விடியலில் மீண்டுமாய் வேலைத் தளத்திலிருந்து அழைப்பு வர, இவள் உறக்கம் களைக்காது சொல்லாமலே கிளம்பியிருந்தான். எழுந்து தேடியவள் முன்னறைக்கு வர ஈஸ்வரியிடம்,

"அத்த, மாமா கிளம்பிட்டாங்களா?"
"நானும் இப்போதான் எந்திரிக்கிறேன். அவன் போனது கூட தெரியாம என்ன தூக்கம் உனக்கு?"

"அசந்து தூங்கிட்டேன் போல."
"ஆமா பொல்லாத வேலை செஞ்சு உடல் களைச்சு போய்டுச்சுல்ல."
அவனுக்கு அழைப்பெடுக்க, அவனோ எடுக்கவில்லை. ஈஸ்வரி மீண்டும் இரண்டு முறை எடுக்கவும்,

"ம்மா, நா பிஸியா இருக்கேன் அப்றமா பேசுறேன்." என்று வைத்துவிட்டான்.

எதற்கென்றே தெரியாது மனதில் சிறு கீறலாய் ஒரு வலி. இப்படியாக சில நாட்களாய் நடந்தேறும் ஒரு சில நிகழ்வுகளால் அவ்வப்போதும் கொள்ளும் ஊடல் மறைந்து போகாது ஒன்றோடு ஒன்று பிணைய ஆரம்பித்தது. அன்று மாலை நேரமாகவே வீடு வந்திருந்தான் உதயன். ஈஸ்வரி வெளியில் சென்றிருந்தார்.

அவர்களுக்கே உண்டான மணித் துளிகளாகிப் போனது அந்த மாலைப் பொழுது. மனம் கொண்ட சஞ்சலங்கள் தூசாய் போனது. நிறைய பேசினார்கள், இடையே வந்த ஊடல் மொத்தம் உடைந்து போக பேசியே தீர்த்துக்கொண்டார்கள். ஈஸ்வரியை உணர்ந்துக்கொண்ட உதய் மனைவிக்கும் சார்பாக விரும்பவில்லை, அன்னையிடம் கேட்கவும் நினைக்கவில்லை, கண்டுக் கொள்ளாது கடந்து போக நினைத்துக் கொண்டான். உணர்ந்து நடந்துகொள்ள புரிந்துக் கொண்டான். இதழ் முத்தம் இளைப்பாறி, தேநீர் பரிமாறி, காதல் மழை குளிர் காய்ந்தனர் இருவரும்.

"கலை, இன்னிக்கு க்லையன்ட் மீட் பண்ண போனப்ப, லாவண்யாவை மீட் பண்ணுனேன்."

"பேசினங்களா? பேமலி கூடவா வந்திரிந்தாங்க? பசங்க இருந்தாங்களா?"
அவளே கேள்வி கேட்டுக்கொண்டு போக,

"என்னையும் பேச விடேன். அவ ஹஸ்பண்ட் கூடத்தான் வந்திந்தா. இன்ட்ரோ பண்ணுனா சகஜமா காலேஜ் மெட்னு."

"பின்ன இவருதான் என் லவர்னு சொல்வாங்களா?"

"அடியே, அப்டில்லடா. எனக்கு ஒரு நிமிஷம் பேச்சே வரல. ரொம்ப நாள் அப்றம் பார்த்தது. அவ எப்படித்தான் பேசுனாலோ."

"பொண்ணுங்கன்னா அப்படிதான் மாமா. காதல் எல்லாருக்கும் சாத்தியமில்லை. வீட்ட யோசிக்கிற துன்னா எதுக்கு காதலிக்கிற கேட்பாங்க. வீட்டு நிலை யோசிச்சுதான் காதல் வருமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? அவங்க வளர்ந்த விதம் ஏதோ விதத்துல திருமணத்தை, இன்னொருத்தரை அதே மனசுல ஏத்துக்க வச்சுரும். அப்றம் அந்த வாழ்க்கையை இயல்பா கடக்க ஆரம்பிப்பாங்க. ஆனா அவ மனசுகுள்ள இருக்க போராட்டம் அவளுக்கு மட்டுமே தெரியும்."

அவள் பேச கேட்டுக் கொண்டிருந்த வன் அவளை இழுத்து அவள் இதழில் முத்தமிட்டான்.

"தேங்ஸ் டா. நீ வரலைன்னா நா என்னாகியிருப்பனோ தெரில. ஒன்னு இழந்துதான் ஒன்னு கிடைக்கும்னு இருக்கு. எந்த வி'யத்துலயும்."

**அத்தியாயம் - 04**

நாட்கள் உருண்டோட, ஒரு மாலை மணிமேகலை வீட்டின் வாயில் நின்று பார்த்திருக்க, உதயன் நடந்து வந்துக்கொண்டிருந்தான்.

"மாமா வண்டி எங்க? என்னாச்சு" கேட்டுக்கொண்டே அவன் தோள் தொங்கிய லேப்டாப் பையினை எடுக்க,

"அம்மா எங்க?"

"தெரில வெளில போனாங்க."

"நீ இங்க நின்னு என்ன பண்ற?"

"நீங்க வர்ற வரைக்கும் வெய்ட் பண்றேன்."

"ஏன் உள்ள இருந்தா வீட்டுக்குள்ள வரமாட்டனா?"
அவன் கோபமாய் இருப்பதை உணர்ந்தவள், "இனி இருக்கல மாமா." கூறிக்கொண்டு அவன் கைப்பற்ற, "நான் போய் குளிச்சிட்டு வரேன்." என அறையினுள் சென்று விட்டான். அதன் பின்னும் கோபமாகவே இருக்க, இவள் பேச்சு வளர்க்கவில்லை.

அவன் கோபத்திற்கு, வரும் வழியில் அன்னை பேசிகொண்டிருப்பதை கேட்க நேர்ந்ததே காரணம் என அறியவில்லை இருவரும். ஆனால் ஈஸ்வரி என்னவென்று கேட்க சாதாரணமாய் எப்போதும் போலவே உரையாடினான்.

மேகலைக்கு தன் மீது ஏதோ பிழை என்பதாக நினைத்து வருந்திக் கொண்டிருந்தாள். இரவும் அவளோடு பேசாது உறங்கி விட்டான். காலை எழுந்து வேலைக்கு தயாராக, அவளாகவே சென்று,

"மாமா, தப்பா ஏதாவது பண்ணிருந்தா சாரி. பேசாம இருக்க வேணாமே."
"அதெல்லாம் ஒன்னில்ல."

"இருக்கு, அதான் உங்கம்மா கூட மட்டும் நல்லா பேசுறீங்க என்கிட்ட பேசல." இன்றுதான் இருவரிடையே அன்னை வந்திருந்தார். அப்போதும் பேசாதிருக்க, தானே ஒரு குற்றத்தை ஏற்றுக்கொண்டு,

"நா வெளில நின்னு யாரையும் பார்க்கல, இதோ இந்த போன்ல கூட ஏதாவது கதை படிச்சிட்டிருப்பேன். மத்தபடி என் மனசுல ஒன்னில்ல. உங்களை முதல் கல்யாணம் தான் பண்ணிருக்கேன்."

"என்ன சொல்ல வர்ற?" அவன் முக மாற்றத்தை கண்டவள், அவன் கிண்டல் செய்வான் எனும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நோக்கிலேயே அவள் பேசியது. அத்தனை புரிதல் இருந்தது அவர்களிடம். ஆனால்,

"மாமா, நா சும்மா..." - பேசாத எனும் விதமாய் கை காட்டியவன் அந்த கோபத்தை தொடர எண்ணி, அறைவிட்டு வெளியேறப்பார்க்க, அவனை சீண்டி சரிகட்ட எண்ணி,

"ஓஹ் உங்க முன்னால் டாட் டாட் பார்த்ததுல இருந்து என்னை கண்டுக்கலல்ல. என்னை கலட்டி விட்டுட்டு அவளை சைட் அடிக்கலாம்னு பார்க்குறல்ல."

"மேகலை!"
- அவன் கை உயர்த்தியிருந்தான். அவன் கோபப் பார்வையில் நடுங்கித்தான் போனாள்.

"என்னை இவ்வளவு மட்டமாதான் நினச்சிருக்கியா நீ?" இந்த வார்த்தை பேசும்போதே ஈஸ்வரி இவர்கள் அறைவாயிலுக்கு வந்திருந்தார். இதை சந்தர்ப்பமாகக் கொண்டவன்,

"உனக்கு இனி இங்க சரிப்பட்டு வராது. கிளம்பு முதல்ல. உனக்கு யார்கூட எப்படி இருக்கணும்னு தெரில."

"மாமா..." தொண்டைக்குழியில் சிக்கி வார்த்தை நின்று விட்டது.

"வண்டில இருக்கேன் கிளம்பு சீக்கிரம்." -கூறியவன் சென்றுவிட்டான். அவளோ ஈஸ்வரியை பார்க்க, அவரோ பேசாது சென்றுவிட்டார். தன் வார்த்தை அத்தனை காயம் செய்திடும் எண்ணாதவளோ, அவன் தண்டனை ஏற்று அவள் வீட்டுக்குச் சென்றாள்.

இதோ ஒரு வாரம் கடந்து விட்டது. அவனோ பத்து நாட்கள் மலேசியா சென்றிருந்தான். துவண்டு மொத்தம் தன்னிலை இழந்து நடமாடிக் கொண்டிருந்தாள் மணிமேகலை.

"பவி..."

"சொல்லுண்ணா?"

"ரெடியாகிட்டியா?"

"ஆமாண்ணா. மண்ணிய கூட்டிட்டு அப்படியே வந்துருவோம்."

"சரிடா."

அலைபேசியை வைத்தவன் அன்னையிடம், "ம்மா, இதான் கரெக்ட். பவி வாடகை கட்டிட்டு அவங்க செலவும் பார்த்துக்க கஷ்டப்படறாங்க. சோமாப்ள கொஞ்சம் செட்ல ஆகுற வரைக்கும் இங்க இருக்கட்டும். அவர் பிரியப்படலைன்னாலும் நான் ரொம்ப பேசி சம்மதிக்க வச்சிருக்கேன். எப்போவும் எங்க வீட்ல இருக்காருன்னு பேச்சோ, மரியாதை குறையவோ கூடாது. அதோட மேகலை தனியா இருந்தாத்தான் எல்லாம் சரியா வரும். நீ உன் விருப்பம் போல இங்க இருக்கலாம். நானும் அப்பப்போ வரத்தான் போறேன்."

"முன்ன போல இல்லம்மா. இந்த காலத்துல ஒரு பத்தடி தள்ளி தூரமா நின்னாதான் உறவு நிலைக்கும்."

"மேகலை வீட்லயும் ஏதும் நம்மளை தப்பா எடுத்துக்க கூடாது. என்மேல அவங்கப்பா வச்ச நம்பிக்கையை நான் எப்போவும் காப்பாத்தணும்னு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்குறேன்."

தன் அன்னை நோகாமலும், பதில் மறுத்து பேசாத வகையிலும் பேசி முடித்தவன்,

"அவங்களை அழைச்சிட்டு வர சொல்லி பவிய அனுப்பிருக்கேன். நாம கிளம்பலாம்."

"சரி" என்று அவனோடு கிளம்பினார் ஈஸ்வரி. நேற்று மாலையே மேகலை வீட்டுக்கு சென்று அவர் தந்தையோடு பேசியிருந்தான் உதய். இதை மேகலையும் அறிந்திருக்கவில்லை.

அவன் கம்பனியில் அவனுக்காக கொடுக்கப்பட்ட வீட்டில் தனிக் குடித்தனம் செல்ல முடிவெடுத்தான். நண்பர்களின் உதவியில் வீட்டுக்கு தேவையான மொத்தம் இந்த ஒரு வாரத்தில் செய்து இதோ குடிவந்தும் விட்டார்கள்.

அனைவரும் மகிழ்ந்து வாழ்த்தி விடைபெற்று செல்ல இதோ இருவரும் தனித்து. அவனையே பார்த்திருந்தாள். எத்தனை நேரம் தான் கோபம் என்று அவனும் நடிக்க.

அவன் இருந்த இடத்திலிருந்து எழுந்து நிற்க, அவளோ அவனை முகம் நிமிர்த்தி பார்த்தாள். "வா" என்பதாய் கண் மூடியதுதான் தாமதம், திறக்க முன்னே அவன் மார் கட்டிக்கொண்டாள். அவன் மழை மேகம்.

"மாமா, சாரி மாமா..."

"நாந்தான் ரொம்ப சாரி." அவளை இறுக்கிக்கொள்ள, அவனை தலை உயர்த்திப் பார்த்தாள்.

"ரொம்ப காக்க வச்சுட்டேன்ல. ரொம்ப அழவச்சுட்டேன்ல." அவள் கண்களில் அழுந்த இதழ் பதித்தான்.

"அன்னிக்கு பொய்யாதான் கோவிச் சிட்டேன்."

"தெரியும் மாமா, ஆனா நான் அப்டி பேசியிருக்க கூடாது."

"ஆமா ரொம்ப தப்பு. அதுக்கெல்லாம் தண்டனை இனி தினமும் இருக்கு."

கூறியவன் அவளை அழைத்துக் கொண்டு இதுவரை திறக்காத அவர்கள் அறைக்குள் நுழைந்தான். அறையில் வெளி தாள்வாரத்தில் இருந்த பின்னல் இருக்கையில் அவளை அமர வைத்தான்.

அவளுக்கு கீழே அமரந்தவன், அவள் கையிரண்டையும் அவன் கன்னத்தில் வைத்துக்கொண்டு, "ஹாப்பி பர்த்டே பொண்டாட்டி." என்றான்.

அவன் நேசத்தின் மழையில் மனம் குளிர, அவனை வாரி அணைத்துக் கொண்டாள், மழை மேகமாய் அவளும்.

●●●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சக் கனல்

- கலாபூஷணம் கிண்ணியா சபீனா -

‘நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா, பழகத் தெரிந்த உயிரே உனக்கு விலகத் தெரியாதா, உயிரே விலகத் தெரியாதா.’ - வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்த அந்தப் பேருந்தில் ஒலித்துக் கொண்டிருந்தது அந்தப் பாடல்.

“நித்திரையா அஸீமா” என்றாள் நதா.

“என்ன. ஒனக்குத் தூக்கம் வருதா நதா?”

“என் தோளிலே சாஞ்சிக்கோ” என்றாள் நதாவிடம் அஸீமா.

“முறிகண்டி வரை முழிச்சுக் கொண்டுதான் இருந்தேன் அஸீமா.”

“அதுக்குள்ள தூக்கம் போயிட்டுது.” என்றாள் நதா.

அஸீமாவுக்கு எங்கே நித்திரை வந்தது. அனலிடை மெழுகாக உருகிக் கொண்டிருந்தது அவள் உள்ளம். அந்தப் பாடலும் அவள் மனதைப் பாடாய்ப் படுத்தியது.

ஆம். பழகத் தெரிந்த எனக்கு விலகத் தெரியாமல் தான் தடுமாறிக் கொண்டிருக்கிறேன். என்ன செய்வது என ஒரு ஏக்கப் பெருமூச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டபின் சிந்தனையில் ஆழ்ந்தாள் அஸீமா. யாழ் பல்கலையில் பைனல் இயரில் கற்றுக் கொண்டிருந்தவன் கிண்ணியாவைச் சேர்ந்த கரீம். அவன் அஸீமாவின் மீது இரக்கம் காட்டினான்.

வீட்டிலே செல்லப் பிள்ளையாக வளர்ந்த அஸீமா, எதற்கெடுத்தாலும் சிறு பிள்ளையாய் அழுவாள். அப்போது அன்றலர்ந்த ரோசா வாகிடும் அவள் வதனம். பல்கலையின் பகிடிவதைகளின் போதும் பயந்துகொண்டு தடுமாறுவாள். அப்போதெல்லாம் கரீம் அனுதாபங்களைச் சொரிவான். காலப் போக்கில் அவள் மேல் வைத்த அன்பு காதலாகியது.

தன் காதலைப் பல வழிகளிலும் வெளிப்படுத்தினான் கரீம். ஆனால், அஸீமா விளங்காதது போலிருந்தாள். விளங்கிக் கொண்டதைக் காட்டி கொள்ளாமலும் இருந்தாள். காலப் போக்கில் நண்பன் அன்வர் மூலம் அஸீமாவுக்குச் செய்தி அனுப்பினான் கரீம்.

உடன் பதில் சொல்லாமல் இருந்தாலும் மெல்ல மனமும் கனிந்தது. மெல்ல அஸீமாவின் பதிலையும் பெற்றுக் கொண்டான் கரீம். ஆனால், அஸீமாவின் வீட்டுக்கு வி'யம் தெரியாது. அந்தப் பொறுப்பை கரீம் எடுத்துக் கொண்டான்.

தனது பெற்றோரைப் பெண் கேட்டு அஸீமாவின் வீட்டுக்கு அனுப்பினான். அஸீமாவின் விருப் பத்தை அறிந்த பின்னரே அவளின் பெற்றோரும் அதற்கு ஒத்துக் கொண்டனர்.

"வலிய வந்து பொண்ணுக் கேட்டா யோசிச்சுத்தான் கொடுக்க ஒத்துக் கொள்ளணும்." என்று பெரியவங்க சொல்வாங்க என்பதையும் நினைத்துக் கொண்டாள் அஸீமாவின் தாய். அஸீமாவைத் தேடித் தேடி கரீம் வந்தாலும், அவள் அளவாகத் தான் பழகினாள்.

ஆனால், கிண்ணியாவில் வாழும் கரீமின் தந்தையும் தாயும் அஸீமாவின் பெற்றோரிடம் மாதாந்தம் பணம் கறக்கத் தொடங்கினர். விரும்பியோ விரும்பாமலோ மாதம் 50 ஆயிரம் 60 ஆயிரம் கேட்டு வாங்கிக் கொண்டே வந்தனர். மூன்று பெண்களைப் பெற்று வளர்த்தவர்கள் தன் பிள்ளைகளைப் படிக்க வைக்கப் பகீரதப் பிரயத்தனம் எடுக்க வேண்டி இருந்தது. வாப்பாவின் வருமானமும் போதாது. அதனால் உம்மா, இடியப்பம் அவித்துக் கடைகளுக்குப் போடுவது வழக்கமாகும். உம்மா காலையிலே மூணு மணிக்கு எழும்பி இடியப்பம் அவிப்பாங்க.

ஆறு மணிக்கெல்லாம் வாப்பா அதை கடைக்குக் குடுத்துட்டுத்தான் வேலைக்குப் போவாங்க வாப்பா. படிச்ச பெண்ணுக்கு மாப்பிளை தேடுவது என்பது பெருங்கஷ்டம் என்பதும் அவங்களுக்குத் தெரியும்.

"டொக்டர் மாப்பிள்ளைக்கு மவுசுதான். என்ன செய்வது, சமாளிப் போம் என உம்மா ஆதங்கத்தையும் வேதனையையும் அடக்கிடுவாங்க. இரண்டு பெண் களைப் படிக்க வெச்சி, கலியாணம் முடிச்சிக் குடுத்துட்டோம். இன்னம் ஒன்னுதானே" என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொள்ளுவாங்க. உம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்குத் தான் எவ்வளவு கஷ்டம்.

"மூன்று பெண் பிள்ளைகளைப் பெத்து, நல்லா வளத்துக் கலியாணம் முடிச்சிக் குடுத்தவங்களுக்கு அல்லாஹ் சொர்க்கம் தருவான் என்று நாயகம் (ஸல்) அவங்க சொல்லி இருக்காங்க" என்று உம்மா அடிக்கடி சொல்லுவாங்க.

"தன்னுடைய துன்பத்த தாங்கிக் கொள்ள இந்த ஹதீஸ் அவங்க மனசுக்கு ஆறுதல் அளிக்கும். என்றாலும் இந்தக் காலத்து "மாப்பிள்ளை ஜாஹிலிய்யத்தை" நினைத்து அழுவாங்க.

"வவுனியா... வவுனியா... இறங்கிறவங்க இறங்குங்கோ"-கண்டக்டர் போட்ட சத்தத்தில் சிந்தனை கலைந்தது அஸீமாவுக்கு. சிறு சலசலப்பின் பின்னர், மீண்டும் பஸ் தன் பயணத்தைத் தொடங்கியது.

அஸீமாவின் மனதில் சிந்தனைக் குதிரை மீண்டும் ஓடத் தொடங்கியது.

ஆம்புளப் புள்ள பெத்தவங்க போடும் அட்டகாசம் சொல்ல முடியாது. உண்மையில் கரீம் நல்லவனா? கெட்டவனா? என்று புரிய முடியலையே. அவன்ட உம்மா பளீலா, எங்கம்மாக்குக் கோல் எடுத்து ஒரே தொல்லை குடுக்கிறது. "நாங்க யாழ்ப்பாணத்திலே இருந்து வந்திட்டோம். அஸீமாட உம்மா சோறு அனுப்புவாங்க எனா? என்று எங்க சின்ன மகள் கேக்கிறா." என்று சொல்லிச் சிரிப்பாவாம்.

"அப்பிடின்னா எங்களுக்கு சோறு அனுப்புங்க. அது தாங்க. இது தாங்க." என்று கறக்கிறது தான். "என்ன செய்வது. பாடுதான்." என உம்மா அலுத்துக் கொள்வாங்க.

"கரீமுடைய உம்மா பளீலா போடும் கண்டிஷனுக்கெல்லாம் எங்கம்மா இணங்க மாட்டாங்க. இவன் கரீமை நம்ம மறந்திடுவோம்." என மனதைத் திடப்படுத்திக் கொண்டாள் அஸீமா.

"கரீமின் குடும்பம் எங்களை கருவறுப்பதை அறியாதவன் போலிருக்கிறானா? அவனை நம்ப முடியலையே. மாப்பிள்ளையைப் பெற்றவங்களுக்கு மணப்பொண்ணைப் பெத்தவங்க அடிமையாகத்தான் வாழ வேணுமா. அவங்க கேட்கிற நேரமெல்லாம் கேட்ட பணமும் பொருளும் குடுக்கத் தான் வேணுமா. என்ன நியாயம். பாவம் எங்க உம்மா வாப்பா. இதுக்கு என்ன தான் தீர்வு"

என நினைத்தவளின் விழிகள் நனைந்தன.

"ஏற்கனவே ரெண்டு தாத்தா மார்களை செலவழித்துப் படிக் கவெச்சி, வீடு கட்டி நெற வேத்தினாங்க. இப்ப என்னோட படுறாங்க பாடு. அவங்கட ஆசாபாசங்களைத் தியாகம் செய்து வாழுறாங்க. எனக்கு இப்படி ஒரு வாழ்க்கை தேவை இல்லை. கரீமிடமிருந்து விலகிடுவோம்." என்று எண்ணியவள் கண்ணயர்ந்து விட்டாள்.

"அஸீமா இறங்குவோம். எழும்புங்க." என்ற நதாவின் குரல் கேட்டு விழித்தவள் திருகோணமலை பஸ் ஸ்டாண்டில் எல்லோருடனும் இறங்கினாள். அங்கு நதாவின் வாப்பா, அஸீமாவின் வாப்பா எல்லோரும் வந்திருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீமாவின் தகப்பனாரின் உந்துருளி கிண்ணியாப் பாலத்தைத் தாண்டும் போது, சூரியோதயம் அவளுக்குக் கண் கொள்ளாக் காட்சியளித்தது. மெய்மறந்து ரசித்துக் கொண்டாள் அஸீமா. வீடு வந்து சேர்ந்ததும் உம்மா ஓடி வந்து உச்சி மோந்து மகிழ்ந்தார்.

"பொழுது புலர்ந்தாலும் தன் வாழ்வில் விடியல் வருமா?" என்று ஏங்கினார் உம்மா.

அந்த ஏக்கத்தில் வந்த மூச்சுடன் நெஞ்சக் கனல் பறந்தது.

"ஆதவனின் கதிர்கள் அவனியை அழகு படுத்துவது போல், தன் வாழ்வையும் தான் கற்கும் கல்வி, அழகு படுத்தும்." என நம்பினாள் அசீமா.

"தம்பி... தம்பி..." என்று அசீமாவின் வாப்பாவை கூப்பிட்ட சத்தம் கேட்டு வெளியே வந்தார் உம்மா.

"எங்க புள்ள ஒங்க வாப்பா." என்றவாறு அனிபா நானா வாசலில் நின்றார்.

"யாரது அனிபா நானாவா? இப்ப தான் மகளக் கூட்டி வந்தாங்க. இருங்க நானா. வருவாங்க" என்று சொல்லவும்,

"யாரது அனிபா நானா தானே. இந்தா வந்திட்டேன்." என்றவாறு வரவும் சரியாக இருந்தது.

"தம்பி நான் ஒன்று சொல்லுவேன் கோபிக்காதே. என்னத்துக்குப் பொம்பளைப் புள்ளயே அதிகமாப் படிக்க வைக்கணும். நமக்கேத்த மாதிரிப் படிக்க வெச்சி, அதுக்கேத்த மாதிரி மாப்பிளைய பாத்து முடிச்சி வெச்சா சரி தானே." என்று சொல்லிச் சிரித்தார் .

"உண்மைதான் நானா. நீங்க சொல்லுறதுதான் சரி." என்று சமாளித்தார்.

அனிபா நானாவுக்குக் கடன் கொடுக்க வேண்டி இருந்தது. அதைக் கேட்டுத் தான் அவர் வந்திருந்தார். அந்த வி'யத்தைச் சமாளித்து அனுப்பி விட்டு, 'சட்டம் போடக் காலையிலேயே வந்திட்டாரு' என மனசுக்குள் பேசிக் கொண்டார், அஸீமாவின் தந்தை. எத்தனை பேருக்குத் தான் கடன் கொடுக்குமதி இருக்குது!

"எல்லாம் குடுத்து முடிக்க எனக்கு அந்த அல்லாஹ் ஒதவி செய்வான். ஊர் ஆயிரம் தான் சொன்னாலும் நம்மட புள்ளையள் படிக்குதுகள். சமூகத்துக்குச் சேவை செய்யிறதும் அல்லாஹ்ட அருள் தானே." என்று ஆறுதல்பட்டுக்கொண்டார் அஸீமாவின் தகப்பனார்.

"ரெண்டு கிழமை லீவு போனதே தெரியல" என அலுத்துக் கொண்ட அஸீமா யாழ்ப்பாணம் செல்லும் ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தாள்.

உம்மா தட்டுவடை, முறுக்கு எனத் தின்பண்டங்கள் செய்து பார்சல் பண்ணிப் பயணப் பையில் வைத்தார்.

உம்மாவை விட்டுப் பிரிய மனமில்லாமல் வெளிக்கிட்டு வாப்பாவோடு அழுது கொண்டு விடை பெற்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது அவளின் அன்பான இறுதி விடை" என அவளுக்குத் தெரியாது. நீண்ட நாட்கள் யாழில் தங்கியிருந்து படிக்க வேண்டி இருந்தது. அதற்கிடையில் கரீம் அவளைச் சந்தித்து மனதினில் ஈரமுண்டாக்கி கைக்குள் போட்டுக் கொண்டான். இங்க அவனின் உம்மா காசு கேட்டு மாதா மாதம் துன்பம் கொடுத்தாள். இது சாடையாக வெளியில் கசிந்தது. அதனை விளங்கிப் புலன் விசாரணையில் சிலர் இறங்கினர். அதையறிந்த கரீமின் தாய் பளீலா, கண்ணகிபோல் அஸீமாவின் வீடு நோக்கி வந்தாள். தங்களின் பக்கத்துக்கான பலத்த நியாயப் படுத்தல்கள்செய்தார். அஸீமாவின் தாயாரை இயலுமான வரை வார்த்தை களால் காயப்படுத்தினார். "சத்தத்தை உயர்த்துவதால், தங்களின் பக்கம் பிழையில்லை என்பது அர்த்தமல்ல." எனப் பளீலாவிடம் கூறிப் பொறுமை காத்தாள். அதன் பின்னர், அஸீமாவின் தாயை நோக்கி, "ஒன்ன ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணிக் காட்டுறேன் பார்." எனச் சபதமிட்டு வெளியேறினார் பளீலா.

இவ்வளவும் நடந்து முடியப் புயல் அடித்து ஓய்ந்த மாதிரி இருந்தது. அது இன்னொரு புயலுக்கு ஆரம்பம் என்பது யாருக்கும் புரியல.

கரீமின் தாய் பளீலா, யாழ்ப்பாணம் சென்றாள். நம்பக் கூடிய மாதிரிப் பொய்கள் பல கூறி, அஸீமாவைக் கிண்ணியாவுக்குக் கூட்டி வந்தாள். அவளைத் தன் வீட்டில் வைத்துக் கொண்டு...

"உங்க மகள் எங்க ஊட்டுக்கு ஓடி வந்துட்டாள்." என்று மாப்பிள்ளையாம் கரீமின் தாய் பளீலா அஸீமாவின் தாய்க்குச் செய்தி அனுப்பினாள்.

அஸீமாவின் வீட்டில் மீண்டும் புயல். வீடு வந்த சனங்கள், ஆளுக்கொரு அபிப்பிராயமும் நீதியும் சொல்லி அஸீமாவின் குடும்பத்தைக் குழப்பி விட்டுக் கலைந்தனர்.

அஸீமாவின் தாயார் தாங்கொணாத் துயரத்தில் மூழ்கினார். "யா அல்லாஹ் ஏன் எனக்கு இந்தச் சோதனை. என் கண்மணி எங்களுக்குத் துரோகம் செஞ்சிட்டாளா. நம்ப ஏலாதே அல்லாஹ். நான் அப்புடி வளக்க இல்லையே நாயனே. எவ்வளவு கஷ்டங்களைத் தான் எனக்குத் தந்திட்டாய் அல்லாஹ். நீயே போதுமானவன்." என்று அழுதாள். வல்ல இறைவனிடம் பொறுமையை வேண்டினாள். புனித குர்ஆனை எடுத்து ஓதினாள். எல்லாத் துன்பங்களுக்கும் இறைவனிடம் தீர்வு தேடினாள். அமைதி காத்துக் கொண்டாள். காலச் சக்கரம் சுழன்றது.

டொக்டர் அஸீமாவின் கார் மஹரகம வைத்தியசாலையில் நின்றது. அவளின் சிந்தனையும் கலைந்தது.

"மாமி இறங்குங்க. ஹொஸ்பிடல் வந்திட்டுது மாமி." என்றாள் டொக்டர் அஸீமா.

அஸீமாவின் மடியில் இருந்த பெண் குழந்தையும் அழத் தொடங்கியது. மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் கரீமின் தாய் பளீலாவை 'அட்மிட்' பண்ண காரிலிருந்து அவர்கள் இறங்கிக் கொண்டிருந்தனர்.

**(யாவும் கற்பனை.)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை** - செம்மைத்துளியான்.



# மறந்தது மலருமா?

யன்னல் வழியே வந்த குளிர்ந்த காற்று அறையை நிரப்பியது. முக நூல் செய்தியின் ஒளி என் முகத்தில் பட்டு, மனதில் புயலை எழுப்பியது.

“நான் இன்னும் உன்னை காதலிக்கிறேன்,” என்று ஷாலினி எழுதியிருந்தாள்.

அந்த வார்த்தைகள் என் இளமைக் காலத்து நினைவுகளை ஒரு கணம் மீட்டெடுத்தன.

ஆனால், பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த மீராவின் மூச் சொலி, என்னை நிகழ்காலத்திற்கு இழுத்தது. மீரா... என் மனைவி, என் வாழ்க்கையின் தூண்.

நான் மெல்ல மறுபுறம் சாய்ந்து, அவளைப் பார்க்கின்றேன். அவளது முகத்தில் அமைதி! நாள் முழுவதும் அலுவலக வேலை, வீட்டுப் பொறுப்புகள் எல்லாவற்றையும் முடித்த களைப்பில் ஆழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த மெல்லிய வளையல், நாங்கள் திருமணத்திற்கு முன் ஒரு கோவில் திருவிழாவில் வாங்கியது. இன்னும் மங்கா நினைவாக இருக்கின்றது!

ஷாலினி என் கல்லூரி நாட்களின் தோழி. அவளுடன் பகிர்ந்த வார்த்தைகள், சிரிப்புகள், மரத்தடி உரையாடல்கள் எல்லாமே ஒரு குறும்படம் போல என் மனதில் ஓடின.

"அரவிந்த், நீ ஒரு நல்ல மனுஷனா இருப்ப. உன்னோடமுள்ள இந்தப் புரிதல் இருக்கின்றதே... அது எப்பவும் உன்னை சிறப்பா வைக்கும்," என்று ஒருமுறை அவள் சொன்ன ஞாபகம்!

அப்போது அவள் கண்களில் இருந்த பளபளப்பையும், அவளது அந்த வார்த்தைகளில் இருந்த உண்மைகளையும் இப்போதும் கூட என்னால் மறந்துவிட முடியாது!.

ஆனால், கல்லூரி முடிந்த பின் எங்கள் பாதைகள் பிரிந்தன. நான் தலைநகரில் வேலையில் சேர்ந்தேன். ஷாலினி அமெரிக்காவில் தனது மேற்படிப்பைத் தொடர்ந்தாள்.

ஆரம்பத்தில் அஞ்சல் தொடர்பு இருந்தது. அது பின்னர் முகநூல் வழியே சில காலம் தொடர்ந்தது, ஆனால் வாழ்க்கையின் வேகம் அந்தத் தொடர்பை மெல்ல இல்லாமற் செய்து விட்டது.

பத்து ஆண்டுகள் ஓடி ஒழிந்தன. திடீரென வந்த அவளது குறுஞ்செய்தி மனதில் ஒரு கலவையான உணர்வை எழுப்பியது.

எனக்குள் ஒருவித மனக்குழப்பம். மொபைலை மூடி வைத்துவிட்டு, மீராவை நெருங்கி உரசிக் கொண்டேன். அவள் உறக்கத்தில் ஏதோ முணுமுணுத்தபடி, என் கையைப் பற்றினாள். அந்தத் தொடுதல், என் மனக்குழப்பத்தை அமைதிப் படுத்தியது.

மறுநாள் காலை, மீரா வழக்கம்போல சமையலறையில் இருந்தாள். "காபி ரெடி, அரவிந்த்! இன்னைக்கு ஆபீஸ் பிஸியா இருக்குமா?" என்று கேட்டபடி, காப்பிக் கோப்பையை நீட்டினாள்.

அவள் முகத்தில் புன்னகை, ஆனால் கண்களில் சிறு களைப்பு. "பரவால்லை, மீரா. நீ இன்னைக்கு லீவு எடுத்துக்கோ. ரொம்ப டயர்டா இருக்கியே," என்றேன்.

"அட, இதெல்லாம் சகஜம்யா. ஆனா, நீ இப்படி கவலைப்படறது தான் எனக்கு பெரிய சந்தோஷம்" என்று கூறிச் சிரித்தாள். அவள் சிரிப்பு, என் மனதிலிருந்த குழப்பத்தை மெல்ல உருக்கியது.

மீராவை முதன்முதலில் சந்தித்தது ஒரு நண்பரின் திருமணத்தில். அவளுடைய எளிமையான பேச்சு, நகைச்சுவை, என்னை ஈர்த்தது.

"நீங்க இவ்வளவு அமைதியா இருக்கீங்களே, எப்பவாவது சிரிப்பீங்களா?" என்று கேட்டாள், "இந்த மணப்பெண்ணுக்கு இவ்வளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேக்கப் தேவையா?" என்று மீண்டும் கிசுகிசுப்பாக அவள் கேட்டபோது, நான் சிரித்து விட்டேன்.

அவளுடைய நேர்மை, எளிமை, என்னை ஈர்த்தது. மெல்ல மெல்ல வளர்ந்த எங்கள் உறவு, மூன்று ஆண்டுகளுக்கு முன், குடும்பத்தினர் முன்னிலையில், ஒரு எளிய திருமணத்தில் முடிந்தது!.

மீரா எனக்கு மனைவி மட்டுமல்ல ஒரு தோழி. ஒரு புரிதல் நிறைந்த துணை. அவள் சமையலறையில் பழைய பாடல்களை முணுமுணுப்பது, என் சட்டையிலுள்ள சிறு கறையைக் கூட கவனித்து சுத்தம் செய்வது, இரவு நேரத்தில் எனது அலுவலகப் புலம்பல்களைக் கேட்பது, இவை எல்லாம் எங்கள் வாழ்க்கையை அழகாக்கியது.

குழப்பத்தின் நடுவே அன்று மாலை, ஷாலினியிடமிருந்து மற்றொரு செய்தி. "அரவிந்த், நான் சென்னைக்கு வந்திருக்கேன். உன்னைப் பார்க்கணும். ஒரு காப்பி குடிக்கலாமா?" - என் மனம் தடுமாறியது. ஒரு பக்கம், பழைய நினைவுகளை மீட்டெடுக்கும் ஆர்வம். ஷாலினி இப்போது எப்படி இருப்பாள், அவள் வாழ்க்கை எப்படி செல்கிறது என்பதைப் பார்க்க வேண்டும், கேட்க வேண்டும் என்ற ஆவல்! மறுபக்கம், மீராவின் முகம். அவள் மீதான என் அன்பு, எங்கள் குடும்பத்தின் முக்கியத்துவம்.

நான் பதில் எழுத முயன்றேன், ஆனால் வார்த்தைகள் வரவில்லை. மொபைலை மூடி வைத்துவிட்டு பால்கனிக்கு சென்றேன்.

மழை பெய்து ஓய்ந்து, வானம் தெளிவாக இருந்தது. நட்சத்திரங்கள் மின்னின.

அந்த நேரத்தில், மீரா வந்து என் தோளில் கை வைத்தாள். "என்ன ஆச்சு, அரவிந்த்? ரொம்ப யோசனையா இருக்கே?" அவள் குரலில் இருந்த அக்கறை, என் மனதை உருக்கியது!

"ஒண்ணுமில்ல, மீரா. சும்மா... கொஞ்சம் டயர்டா இருக்கு." என்று மழுப்பினேன்.

"சரி, வா. உனக்கு பிடிச்ச பருப்பு ரசம் செஞ்சிருக்கேன். சாப்பிட்டுட்டு, நல்லா தூங்கு. எல்லாம் சரியாயிடும்." என்று சிரித்தபடி என்னை உள்ளே அழைத்தாள்.

மறுநாள் காலை விடிந்தது. மீரா வழக்கம்போல எழுந்து, சமையலறையில் தேனீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

"என்ன அரவிந்த், நேத்து ரொம்ப நேரம் மொபைலப் பார்த்துட்டு இருந்தியே? ஏதாவது புதுப் புரொஜெக்ட் விஷயமா?" என்று கேட்டாள். அவளுடைய குரலில் இயல்பான அக்கறை!

"இல்லை... ஒரு பழைய நண்பன் மெசேஜ் பண்ணிருந்தான் அதான்."

என்று பொய் கலந்த உண்மை ஒன்றைச் சொன்னேன். ஆனாலும், மனதுக்குள் ஒரு குற்ற உணர்ச்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை, மீராவும் நானும் பால்கனியில் அமர்ந்து தேநீர் அருந்தினோம்.

"அரவிந்த், உனக்கு ஞாபகம் இருக்கா? நம்ம முதல் டேட்டிங்கு... அன்னிக்கு நீ பயந்துட்டு, 'என்னை உனக்கு பிடிச்சிருக்கான்னு' மூணு தடவை கேட்ட!" என்று மீரா சிரித்தபடி சொன்னாள்.

நானும் சிரித்தேன்.

"ஆமா, நீ ஒரு தடவை கூட பதில் சொல்லல்ல!" அந்தத் தருணத்தில்... மீராவின் சிரிப்பு... அவளுடைய கண்களில் தெரிந்த அன்பு, என் மனதில் இருந்த குழப்பங்களை மெல்ல மெழுகாக்கியது!

ஆனால், ஷாலினியின் செய்தி இன்னும் மனதில் ஒரு மூலையில் இருந்தது. அன்றிரவு, ஷாலினியிடமிருந்து இன்னொரு ரிமைண்டர் வந்தது.

அந்த இரவு நான் முடிவெடுத்தேன். ஷாலினிக்கு ஒரு குறுஞ்செய்தி எழுதினேன்,

"ஷாலினி, உன்னோட நினைவுகள் எப்பவும் எனக்கு சந்தோ'மானவை. நம்ம நட்பு ஒரு அழகான காலம். ஆனா, இப்போ நான் மீராவோட வாழ்க்கையில இருக்கேன். அவள்தான் எனக்கு எல்லாமே. உன்னோட நட்பை மதிக்கிறேன், ஆனா... அதுக்கு மேல அதைத் தொடர முடியாது. நீயும் உன் வாழ்க்கையில சந்தோஷமா இருக்கணும்னு மனசார வாழ்த்துறேன்."

செய்தியை அனுப்பிய பின், மனதின் பாரம் இறங்கியது.

மறுநாள், மீராவிடம் எல்லா வற்றையும் பகிர்ந்தேன். "மீரா, நேத்து எனது பழைய நண்பனின் மெசேஜினால், கொஞ்சம் மனசு குழம்பி இருந்துச்சு. ஆனா, இப்போ தெளிவா இருக்கு" என்றேன்.

மீரா ஒரு கணம் அமைதியாக இருந்தாள். பின் என் கையைப் பற்றி, "அரவிந்த், நீ என் மீது கொண்டுள்ள அன்பு, எனக்கு உன்னை ரொம்ப பிடிக்க வைக்குது. எதுவா இருந்தாலும், நாம ஒருத்தருக்கு ஒருத்தர் இருக்கோம். அதுவே போதும்!"

அந்த வார இறுதியில், நானும் மீராவும் எங்கள் பெற்றோரை சந்திக்க கிராமத்திற்கு சென்றோம். மீராவின் அம்மா செய்த மிளகு ரசம், அப்பாவின் பழைய கதைகள், எங்கள் சிரிப்பு - எல்லாம் மனதை நிரப்பியது. மீரா என் பக்கத்தில் அமர்ந்து,

"இந்த சின்ன சின்ன தருணங்கள் தானே வாழ்க்கையோட அர்த்தம்" என்றாள்.

நான் அவள் கையை இறுகப் பற்றினேன். "ஆமா, மீரா. இதுதான் எமக்கு எல்லாமே."

கடந்த காலம் ஓர் அழகான நினைவாக இருந்தாலும், என் இதயம் இப்போது மீராவுடன்தான்!

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

- ஏ. எம். ஏ. றசூல்
கிண்ணியா.

# படிப்பு முக்கியம் ராசா



பரசுராமன் கூலித் தொழிலாளி. அரிசி ஆலையில் நாள் கூலிக்கு வேலை செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்ற கடும் பிரயத்தனம் எடுத்து வருகிறான். பிள்ளைகளும் மொத்தம் ஆறு. மூன்று ஆண்களும் மூன்று பெண்களுமாக. இவர்கள் அனைவரும் பாடசாலை செல்கிறவர்கள். படிப்பு, உணவு, ஆஸ்பத்திரி, இடையிடையே திருமண வீடு, பெருநாள் அனைத்துக்கும் பரசுராமன் உழைப்பால் மட்டும் செலவு செய்ய வேண்டும்.

ஒரு நாள் பிள்ளைகள் அனைவரையும் அழைத்து "நான் க்'டப்படுவது உங்கள் எதிர் காலம் நாளை நல்லதாக அமைய வேண்டும் என்பதற்காக. உங்க யாரையும் இதுவரைக்கும் வேலைக்குப்போங்க, உழைத்துக் கொண்டு வாங்க என்று ஒரு நாள் கூடச் சொல்லவில்லை. ஆனால் பள்ளிக்கூடம் போங்க, மாலை நேர வகுப்புக்குப் போங்க என்றுதான் சொல்லிருப்பேன். ஆகவே நீங்கள் எல்லோரும் நல்ல சம்பளம் பெறக்கூடிய படிப்புத்தான் படிக்க வேண்டும். செலவு செய்ய நானிருக்கேன்." - பரசுராமன் குட்டி உரையை அவ்விடத்தில் நிகழ்த்தி முடித்தார்.

எல்லாத் தந்தையரும் தான் படும் கஷ்டங்கள் பிள்ளைகள் படக் கூடாது என்றுதான் நினைக்கிறார்கள். அதை படிக்கும் மாணவர்கள் கடைப்பிடித்து நடந்தால் போகும் இடமெல்லாம் வெற்றிதான். ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரசுராமன் எடுத்த முயற்சிக்கு பலன் கிட்டவில்லை. ஆனால் அவர் சோர்ந்து போகவில்லை. காலம் கனியும் போது நடக்க வேண்டியது எல்லாம் அவ்வப்போது நடக்கும் எனக் கூறி ஆறுதல் அடைந்து கொள்வார்.

மூத்த மகன் வசந்தனுக்கு வேலை கிடைத்திருந்தால் ஓரளவாவது கஷ்டம் இல்லாமல் இருந்திருக்கும் என அடிக்கடி மனைவியிடம் கூறிக்கொள்வார். இனி யாரையும் நம்பிப் பயனில்லை. வயதுக்கு வந்த பெண் பிள்ளையை முதலில் திருமணம் செய்து வைக்க வேண்டும். அடுத்து மூத்தவன் வசந்தன் எங்க விரும்புகிறாரோ அங்கேய திருமணத்தை செய்வதுதான் நல்லது என பரசுராமன் மனைவியிடம் கூற, அவளும் தலைமைக்குக் கட்டுப்பட்டாள். இரண்டாவது மகனை முதலில் வெளிநாடு அனுப்பினான். இரண்டு வருடங்கள் உழைத்து வந்து சகோதரி ஒருவரை திருமணம் செய்து வைத்தான். அதன் பின்னர் அண்ணன் வசந்தன் திருமணம் நிகழ வீசாவுடன் வந்ததால் அதே இடத்திற்கு மீண்டும் சென்றான். பரசுராமன் பிள்ளைகளால் சிறு ஆறுதல் அடைந்து கொண்டான்.

வசந்தன் கிராமத்தில் வாழ்வதால் சுயதொழில் ஒன்றை ஆரம்பித்து தனது காலத்தை கடத்தினான். திருமணம் முடிந்து பத்து வருடங்களின் பின்னர் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அவனின் தந்தை பரசுராமன் மிகவும் சந்தோஷம் அடைந்தார்.

அதே சமயம் தேர்தல் வருகிறது. வாக்கு கேட்டு ஒவ்வொரு கட்சி வேட்பாளர்களும் வீடு வீடாக அலைந்து திரிந்தனர். வசந்தன் அன்று திருமண விருந்து ஒன்றில் கலந்து கொண்டு அப்போதுதான் வந்து தேநீர் அருந்தும் போது, "நம்மட ஆதரவு ஆள்தான இருக்கார்" என சொல்லிக்கொண்டு வந்தனர். 'தம்பி உங்க பரம்பரைக்கே வாக்குப் போடக் கூடாது என தீர்மானம் எடுத்து பல வருடங்களாச்சு. உங்க அப்பா செத்துப் போனலும், அவர் எனக்கு ஒரு வேலை தருவதாகக் கூறி என்னையும் என் அப்பாவையும் பலமுறை ஏமாற்றியவர். எப்போதும் ஏமாற முடியாது. நாங்கள் சூடுகண்ட பூனை. நீங்க இனிமேல் எங்களிடம் வாசலுக்கு வாக்குகேட்டு வரக்கூடாது." என்று கூறியதும் வந்தவர்கள் எதுவும் சொல்ல முடியாமல் அடுத்த வீட்டுக்குப் போகும் போது "பாதிக்கப்பட்டவர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்துவதில் தவறு இல்லை. அப்பாவுடன் கூட இருந்தவர்கள் விட்ட பிழைகள் நமக்கு கதைப்பதற்கு இடம் வைத்துள்ளது. பொறுமை அவசியம்." - இது வேட்பாளரின் கருத்து.

பரசுராமன் எடுத்த முயற்சிகள் வீண்போகவில்லை. மூன்று மகன்களும், ஒரு மகளும், சேர்ந்த மருமக்களும் அரசாங்க உத்தியோகம். "பரசுராமன், அவருடைய நல்ல வழி காட்டல் காரணமாக, பிள்ளைகளால் பேரும் புகழும் பெற்று வாழ்கிறார்" என்று ஊரில் பலராலும் பேசக்கூடிய நல்ல செய்தியாக மாறிவிட்டது.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டு, வாங்கி, குடுக்கிற கதை.

- அஷ்ரபா நூர்தீன்.

காலகாலமாக உறவுகளும் நட்புக்களும் நம்மைச் சுற்றி இருந்தன. இப்போது அத்தகைய தொடர்புகள் குறைந்து விட்டன. அவரவர் வேலைகளும் பிரச்சினைகளும் ஏராளம். தேவைக்கு மாத்திரம் உறவை, நட்பைப் பேணுகிறோம். அந்த தேவைக்கு மாத்திரம் பேணும் நட்புகளிலும் பல நம்பிக்கைத் துரோகங்கள் உள்ளன.

முன்னர் சமூக வலைத்தளங்கள் பாவனையில் இல்லை. ஆனாலும் புறம் பேசுதலும் கோள் மூட்டுதலும் பிரச்சினைகளை உருவாக்குதலும் தூண்டிவிடுதலும் நடந்துகொண்டு தான் இருந்தது. ஒரு குறிப்பிட்ட சிலபேருக்கு இது பொழுதுபோக்கு. அற்ப சந்தோஷம்.

இன்று கல்வியறிவு கூடிய சமூகம். இவற்றையெல்லாம் செய்ய மாட்டார்கள் என்றுதான் நினைப்போம். ஆயினும் அவ்வாறல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவரின் முன்னேற்றத்தைத் தடுத்தல், இன்னொருவரின் வாழ்க்கையை சிதைத்தல், பொறாமை கொள்ளல், அடுத்தவரை ஆராய்தல் போன்ற கெட்ட குணங்களால் சிலர் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

படித்தவர்கள் பாரம்பரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், என்று போற்ற முடியாத அளவுக்கு மனித குணம் இருக்கிறது.

நம்மிடம் நேரடியாகவோ அல்லது தொலைபேசியிலோ பேசும்போது ஒரு சிலரின் முகநூல் பக்கங்களை அவர்தம் பதிவுகளை, பதிவிடும் புகைப் படங்களைப் பற்றி சில நட்புகள் நமது காதில் கதையைப் போடுவார்கள். இதுபற்றி நாமும் அறிந்துதான் இருப்போம். ஓரிரு வார்த்தைகள் நமது வாயாலும் வந்துவிடும்.

அவர் கதையைப் போடுவார். நமது கருத்தை எடுப்பார் பிறகு உரியவருக்கு நல்ல பிள்ளையாய் நமது கருத்தை மட்டும் கொடுப்பார். எப்போதும் இரண்டு பக்கமும் அவர் நல்ல அமைதியான நண்பர். தம்மைப் பற்றி நாம் சொல்வது போல ஒரு மாயையை உருவாக்கி அந்த நபரை நம்முடன் உறவு வைக்க முடியாத அளவு தூரமாக்குவார். அவர் நல்ல பிள்ளையாக இருபக்கமும் உறவு வைப்பார். அவ்வாறானவர்களை அறியாது இருப்பதற்கு மற்றவர்கள் முட்டாள்களும் இல்லை.

ஆக மனித குணம் பலரிடம் இன்னும் மாறாமலே இருப்பதன் சிரமம் சிலரின் நட்பின் மூலம் அப்பட்டமாகத் தெரிகிறது. முற்போக்காக இருந்தும் அறிவுடையவராக இருந்தும் சமூக வலைத்தளங்கள் என்று வந்த பிறகு ஒருவிதமான போட்டி, பொறாமை, காழ்ப்புணர்ச்சி என்பன எமது முன்னோர்களை விட மிக அதிகரித்துள்ளது என்பதனை மிக வருத்தத்துடன் கூறுகிறேன்.

இதில் கூடிய வீதம் பெண்களே உள்ளனர் என்ற உண்மையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆண் நண்பர்களில் இது மிகக் குறைவே.

●●●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

புதிய தொடர்

# மருதமுனை வரலாறும் வாழ்வியலும்

புதிய தலைமுறை அறிந்திராத மருதமுனை மண்ணின் வரலாறு மற்றும் வாழ்வியல் அம்சங்களை, தொடர்ந்து வெண்ணிலா காலாண்டுச் சஞ்சிகை மூலம் தனக்கே உரிய பாணியில் சுவைபட எழுதுகிறார் மருதமுனையின் மூத்த எழுத்தாளர், கவிஞர், நாவலாசிரியர் மற்றும் பன்னூலாசிரியர்

**அல்-ஹாஜ். ஏ. ஆர். ஏ. சத்தார் ஜே.பி. அவர்கள்.**

இத் தொடர் பற்றிய உங்களது கருத்துகளை சுருக்கமாக மின்னஞ்சல் மூலமோ அன்றி வட்ஸ்அப் மூலமோ எமக்கு எழுதி அனுப்புங்கள்.

உங்களது கருத்துகள் எதிர்வரும் வெண்ணிலா இதழ்களில் பிரசுரிக்கப்படும்.

- ஆசிரியர்.



பன்னூலாசிரியர்
ஏ. ஆர். ஏ. சத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமுனையில் கொடியேற்று விழா

## (1959-1963)



பன்னூலாசிரியர் ஏ. ஆர். ஏ. சத்தார்

பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் மருதமுனையில் முதலாவது பள்ளிவாசல், அபூபக்கர் அலி என்பவரால் வழங்கப்பட்ட நிலத்தில் நிறுவப்பட்டதனால் அவக்கலியப்பா பள்ளி என்ற நாமம் பெற்று, பின்னர் வட தெருப் பள்ளிவாசல், சின்னப் பள்ளி வாசல் என்றும் தற்காலம் மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் என்றும் அழைக்கப்படுகிறது.

சுமார் மூன்று நூற்றாண்டு களுக்கும் மேலாக சுயமாகவும் சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும் இயங்கி வந்த வேளையில், நிருவாகத்தினர் மத்தியில் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அவர்கள் மத்தியில் இரு கூட்டணிகளை ஏற்படுத்திற்று. இதன் விளைவாக பிரிந்த அணியினர் தமக்கெனவும் தம் சார்ந்தவர்கள் தொழுவதற்காகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டதனால் குடியிருப்புக்கள் பரந்துபட்டதனாலும் மற்றுமோர் பள்ளிவாசலை அமைப்பது என்ற தீர்மானத்தின் பிரகாரம், 1861ஆம் ஆண்டு பக்கீர்தம்பி மரைக்கார் மற்றும் அலியார் போடியார் ஆகியோர் வழங்கிய நிலத்தில் ஒரு பள்ளிவாசலை அமைத்தனர். முதலில் இது தென்தெரு மீரா பள்ளி வாசல் எனவும் பின்னர் பெரிய பள்ளிவாசல் எனவும் தற்போது மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசல் என்றும் வழங்கப்படுகிறது. இதன் பின்னர் 1950இல் மத்திய பள்ளிவாசல் 1956இல் மக்பூலியா 1963இல் ஹிதாயா என தற்காலம் இருபத்தி மூன்று பள்ளிவாயல்கள் மக்களின் ஐங்காலத் தொழுகைக்காக பயன் பாட்டில் உள்ளன, மாஷா அழ்ழாஹ்.

இந்த விடயங்களை நான் ஏன் எழுதுகிறேன் என்ற உங்கள் கேள்வி எனக்குத் தெரிகிறது. மேற்படி 1861-1950 காலப்பகுதியில் எமது மருதமுனைக் கிராமத்தில் நடைபெற்ற சில விசித்திரமான நிகழ்வுகளைக் கூறுவதற்காகத்தான் இந்தப் பீடிகை.

1923ஆம் ஆண்டு சின்னப் பள்ளிவாசலில் பெரிய மௌலானா எனப்படும் செய்யதிஸ்மாயில் ப.்தாதி என்பவரால் புஹாரி மஜ்லிஸ் தொடர்ச்சியாக நாற்பது நாட்கள் நடாத்தி இறுதி நாளன்று ஊருக்கே கந்தூரி வழங்கி மஜ்லிஸை தமாம் செய்யும் நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கு சற்று முன்னரான காலப்பகுதிகளில் இரண்டு பள்ளிவாசல் ரீதியிலா னவர்கள், குறிப்பாக இளைஞர்கள் சந்தணக் கூடு இழுத்தல் நிகழ்ச்சியை பல வருடங்கள் நடாத்தியதாகவும் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. இதுபற்றி அறியவேண்டும் என்ற ஆவல் என்னைத் தொற்றிக்கொண்டபோது சில முதியவர்களைக் கண்டு சில தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்தது.

ஒன்று, இரு பகுதியினரும் தத்தமது பலத்தினை வெளிக் கொணர்வதற்க்காகவே நடாத்திய தாகவும், தமது குடிப் பெருமைகளைக் காட்டும் நிகழ்வா கவும், பல கதைகளைக் கூறிய போதும் இன்னுமொரு பெரியவர் சற்று வித்தியாசமான தகவல் தந்ததையும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன், அது அக்காலத்தில் மருதமுனை ஒன்றாகவே இருந்ததாகவும், பள்ளிவாசல் ரீதியாக இரு அணியினராக பிரிபுபட்டதனால் அவர்களது எல்லைகளை நிர்ண யிக்கும் நிகழ்வாகவும் இது நடாத்தப்பட்டதாகவும் கூறியதுடன் மேலும், சீப்பலஸ் சந்தியில் இருந்து வடதெருப் பள்ளி சார்ந்தவர்களும், அரசடி சந்தியில் இருந்து தென்தெரு பள்ளி சார்ந்தவர்களும் சந்தணக்கூட்டை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பித்து ஆடல் பாடல்களுடன் இழுத்து வருவர். அவ்விரு அணிகளும் எவ்விடத்தில் சந்திக்கின்றனரோ அவ்விடமே அவர்களின் எல்லைகளாகக் கொள்ளப்படும் என்றும் விளக்கம் தந்தார். எது எப்படியோ சந்தணக் கூடிழுத்தல் என்ற நிகழ்ச்சி பல வருடங்கள் நடைபெற்றிருப்பினும் அது தொடர்பான ஆதாரங்களோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணங்களோ எம்மால் திரட்ட முடியவில்லை.

1923ஆம் ஆண்டு சின்னப் பள்ளிவாசலில் புகாரி மஜ்லிஸ் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமது பள்ளிவாசல் ரீதியாகவும் ஒரு விழா எடுக்க வேண்டும் என்ற முனைப்பில் இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி தற்போதைய மஸ்ஜிதுல் கபீர் சந்தை வளாகத்தில் கொடியேற்றும் விழா செய்வதற்கான முனைப்புடன் செயற்பட்டனர். விடயம் அறிந்த ஊரின் முக்கியமானவர்கள், உலமாக்கள் மற்றும் பள்ளிவாசல் நிருவாகத்தினர் ஒன்றுசேர்ந்து இவ் விழாவினை நடைபெறாமல் செய்திருக்கின்றனர். அவ்விளைஞர் குழுவும் தொடர்ச்சியாகப் பல முறை முயற்சித்தும் அவர்களது முயற்சிகள் கைகூடாமல் போய் விட்டது. இது விடயத்தில் தோல்வி கண்ட இளைஞர்குழு ஏதாவது செய்தேயாக வேண்டும் என்ற ஆர்வத்தில் அவ்விடத்தில் மேடை நாடகங்களை ஏற்பாடு செய்து நடாத்தியிருக்கின்றர். இது பல வருடங்கள் நடைபெற்றிருக்கின்றது. இவ்வாறு அரங்கேற்றப்பட்ட நாடகங்களில் அலி பாதுஷா, மகாத்மா காந்தி என்ற இரு நாடகங்களும் அந்தக் காலத்தில் மிகப் பிரபல்யமான நாடகங்களாகப் பேசப்பட்டிருக்கின்றன. மகாத்மா காந்தி நாடகத்தில் காந்தியாக நடித்தவர் காந்தியின் உருவ ஒற்றுமை கொண்டிருந்ததால் இன்றும் அவரை மரணித்த பின்பும் காந்தியர் குடும்பம் என்றே அழைக்கப்படுகின்றனர். மட்டுமல்லாமல் சீனடி சிலம்படி வாள் வீச்சு பொல்லடி எனப் பல நிகழ்வுகளையும் நடாத்தி இருக்கின்றனர். இந்த நாடக விடயத்திலும் இளைஞர்களுக்கு பெண் வேடம் தரித்தலுக்கு தடை போடப்பட்டே அனுமதிக்கப்பட்டி ருக்கின்றனர்.

மேற்கண்டவாறு காலத்திற்கு காலம் பல சம்பவங்கள் நடைபெற்று வந்ததும் அப்போது வாழ்ந்து வந்த உலமாக்களின் ஆலோசனைகளை ஏற்று பள்ளிவாசல் நிருவாகத்தினர் மார்க்கத்துக்கு முரண்படும் விடயங்களைத் தடுத்தும் வந்த வேளை கூட்டான ஒரு சபையின் முக்கியத்துவம் உணரப்பட்டது. அதன் விளைவாக 1953ஆம் ஆண்டு பதினைந்து உலமாக்களைக் கொண்டு லஜ்னதுல் உலமா என்ற பெயரில், SKS. இஸ்மாயில் மௌலானா அவர்களைத் தலைவராகவும், SIM. சாலிஹ் மௌலானா அவர்களைக் காரியதரிசியாகவும், UL. அப்துல் மஜீத் அவர்களைப் பொருளாள ராகவும் கொண்டு அமைக்கப்பட்டது.

இதன் பின்னரான காலப் பகுதிகளில் பள்ளிவாசல் நிருவாகம் மற்றும் உலமா சபையினரும் இணைந்து கிராமத்தை சிறந்த முறையில் வழிநடாத்தி வந்தனர். அதேநேரம் கொடியேற்றும் விட யத்தில் தோல்வி கண்ட இளைஞர் குழுவினர் தமக்கு ஆதரவான முக்கியமானவர்கள், உலமாக்களைத் தமது செயற்பாட்டுக்கு உதவி செய்யுமாறு பல சந்திப்புகளை மேற்கொண்டனர். அவர்களது அயராத முயற்சி வீண் போகவில்லை. அக்காலத்தில் வித்தியாசமான கருத்துக்களையும் அவுலியாக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதாக்கள் மீது அதீத பக்தி உடைய ஒருவராகவிருந்த அப்துல் கரீம் ஆலிம் அவர்களையும், உரத்துப் பேசவும் மற்றவர்கள் சற்று அவர் விடயத்தில் அச்சத்திலும் இருக்கக்கூடியதாக இருந்த அச்சு முகம்மது ஓடாவியார் அவர்களையும் இணைத்துக் கொண்டனர். இந்த இளைஞர் அணி பல சந்திப்புக்களை மேற்கொண்டு, மீண்டும் கொடி ஏற்றியே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். அதற்கான திட்டங்களையும் இரகசியமாக செய்து வந்தனர். இதற்கிடையே உலமா சபையில் அதிகமானவர்கள் இந்தியாவில் தமது மார்க்கக் கல்வியினை மேற்கொண்டதன் விளைவாக மார்க்க அனுஷ்டானங்கள் என்ற வகையில் மௌலூதுகள், தக்கதூறத்து, றாதிப் தலைப்பாத்திஹா, புறுதா, ஹத்தம், பாதிஹா என ஏகப்பட்ட பித்ஆக்கள் அறிமுகமாயின. இவைகள் யாவும் மார்க்கக் கடமைகள் என்று பார்க்கப்பட்டது மட்டுமன்றி பக்தி சிரத்தையோடும் செய்யப்பட்டு வந்தது. இவைகளைச் செய்யாவிட்டால் அவுலியாக்களின் சாபம் ஏற்படும், தொழிலில் பறகத் இராது, நோய்நொடிகள் அதிகமாக வந்துவிடும் என்றெல்லாம் மக்கள் நம்பவைக்கப்பட்டனர். எந்தளவுக்கென்றால் அன்றைக்கு வீட்டில் சமைப்பதற்கு வசதியில்லா விட்டால்கூட கையில் காதில் உள்ளவற்றைக் களற்றி விற்று இவற்றை நிறைவேற்றுவார்கள். எல்லா நிகழ்வுகளிலும் உலமாக்களும் பங்கேற்றனர்.

இளைஞர் குழுவினர் எப்படி யாவது கொடியேற்ற வேண்டும் என்ற முனைப்பில் தம்மோடு இணைந்து கொண்ட ஆலிம் மற்றும் ஓடாவியார் ஆகிய இருவரையும் தமது பிரதான ஆலோசகர்கள் என்றும் இது விடயத்தில் இனிமேல் நீங்கள் சொல்வதையே செய்வோம் என்றும் அவ்விருவர்களையும் உசார் ஏற்றிவிட்டனர். இதனடிப் படையில் இக் குழுவினர் பள்ளிவாசல் நிருவாகத்தினரையும் உலமா சபை யினரையும் சந்தித்து தமது பக்க நியாயங்களை முன் வைத்து அனுமதி கேட்பதென்றும், மறுக்கும் பட்சத்தில் அனுமதியின்றே கொடி ஏற்றுவதென்றும், சந்திப்பின்போது ஆலிம் பிரதான பேச்சாளராக இருப்பார் என்றும் தீர்மானித்தனர். இதன் பிரகாரம் கூட்டத்திற்கான நாளும் தீர்மானிக்கப்பட்டு பெரிய பள்ளிவாசல் முன்றலில் கூட்டமும் ஆரம்பிக்கப்பட்டு, பிரதம பேச்சாளர் ஆலிம் தமது பக்க நியாயங்களை முன்வைக்கத் துவங்கினார். விடய மறிந்து அதிகமான மக்களும் அங்கு திரண்டு விட்டனர்.

"அஸ்ஸலாமு அலைக்கும், எமது அண்மைக் கிராமமான கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளியில் பல வருடங்களாக கொடியேற்று விழா நடைபெற்று வருகிறது. இதற்கு எமது ஊரைச் சேர்ந்த அதிகமான மக்கள் தமது நேர்ச்சைகளை நிறைவேற்றுவதற்காக சென்று வருகின்றனர். தமது நோய்கள் தீரவேண்டும் என்றும், தமது தொழிலில் விருத்தி வேண்டும் என்றும் தமது விவசாயம் செழிக்கவேண்டும் என்றும் மீன்பிடித் தொழில் முன்னேற வேண்டும் என்பது மட்டுமன்றி தமக்கு பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம் வேண்டும் என்றெல்லாம் வேண்டுதல்களைச் சமர்ப்பித்து, ஆடு, கோழி, பணம் கொடுப்பதுடன் பல வகையான பலகாரங்களையும் ஒப்படைக்கின்றனர். இது மட்டுமா? பாண்டிருப்பு தீப்பள்ளயத்திலும் இவ்வாறான காரியங்களில் ஈடுபடுவதனை எமதூரில் கொடி யேற்றுவதன் மூலம் குறைக்க முடியும். காலப்போக்கில் அவை இல்லாமல் மறைந்து விடும்" என்று தன் வாதத்தை நைசாக முன்வைத்து அமர்ந்து கொண்டார். சபையினர் மத்தியில் பயங்கர அமைதி. "ஆலிமு சொல்வது சரிதானே" கணீரென்ற ஒரு குரல், அது ஓடாவியாரின் குரல். ஓடாவியாரின் கருத்துக்கு மாற்றுக்கருத்துக் கூற யாருக்கும் தைரியமில்லை. அமைதி காத்த சபையில் சலசலப்பை ஏற்படுத்தியது.

அவரது அந்த வார்த்தைகள். இனி கேட்கவும் வேண்டுமா என்ன. பெட்டிப் பாம்பாய் இருந்ததுகளும் சீற ஆரம்பித்து விட்டதுகள். பெரிய இரைச்சல், பொதுமக்களும் தம்பாட்டுக்கு அதுதானே எனக் கோசமிட்டனர். இதில் விசேடம் என்னவென்றால் கூடியிருந்த சபையில் ஒருசிலரைத் தவிர மற்றையவர்கள் அனைவரும் கொடியேற்றுவதில் ஆர்வமாக இருந்ததுதான். இறுதியில் சபை சில நிபந்தனைகளுடன் கொடி ஏற்றுவதற்கான அனுமதியை வழங்கியது. நிபந்தனை என்ன வென்றால் இளைஞர் குழுவினர் பெரியபள்ளி முன்றலில்தான் கொடி ஏற்றுவது என்ற வாதத்தை சபை ஏற்றுக் கொள்ளாமல் கடற்கரை பிரதேசத்தில் ஏதோ ஓர் இடத்தில் செய்வதே அந்த நிபந்தனை. அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

கொடி ஏற்றுவதற்கான அனுமதி நிபந்தனைகளுடன் வழங்கியாயிற்று. கடற்கரை பக்கம்தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்றுக்கொண்ட குழுவினர் பல இடங்களைக் கவனத்திற் கொண்டு இறுதியாக ஒரு இடத்தினைத் தேர்வு செய்தனர். அப் பிரதேசம் ஏற்கனவே மையவாடியாக உபயோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்த மையவாடியின் எல்லையை அச்சு மரைக்கார் பாணியில் சொன்னால் நீங்கள் இலகுவில் புரிந்து கொள்வீர்கள். "இப்ப மருதமுனை லைற் ஹவுஹ் அடிக்கு வாங்க. வந்திற்றயள, படுவான் பக்கம் திரும்பி சம்சம் ரோட்டு நெடுக நடந்து கிதாயா சந்தியில நில்லுங்க. சரிய, இப்ப பாண்டிருப்பு பக்கமா திரும்பி காரியப்பர் ரோட்டு வரையும் வாங்க வந்திற்றயள, இப்ப எழுவான் பக்கம் திரும்பி சமது மச்சாண்ட ஊட்டயும் தாண்டி நடிகர் இஸ்மாயில்ர கடைக்கு வாங்க, வந்திற்றயள்தானே. இப்ப வெளங்குத மையத்துப் பிட்டி எல்லை."

இந்த எல்லைகளுக்கு அப்பால் இரண்டு பொதுக் கிணறுகளும் ஒரு தொகுதி மலசல கூடமும் காணப்பட்டன. சமது அவர்களின் வீடு தற்போது உள்ள இடத்தில் அந்த மலசலகூடமும், நடிகர் இஸ்மாயிலின் கடையடியில் சின்ன அளவிலான பொதுக் கிணறும் பனிரண்டு அடி விட்டத்தைக் கொண்ட ஒரு பெரிய கிணறு தற்காலம் சுனாமி ஹோட்டல் இருப்பதற்கு கிழக்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது.

அவ்விடத்தில் ஒரு நாவல் மரமும் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்தது. மையவாடியின் அல் மதீனா பாடசாலை பிரதான நுழைவாசலை அண்மித்ததாக நன்கு பரந்து விரிந்து விழுதுகள் தொங்கியவாறு ஒரு பெரிய ஆலை மரமும் அதற்கு கிழக்குப் பக்கம் ஒரு ஆலை மரமும் இவ்விரண்டுக்கும் மத்தியில் அல்ஹம்றா வீதிக்கு சரி நேராக ஒரு ஆலை மரமும், மேலும் சில பற்றைக் காடுகளும் எருக்கலம் பற்றை, நொச்சிப் பற்றைகள் பலவும் காணப்பட்டன. இந்தப் பற்றைகளையே மக்கள் தமது இயற்கைத் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வந்தனர். பெரிய ஆலை மரம் மீனவர்கள் காசு புறிக்கும் இடமாகவும் இருந்தது.

அல்ஹம்றா வீதிக்கு நேரே உள்ள ஆலை மரத்தில் ஒருபோதும் இலைகள் இருப்பதைக் காண முடியாது. அந்த மரத்தில் ஒரு தமிழ் இளைஞன் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதனால் அந்தப் பக்கம் பகல் வேளைகளிலும் சன நடமாட்டம் இராது. இவ் விபரங்களை எல்லாம் நான் ஏன் கூறுகிறேன் என்றால் நமது கொடியேற்றக் குழுவினர் இந்த மையவாடியின் கிழக்குப் புறமாக, தற்போது மையவாடியின் உள்ளே ஒரு கிணறு இருக்கிறது பாருங்கள், அதற்கு அருகில் ஒரு தென்னை, சற்று தென் புறத்தே ஒரு மின்சாரக் கம்பம், இதுதான் நம்ம ஹீரோக்கள் தெரிவு செய்த இடம். இந்த இடத்தில் மீனவர்கள் ஏலவே சில தென்னை மரங்களையும் வளர்த்திருந்தனர். மைதானத்துக்கு நேராக கடற்கரையை அண்டியிருந்த பாரிய நொச்சிப்பற்றை அதன் மேற்கே குதிரையர், யானையர் போன்ற மாட்டுவண்டிக்காறர்கள் மண்ணகழ்ந்து ஏற்படுத்தி இருந்த ஒரு குளம் அப்பாடா இவை பற்றி எழுத வேறு ஒரு பத்தியைத் துவங்கலாம் போல இருக்கிறது,

1959ம் ஆண்டு வரை மருதமுனை மையவாடி சுமார் முப்பது ஏக்கர்களைக் கொண்டிருந்தது. மேலும் இரண்டு பள்ளிவாசல்களிலும் தற்போதைய அல் மனார் பெண்கள் பிரிவிலும் ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டு வந்தன. இந்த ஆண்டில் நமது கிராமத்தில் மூன்று கனி'ட பாடசாலைகள் அன்றைய நாடாளுமன்ற பிரதிநிதி கேற் முதலியார் எம் எஸ் காரியப்பர் அவர்களினால் சிபாரிசு செய்யப்பட்டு அதில் ஒரு பாடசாலையாக மருதமுனை கிழக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பெயரில் தற்காலம் அல் மதீனா வித்தியாலய வளாகத்தில் 2040 அடி ஓலைக் கொட்டில் ஒன்று அமைக்கப்பட்டு 114 மாணவர்கள் ஒரேயொரு ஆசிரியருடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உண்மையில் இப்பாடசாலை குத்தூஸ் வாத்தியார் பாடசாலை என்றுதான் அப்போது அழைக்கப்பட்டு வந்தது. உரிய காலத்தில் அவருடைய இடமாற்றம் நடைபெற தாமதங்கள் ஏற்பட்டதால் கொத்தன் வீ. எம். இஸ்மாயீல் அவர்களே பொறுப்பேற்று நடத்த வேண்டிய நிர்ப்பந்தம், இதில் நாங்களும் மாணவர்களாக இணைந்துகொண்டோம். இவ்விடயம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மேற்படி மையவாடியில் முதலாவது பொது நிறுவனமாக இப்பாடசாலை அமையப் பெற்றது என்பதுடன், கொடியேற்றக் குழுவினர் இதன் கிழக்குப் பகுதியில் கொடியேற்றுவதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஓர் இரவு சுமார் ஏழு மணியிருக்கும், நான் குர்ஆன் அன்றைய பாடங்களை மீட்டிக் கொண்டிருக்கிறேன். ஓடாவி யாரும், ஆலிமும் எங்கள் வீட்டுக்கு வருகை தந்தனர். சில விடயங்களைப் பொதுவாக பேசிவிட்டு கல்முனைக் கடற்கரை பள்ளியில் ஏற்றப்படும் கொடி போல் ஒன்றை தைத்துத் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். ஓடாவியார் வாப்பாவின் மூத்த சகோதரியின் கணவர் என்பதனாலும், கூடவே படல் ஆலிம் என்று ஊரவர்களால் அழைக்கப்படும் அப்துல் கரீம் ஆலிம் ஆகிய இருவரும் தள்ள முடியாதவர்கள் என்பதனால் அந்த கோரிக்கையை வாப்பா ஏற்றுக்கொண்டார்கள்.

இன்னும் கொடி ஏற்றுவதற்கு எட்டு நாட்கள் மட்டும் இருக்கிறது என்பதையும் நினைவூட்டிக்கொண்டனர். இருவர் வீட்டுக்கு வந்தது, கொடி தைக்கச் சொன்ன விடயம், இன்னும் சில நாட்களே இருக்கிறது என்ற விடயங்கள் எல்லாம் மறுநாள் பள்ளி நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டதில் அன்றைய ஹீரோவாக நான் மாறிவிட்டேன். நண்பர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டு படாதபாடு படுத்திவிட்டார்கள். எனது பள்ளி நண்பர்களுடைய பெற்றோர்களுக்கும் விடயம் எட்ட ஊர் முழுவதும் பரவிவிட்டது. இரவுபகலாக மூன்று நாட்கள் கண்விழித்து அழகிய கொடி ஒன்று தைக்கப்பட்டு விட்டது. இதற்கிடையே எங்கள் வீட்டிற்கு அவ்விருவரும் வந்தார்கள் அல்லவா, அன்று காலை நாங்கள் ஆலை மர நிழலில் கொத்தன் சேர் சொல்லித்தரும் பாடங்களில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் வேளையில் குதிரையருடைய மாட்டு வண்டி கிடுகு மரம், நெடியதோர் திருக்கொன்றை மரம் சகிதம் எங்களைக் கடந்து செல்கிறது. பின்னால் சிலர் மண்வெட்டி, கத்தி, அலவாங்கு போன்ற ஆயுதங்களுடன் செல்கின்றனர், இதற்குப் பிறகு படிப்பில் கவனம் இருக்குமா என்ன! முழுக்கவனமும் வண்டியின் பின்னாலேயே சென்றது. உரிய இடத்திற்கு எல்லாம் சென்றடைந்ததும் உடன் சென்றவர்கள் வேலைகளை துரிதமாக மேற்கொண்டனர். தண்ணீர் முட்டி, சோத்துப்பெட்டி வட்டா படிக்கம், பாய் தலையணை என ஏகப்பட்ட சாமான்கள் அவ்விடத்தில் சங்கமமாகின. மூன்றே மூன்று நாட்களில் 15×15 அளவிலான கொட்டில் ஒன்று அமைக்கப்பட்டது. பக்கத்தில் 4×3 அடி அளவிலான வக்கொன்றும் அமைக்கப்பட்டது. பின்னர்தான் அறிந்தோம், கொட்டில் தொழுவதற்கும் வக்கு நீர் நிறைத்து வுழூ செய்வதற்கும் என்று.

கொட்டில் அடித்து வக்கும் கட்டியாகிவிட்டதல்லவா? நீருக்கு எங்கே போவது என்ற பிரச்சினை. கிணறு ஒன்று கட்டியாக வேண்டும். இந்தக் கோரிக்கை அன்றைய கிராமசபை ஐக்கிராசனரிடம் முன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டு உடனடியாக அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டதாயினும் ஒரு மாதம் கழிந்த பின்னர்தான் கிணறு கட்டி முடிக்கப்பட்டது. தற்சமயம் அங்கு காணப்படும் கிணறு பின்னர் கட்டப்பட்டது. நாம் குறிப்பிடும் கிணறு இதற்கு சற்று வடக்கே ஓர் ஆறேழு மீற்றர் தூரத்தில் அமைந்தது. தற்காலிக ஏற்பாடாக நாம் ஏற்கனவே குறிப்பிட்ட இரு பொதுக் கிணறுகளில் இருந்து நீர் தேவைகள் யாவும் நிறைவேறின. பள்ளி அருகில், நிறையவே மண் குடங்களும் செப்புக் குடங்களும் வாளிகளும் வைக்கப்பட்டிருந்தன. வருவோர்கள் எல்லோரும் தாமாகவே முன்வந்து நீர் நிறைக்கும் வேலையில் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் ஏன் பக்தியுடனும் ஈடுபட்டனர். இன்னும் ஒரே நாள்தான் இருக்கிறது கொடியேற்ற, அந்த நாளும் வந்தாயிற்று. நேரம் மூன்று மணி. இன்னும் சற்று நேரத்தில் அசருக்கான அதான் ஒலிக்கப்போகிறது. அதற்கு முதல் அந்த வளாகம் எப்படி காட்சியளிக்கிறது என்று பார்த்து விடுவோமா!

முட்டாசிக்காறன் பிள்ளை என்றால் டை மீராலெப்பை அவர்களுடைய தந்தையின் கடலைக் கடை அதோ தெரிகிறது. பல அறைகளைக் கொண்ட மரத் தட்டம் ஒரு பழைய மேசையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தட்டத்திலும் அவித்த, பொரித்த, வறுத்த கடலைகளும் அன்றைய நாட்களில் அவரது ஸ்பெசல் தயாரிப்பான சீனிக் கடலையும் தட்டத்தில் நிரப்பப்பட்டிருந்தன. தட்டத்திற்கருகில் ஒரு கம்பு நடப்பட்டு இருளை விரட்டுவதற்காக பெரிய லாந்தர் விளக்கொன்று தயார் நிலையில் கட்டப்பட்டிருந்தது. அதற்கு சற்று தூரத்தில் ஆத்திமோட்டார் மூத்தப்பா நாலு கம்பை நாட்டி மேலால் ஓர் பச்சவடம் சேலையை கூரையாக்கியிருந்தார். அவர் ஊரில் வெட்டு முட்டாசி குச்சிமுட்டாசி எனப் பல ஐற்றங்கள் செய்து விற்பவர். அத்தனை ஐற்றங்களும் பல பனையோலைப் பெட்டிகளில் நிரப்பப்பட்டு மேசைகளில் காட்சியளித்தன. மற்றுமொரு மேசையில் அவரது விசேட தயாரிப்பான தேங்கா மஸ்கத்து ஒரு வெள்ளித் தட்டத்தில் பரப்பி வைக்கப்பட்டிருந்தது. அவரது தேங்கா மஸ்கத் மிகவும் பிரபல்யம்.

அதோ ஒரு மனிஷி ஒரு பெட்டிய வைத்துக் கொண்டு இருக்காப் போல தெரியுதே! ஓ, அது நம்மட குருவி மூத்தம்மாதான். வழமையா ஒரு றாத்தல் கச்சான் கொட்டைய வாங்கி வறுத்து விற்று அவட கினாயத்த போக்காட்டுறவ, கொடியேத்தம் எண்டோடன பத்து றாத்தல வாங்கி வறுத்து பெட்டிய நெறப்பி இருக்கா, பக்கத்தில ஒரு குப்பி விளக்கும் குந்திக்கு இருக்க தெரியுது. அன்னா அசனார்ர முட்டாசிக் கடையும் இருக்காப்போல கெடக்குது வாப்பா. அதென்ன பள்ளிக்கு பக்கத்தில ஒரு மறைப்பொண்டு தெரியுது. வளச்சி ஆக்களெல்லாம் புதினம் பார்ப்காப்போலவும் இரிக்கி. கிட்டப் போய் பாப்பம்,

ஆ அது லவ்ட் ஸ்பீக்கர் காற ஆள். அவரைப் பாக்கத்தான் அந்தச்சனம். ஏரியாவிலேயே வடிவேல் அண்ணனுக்கிட்ட மட்டுந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அப்ப ஸ்பீக்கர் செட், ஒரு மாத்தைக்கு முன்னேயே காசு கட்டி புக் பண்ணினாத்தான் தருவார், இல்லாட்டி அவருக்கிட்ட கதைச்சி வேலையில்ல. நம்மட நல்ல காலமோ என்னமோ தெரியல்ல காலைக்காற வெள்ளக்குட்டி அப்பச்சிர கூட்டாளியாம் வடிவேல் அண்ணையெண்டு எப்பிடியோ மோப்பம் பிடிச்சி அந்த செற்றை கொண்டந்ததே ஒரு சாதனைதான்.

ஸ்பீக்கர் போடுற ஆளுக்கு அந்தக் காலத்தில நாய்கருப் பேய்க்கில்லாத மதிப்பு, அவர் இடுப்பில கைய குத்திக்கு பார்க்க பார்வையும், திறீறோஸ் சிகரட்டை பத்தவெச்சி இழுக்கிற இழுப்பும் அந்தப் புகைய றவுண் றவுணா ஊதுற அலாதியும், ப்பா சொல்லி வேலையில்ல, இப்படி வளாகம் களை கட்டியிருக்க, மக்கள் கூட்டமும் நிறைந்து காணப்பட்டது. கம்பாயப் பிடவை சோமன் பிடவை என்று வண்ண வண்ண நிறங்களை உடுத்தி எமது மாதரசிகளை தங்களை முந்தாணையிட்டு முற்றுமாக மறைத்துக் கொண்டு நின்ற காட்சி அலாதியானது. வயதான ஆண்கள் பச்சவடம் சாறன் கட்டி கைபோட்ட பெனியன், சிறுவால் அணிந்தவர்களாக காட்சி தந்தனர். பெரும்பாலானவர்கள் மொட்டைத் தலையுடனும் அதில் பூசப்படும் எண்ணெய் வழிந்து விடாமல் இருப்பதற்காக தென்னை ஓலை இதழ் கொண்டு வார் சமைத்து தலையை வளைத்து காப்பறண் இட்டிருந்தனர். மாணவர்களில் அதிகமானவர்கள் கால்சட்டையுடன் சேர்ட், சிலர் கை பென்யனும் அணிந்திருக்க சில ஆசிரியர்கள் நீளக் கால் சட்டை வேஷ்டி அணிந்திருந்தனர். பொதுவாக வளாகம் மிகவும் களைகட்டியிருந்தது. வெள்ளை சாறன் வெள்ளை சேர்ட் தொப்பிகள் அணிந்தபடி நமது கொடியேற்ற ஹீறோக்கள் நின்ற வேளையில் ஆலிமின் கணீரென்ற குரல் கேட்கிறது.

வாருங்கள், மம்மலிவா தண்டயல்ல ஊட்ட இருக்க கொடிய ஊர்வலமா கொண்டு வருவம். ஆலிம், ஓடாவியார் கைகோர்த்து முன்னால் நடக்க அவர்கள் பின்னால் இளைஞர் குழுவும், என்ன செய்யப்போகின்றார்கள் என்பதனைக் காண பல பொது சனங்களும் இவர்களைப் பின் தொடர்ந்து சிறுவர்களாகிய நாங்களும் உற்சாகத்துடன் நடக்கின்றோம், எங்கள் வீட்டுக்குத்தான் கொடி எடுக்கப் போகிறார்கள் என்பதில் எனக்குப் பெரிய நடப்புத்தான்.

**(வரலாறு தொடரும்)**



பன்னூலாசிரியர்
ஏ. ஆர். ஏ. சத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலாவுக்கு வாழ்த்துக்கள்

A. R. அப்துல் றசூல்
(ஓய்வுநிலை அதிபர்)

ஐந்தாவது ஆண்டதனில்
அவனியிலே பவனிவரும்
வெண்ணிலா உனக்கு
விண்ணுயர்ந்த வாழ்த்துக்கள்.

வானத்து வெண்ணிலவு
வையகத்தை ஒளியூட்ட
பூமியின் புகழதனை
புத்தகமாய் புகட்டுகின்றாய்.

அறிவார்ந்த
உன் ஆக்கம்
அகில உலகமதை
ஆட்கொண்டு நிற்கிறது.

சிந்திக்க வைக்கும்
சிறந்த பல கட்டுரைகள்
அறிவு சார்ந்த
அழகான ஆக்கங்கள்
வாசகர் உள்ளங்களை
மகிழ்வுறச் செய்கிறது.

நான்காவது ஆண்டதனைத்
தாண்டி
ஐந்தாவது வயதினிலே
அவனியிலே பவனிவரும்
வெண்ணிலா நீ!

இன்னும் பல்லாண்டுகள்
இனிமையாகப் பயணம் செய்ய
இறையருளை அனுதினமும்
இறைஞ்சுகிறேன்.

கவிஞரின் நன்முயற்சி
கடினமானது - என்றாலும்
சிந்தித்து செயலாற்றும்
செயல் மூலம்
சிறந்து விளங்கி
மக்களுக்கு இன்று
வளமதை ஊட்டுகின்றார்.

வெண்ணிலாவில்
வயது போனோருக்கும்
வளமான ஆக்கங்கள்
இளையோருக்கும் அங்கே
இனிப்பான தகவல்கள்.

இன்னும் பல்லாண்டுகள்
வெண்ணிலா பவனிவர
வல்ல அல்லாஹ்
கருணையினைப் பொழியட்டும்.

●

27-06-2025.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபி சுபேதியின் தன்கா கவிதைகள்

சூரியன் கருப்பாய்
மாறுவதைப் பார்க்க எல்லோரும் ஓடுகிறார்கள்
என்னால் வெளியில் செல்ல முடியாது
உன் கடிதத்தை படிக்கும் வரை
என் கண்களுக்கு அமைதி இல்லை.

நீ சொன்னதை நான் நம்பினேன்
ஏனெனில் நீ நீல வானத்தில் பிறந்தாய்
ஏன் என நான் அறியேன்
எந்நாளும் உன்னருகில் ஆறிய
காயங்கள் நீலமாய் இருந்தன.

அவள் அந்த இருக்கையில்
அமர்ந்து குளிர்ந்த காற்றாய் வீசினாள்
சூடேறிக் கொண்டிருந்தது சூரியன்
அந்த இருக்கை இப்போது பாதி உடைந்த
இதயம் போல் காணப்படுகிறது.

என் வீட்டுக்குள் வந்த சூரியன்
ஓர் அழகிய நீர்வீழ்ச்சியாய் கதிர் பரப்பி
ஓடுவது போல் காட்சி அளித்தது ஆயினும்
ஒரு சேற்று தவளை போல வானத்தில் எழுந்து செல்லும்
ஒரு கோடாக அது மாறியது.

காலை வணக்கம்
நீ எங்கிருந்து வருகிறாய்
இவ்வளவு நீண்ட
இரவு தனைத் தாண்டி
என் முற்றத்துக்கு வர.

●

சிங்கள மொழியில்
**பராக்கிரம**
**கொடித்துவக்கு.**

தமிழில்
**கலாபூஷணம்**
**மாவனல்லை**
**எம். எம். மன்சூர்.**

அபி சுபேதி

நேபாள நவீன கவிஞர், மொழிபெயர்பாளர் மற்றும் விமர்சகர்.

2010 தெற்காசிய இலக்கிய விருதைப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் 18:

# தடம்பதித்த ஈழத்து கவிஞர்கள்

## கடலோடு பேசிய வனங்களின் சிறகுகள்

- மு மு மு பாசில் -

அலைகளின் அதிசயங்களில் ஒன்றாய்
சிறகு முளைத்து எழுகிற
மீன்களின் வால்களில்
நுரையாகப் பறக்கிற நான்களின்
ஒற்றைப் பட்சி என் தோழில் அமர்ந்து
காற்றில் பட்டம் விடுகிறது

நானை மறந்த
என் கழுத்தைச் சுற்றி
நூற்பந்துகளின் நடனச் சுற்றுகளில்
பந்தய நாள்களை எண்ண விடாமல்...
தோனாக் கனவு காணும்
மணலை மீன்கள் மாடிப்படியேறி
படுக்கத் துணியும் மெத்தைச் சுகங்களை
கெவ்விச் செல்லும் ஒட்டகச் சும்மாடுகள்

கானல் நீரில்
பாலைவனச் சிப்பி கொண்டு தாகம் தீர்க்கும்
நரிக்குறவர் மரபுகளின் படி
வனத் தேனை உசிரோடு கொண்டு வர
என் நாவை
தூக்கிச் சுமக்கும்
மான்களைப் புரட்டி எடுக்கிறது
என் வாய்க்குள் இருந்து வெளிவரும்
பல வர்ண வண்ணாத்திகள்.

●



மூத்த எழுத்தாளர்,
பத்திரிகையாளர், கவிஞர்
மு மு மு பாசில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் 18:

# முஞ்சரி கவிதைகள்

கவிதை - கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன் -

## தவிக்கும் மனங்கள்

என்னவுலகோ ஏன்பல வேடிக்கையோ
எண்ணங்கொல் செயலே தொடர்கதையோ
புன்மைச்செயல் புரிகின்ற மானிடரே
புரியாதெழும் பொழுதே கண்முன்னே

எங்கு பார்த்தும் எரிகின்ற பிரச்சினைகள்
எடுத்துத்திருத்தா நாதியற்ற வீண்கரங்கள்
பொங்குமுணர்வைப் புரியாத தலைகளினால்
பொறுமைக்கூண்டில் தவிக்கும் மனமிங்கே

வளங்கள் சூழ்ந்து மகிழ்ந்திட்டதெம் நாட்டில்
வனங்கள் பூண்ட மனங்கள் பாலையதால்
தளங்களளிந்து தவித்துப்பொறுத்தோரின்
தன்மையுள்ளம் நிம்மதியடைவதெப்போ?



எத்தகைமுன்னேற்ற மெத்துறை நாம்கண்டும்
எழுகின்ற பொழுதில் மாற்றங்களில்லையெனில்
இத்தரை மண் பூத்துச்செழித்திடுமோ
இருந்திங்கு வாழ்வோர் எண்ணுவதெந்நாளோ?

கொடுமை, கொள்ளை, கொலை புரிதலெனக்
கொண்டோர் திருந்தக் கொள்கை வகுத்துத்
தடுக்கக் கரமிணைத்து தலைமைப் பொறுப்புளோர்
தரணியிலிருந்தாலே விரும்பும் வாழ்வு வரும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெலிகம ரிம்ஸா முஹம்மத்.

# அன்பின் மொ(வ)ழி



என் துன்பங்களை உன் தோளில்
சுமக்கத் தேவையில்லை..
மிகவும் ஆறுதலாய்
இரண்டு வார்த்தைகள் கூறு!
இருள் சூழ்ந்த இரவில்
சிறு ஒளியாய்த் தோன்று!

விதிகள் வலி தரும் வேளையில்
புரிதலோடு நீ இரு!
வலி தரும் வாழ்க்கையைக் கடக்க
ஒரு நிழலாக வேணும் நீ இரு!

காலைப் பூக்களில் விழும்
பனித்துளி போல
சிறிதாய் நீ உதிர்க்கும் – ஒரு
உற்சாக வார்த்தை
நாள் முழுவதற்கும்
போதுமாகிவிடும் எனக்கு!

பசுமை தரும் மரமாய்
நிழல் தருமே நல் அன்பு..
பயணிக்க சிரமப்படும் போது
வழி காட்டுமே அன்பின் மொ(வ)ழி!

கருவறை இருட்டில்
தொடங்கிய பயணம்
விடியலைத் தேடி
நகரும் சிரமம்!

நீல வானின் மென்பஞ்சு
மேகங்கள் போல – ஒருநாள்
கலைந்து போகும்
என் துன்பங்கள் யாவும்!

தொலைவில் ஒளிரும்
மின்மினி வெளிச்சம்..
அதுவே என் வாழ்வின்
நம்பிக்கை நட்சத்திரம்!

ஓடும் நதிகள்
திருப்பங்கள் கேட்பதில்லை..
எதிர்கொள்ளப்படும் துயரங்கள்
ஒரு போதும் தொடரப்போவதில்லை!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சோலையிலே



அங்கொன்றும் இங்கொன்றுமாய்
மரபுப் பூக்கள் கவிதைச்சோலையிலே
மலர்ந்து மணம் வீசுது!

புதுமைக் கவிப்பூக்களும்
கவர்ச்சியான, பல வடிவங்களில்,
முகம் காட்டுது!

புதிதாய் முளைத்தவை
பொருளில்லா விடினும், புதுமையாய்க்
காட்டித் தம்பட்டம் அடிக்குது!

விருதுத் தேன்பெறவே பலதேனீக்கள்
கவிப்பூக்களுடன் ரீங்காரமிட்டு
இங்கும் அங்கும் திரியுது!

வித்தகக்கனி சுவைத்திடப்
பேசும் கிளிகளும் பாடும் குயில்களும்
இப்போதெல்லாம் கடுமையாய்
உழைக்குது!

வகை வகையான, பாப்பூக்களும்
தொகை தொகையாக,
நூல்வடிவாகுது!

செந்தேனாய்க் கவிச்சுவையை
அருந்துவோரின்,
கரங்களிலே பாப்பூ நூல்கள்
தினந்தோறும் தவழுது!

முனைந்து புனைந்த, கவிப்பூக்களின்
நறுமணமதை சுவாசிக்க,
அழைக்கையிலே,
விலகியே பல மனங்கள் நழுவுது,
நகைக்குது!
நன்னயமும் நறுமணமும் கொண்ட
பாமாலைகளும் கவி மலர்களும்
நுகர்வோர் இன்றிப்
பல இடங்களில் வாடிக் கிடக்குது!

சோலையோரத்திலே, சிறு சிறு
வடிகால்களில்
பொறாமைக் குப்பைகளும்
நிரம்பிக் கிடக்குது!

புத்தாக்கச் சிந்தனையைச் சத்தூட்டி,
வளமாக்கும் பாசறைகளும்,
ஆங்காங்கே, நடக்குது!

கவிமணம் வீசிடும் சிற்றிதழ்களும்,
பல வண்ணக் கவிப்பூக்களுடன்,
உலாவுது!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேலணையூர் ரஜிந்தன்.

# உயிர்த்திருத்தலின் சாட்சியங்கள்



வெறுமையை உணரத்
தலைப்படும் போதெல்லாம்
தோள் தட்டிக் கொடுக்கிறது
பந்தல் உதிர்க்கும் மல்லிகைப்பூ

உச்சி வெயிலின்
வெண்மையைத் தணிக்கும்
முற்றத்துத் தருவிடம் தான்
தன்னலமற்று நீள்கிறது நிழற்கரம்

தனித்திருத்தலின்
தவிப்பைப் போக்கும் சிட்டுக்களே
தருணங்களை மேலும்
பெறுமதியாக்குகின்றன

முதற் துளியில்
முழுதாய்த்தளுவும் மாமழை
பிரபஞ்சத்தின் அன்பை
தேகத்திடம் பரிமாறுகின்றது

கேட்காமலே வருடிச்செல்லும்
இளந்தென்றல் பலசமயங்களில்
ஆறாத் துயரையெல்லாம்
ஆற்றிவிட்டுப் போகிறது

முகமறியா மனிதர்கள் சிந்தும்
புன்னகைச் சாரல் தான்
வாழ்வின் பிடிப்பை
மேலும் வலுவூட்டுகின்றது

உயிர்ப் பந்தங்களின்
உண்மை வார்த்தைகளில்தான்
நிறைவாய்த் தளைக்கிறது
நம்பிக்கைப் பெருவிருட்சம்

என்னிலையிலும் தன்னிலை மாற
அன்னையின் பிரார்த்தனைகளே
உயிர்த்திருத்தலின்
இவ்வேளைக்கான சாட்சியங்கள்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏ. சீ. எப். பஸீயா,
கேகாலை.

# எவ்வளவு மோசமானது இந்த உலகம்...



தனது துன்பங்களை யாரிடமேனும்
சத்தமாக சொல்லும் வரை
அமைதி காக்கிறது...

தனது வலிகளை யாருக்கேனும்
தெரிவிக்கும் வரை காத்திருக்கிறது...

உடல் தணியும் வரை
அதன் சூட்டை உணர்வதற்கு
யாரும் இருப்பதில்லை.

மனங்கள் உடைந்து சிதறும் வரை
அதன் இரைச்சல் யாருக்கும் கேட்பதில்லை.

மனிதர்கள் என்னை
நினைத்துக் கொள்ள,
நான் முற்றிலும் இல்லாமல் போக வேண்டுமா?

பிறரின் கண்களில் கனிவு துளிர்க்க,
நான் அழுகையின் விளிம்பில் நிற்க வேண்டுமா?

நம்மை புரிந்து கொள்ள,
நம்மில் ஒரு பகுதி இறக்க வேண்டுமா?

எவ்வளவு மோசமானது இந்த உலகம் !

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது ஒரு பொற் காலம்



சிட்டுக்களாய் நாம்
சிறகடித்துப் பறந்த காலம்
பட்டுச் சட்டைகளோடு
பட்டாம்பூச்சியாய் பறந்து திரிந்து
கிட்டிப்புல்லும் பம்பரமும்
கிளையொடித்து குஞ்சூடும்
கூட்டாஞ் சோறுமாய்
கூடி விளையாடி மகிழ்ந்த காலம்
அது ஒரு பொற்காலம்!

வேளாண்மை ஊதியும்
கமுகுமரச் சக்கரமுமாய்
ஓயாமல் நண்பர்களோடு
வயல்வெளியில் ஓடிவிளையாடி
ஒற்றைக்கால் நாரையாய்
கெந்தி மிதித்து
வேளாண்மை ஊதிசெய்து
வரப்புகளில் வட்டமிட்டு
நூலிழுத்து பட்டம் விட்ட காலம்
அது ஒரு பொற்காலம்!

பள்ளித்தோழர்களோடு
பட்டாசு கொளுத்தி பயந்தோடி
ஊஞ்சல் கட்டி ஆடிமகிழ்ந்து
ஊரெல்லாம் நடைபயின்று
நாவல் பறித்துண்டு ஊதாநிறத்து
நாவைப் பார்த்து ரசித்து
வேர்க்கிழங்குகள் அவித்துண்டு
விளையாடி மகிழ்ந்த காலம்
அது ஒரு பொற்காலம்!

மூத்தோர் வார்த்தைகள்
முதுமொழி வேதாந்தம் நமக்கு
அன்பான கண்டிப்புக்கள்
அழகான வேலி நமக்கென்றும்
அயலாரும் நம்முறவாய்
அழகான கிராமத்து மண் வாசம்
களமைத்து சூடுமிதிக்கையில்
வைக்கோலில் புரண்டெழுந்து
வையகமே வேறேது நமக்கு!

ஒற்றையடிப் பாதைவழியே
ஓடியாடி நாம் மகிழ்ந்த காலம்
இளநீரும் மாம்பழமும்
இளையோர் நமக்காய் காத்திருக்கும்.
பள்ளித் தோழர்கள் பரிமாறும்
நெல்லிக்கனி நாவூறும் .
இன்றென்ன நம் வாரிசுகள்
இயற்கையின் இரசனையும்
நாள் முழுதும் கணினிக்குள்
நான்கு சுவருக்குள் அவருலகம்!

அது ஒரு பொற்காலம்
மீண்டும் வருமா என்ன?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செண்பகச்சோலையாள் ஆய்ஷ்

# விரல் நுனியில் சுழலும் உலகம்



வீணைக்குத் தெரியுமா
மீட்டுவது நீயா நானா என்று
வீணையைத் தொட்ட
விரல்கள் தானறியும்
விரல் நுனிகள் மீட்டப்போகும்
கீதம் ஏதென்று.

உனக்குக் தெரியுமா
உன் கருவில் உதித்தது
ஆணா பெண்ணா என்று
பிறந்த குழந்தை அறியும்
தனக்குப் பாலூட்டும் அன்புத்
தாய் நீதானென்று.

விளையும் நிலமறியுமா
விதைத்தவன் யாரென்று
வியர்வை சிந்தி உழைத்த
விவசாயி அறிவான்
பயிரின் விளைச்சலும்
பருவ காலமும் ஏதென்று

மேகம் அறியுமா
மோதிக் கொண்டால்
பெய்வது மழை தானென்று
பெய்வித்தவன் அறிவான்
வரண்டு வாடும்
பூமிக்கும் தாகம் உண்டென்று

காலம் அறியுமா
கடந்தவை யாவும் வீணென்று
கற்றவர் அறிவார்
காலத்தின் அருமை ஏதென்று
காற்றுள்ள போதே தூற்றுதல்
காலத்தின் தேவையென்று.

புயல் அறியுமா
வரப்போவது பேரிடியென்று
மனிதன் அறிவானா மண்ணில்
இன்னா செய்திடின்
இறைவனின் தண்டனையில்
இயற்கை அனர்த்தமும் ஒன்றென்று

மனிதன் அறிவானா
வாழும் காலம் என்னவென்று
கருவினில் உதிக்கும் போதே
எழுதி விட்டானே
இறைவன் ஏட்டில் அன்று
மறைத்தானே யாவும் அழகாய்
உயர்ந்து.

எண்ணங்கள் அழகானால்
வாழ்வெலாம் வண்ணங்கள்
உள்ளங்கள் அழகானால்
உணர்வெல்லாம்
உண்மையின் தேடல்கள்
உன் நிலையும் உயரும் - உலகம்
உன் விரல் நுனியில் சுழலும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுமை
குருநாகல்

# பூமி

உருண்டு ஓடும் பந்தை போன்றது
நிமிர்ந்து நீண்டு வாழ இடம் கொண்டது
ஆதம்பாவா முதல் மனிதகுல இறுதி ஆள் வரை ஆளப்போவது
நல்லோரும் தீயோரும் நிறைந்து நிற்பது

நாமெல்லாம் வாழ ஆண்டவனால் உருவாக்கப்பட்டது
கொலையும் கொள்ளையும் கொடூரக் காமக் கதகளியும்
வலியும் வனப்பும் வார்த்தையின் தீப்பிளம்பும்
செறிவும் செருக்கும் செங்கமலம் குலுங்கும் நன்னூற்றுப் பொய்கையும்

உணவுக்கு மெருகூட்டும் உவர் நீர் பரப்பும்
ஒன்றல்ல ஆயிரம் ஆயிரம் உண்டு இந்த வையகத்திலே
கர்மம் போற்றும் கடமைகளும்
தர்மம் வழங்கும் தண்டனைகளும்

ஆண்டியும் வாழ்வான் அரசனும் வீழ்வான்
ஆங்காங்கே இருக்கும் இடத்தினிலே
அழகாய் படைத்தவன் படைப்பாளன்
அவலட்சணமாய் ஆக்கியவன் ஆறறிவு கொண்டவன்

வந்தோரை எல்லாம் வாழ வைத்து
வகை வகையில் வண்ணம் காட்டி
உண்ண உறங்க இடம் கொடுத்து
அவன் கடைசிக் கண் மூடிய வேளை பார்த்து

தன்னுள் இழுத்துக்கொள்ளும் காந்தமே இப்பூமி
ஆயுள் தீரும் முன்னாடி
கடவுளைப் போற்றி
புண்ணியம் அடைந்து கொள்

●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ரீஹானா ஹரீஸ்கான்
தெல்தோட்டை (கண்டி)



# தாய்மை

சுகமான ஒரு சுமையை கருவறையில் சுமந்து
வலிகளை தாங்கிய இரு விழிகளுக்கும் ஒரு மிரட்சி
தன் முன் ஒளி வீசிக் கொண்டிருக்கும் குமிழ்களை கண்டு
அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதுபோல
மிரண்ட விழிகளுக்கு ஒளியும் பேய் என்பதை
தலைப்பிரசவத்திற்கு தயாரான நான் உணர்ந்தேன்
மெல்ல மேனியெங்கும் வலிகள் ஆர்ப்பரிக்க
பிணைந்த விலா எலும்புகள் பிரிவடையும் ரணமும்
சீம்பால் சுரந்து இறுகிய மார்ப்பகங்களில்
விடுதலைக்காக துடிக்கும் அமுத சுரப்பியின் வலியும்
அத்திவாரமாய் எனைத்தாங்கி நிற்கும் முள்ளந்தண்டோ
துவைத்து பிளியும் துணியைப் போல
பிளிந்து கசக்கப்படுவது போன்று உணர்ந்தேன்
தண்ணீர் நிரப்பபட்பட்ட ரப்பர் பை
அமுக்கத்தின் தாக்கத்தை தாங்க முடியாமல் சிதறுவதை போல்
ஈரைந்து மாதங்கள் தேங்கி நின்ற குருதி பீறிட்டு பாய்ந்து வெளியேற
வீறிட்டு வெளியேறியது நான் காத்து சுமந்த சுமையின் பிஞ்சுக் குரல்
என் மேனி சுவைத்த அத்தனை வலிகளும் ஒற்றை நொடியில் மறைந்து போனது
நான் கருவறையில் சுமந்த சுமை
என் கரங்களில் தவழ்ந்த அந்த நொடியில்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைத்தவன் மீது கொண்ட காதல்



உன்னைக் காணும் வழியின்
வலியை
முற்கூட்டியே அறிந்திருந்தால்
உன்னைக் காதலிப்பதை
கனவிலும் நினைத்திருக்கமாட்டேன்.
என்ன செய்வது?
திரும்பிச் செல்லும்
எனது
இடத்தையும் இழந்து
வழியையும் மறந்து
திக்குத்தெரியாத
வனாந்தரத்தில்
சிக்கித்தவிக்கிறேன்.
இனி என்னால் உன்னைப் பிரிந்து
ஒரு அடிகூட
எடுத்துவைக்க முடியவில்லை.
நீயே வந்தென்னை அழைத்துச்செல்.

நமது காதலின்மீது சத்தியமாக
இன்னும்
மாறாத உனது வாக்கின்மீது சத்தியமாக
நம் காதல் தோற்றுவிடாது
என்ற நம்பிக்கையில்
என் உயிரை கையில் பிடித்துக்கொண்டு
பித்தனாய் அலைகிறேன் இறைவா.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடையேறக் கூடுமோ...

வசந்தகாலம் வந்த தென்று
கூவித் திரிகின்றதொரு குயில்

கசந்து போன வாழ்வைக்
கூற முடியாமல் தவிக்கின்றதொரு பெண் குயில்

பருவகாலம் மாறிச் செல்லும்
எத்தனைக் கோலம் புவி மேலே

பருவமங்கை வாழ்க்கை மாறாமல்
எத்தனைக் காலம் இனி மேலே

கல்வியில் குறையவில்லை
கற்பொழுக்கமும் பேணுகிறாள்

பெற்றோரைக் கைவிடவில்லை
மற்றோரையும் அரவணைக்கிறாள்

நல்லாள் அவளென்று பாட
நற்சான்று வேறென்ன நான் தேட

இல்லாள்க்குத் தகுதி
இதற்கு மேலும் உண்டோ

அல்லல் பெண் வாழ்வில் தீர
நல்ல வழியேதுமுண்டோ

இது வென்ன புது வித கோலம்
இனியாவது மலருமா அவளது வசந்த காலம்.



●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவிப்பொய்கை ஜவ்ஸன் அஹமட் -

# ஆத்தி மேடு

அந்தி நேர கடற்கரை
ஒற்றையடிப் பாதை
பாட்டன் முப்பாட்டன் பொழுதுகள்
இராப் பகலாக கொண்ட இடம்
கூடிக்கலைந்த குளத்தடியது,

சின்னம்மா மகளின் சிறுவயது
காதல் கதைகள் எல்லாம்
சில நேரம் அரங்கேறி
காகிதப் பரிமாற்றம் அந்திய
நேரம் கொண்ட இடம்,

மேற்கடி வானின் பச்சை வீடு
மேளதாள இசை சுமந்த
பறவைகள் ஒலி கேட்கும்
காடல்லாத தரிசல் பூமி
மருத நிலத்தின் பண்பட்ட பூவுலகு

மனிதன் பறவை
இரு இனம் சேர்ந்து
ஒற்றுமை கீதமிசைத்திட
உறவாடிக்கலையும்
சுதந்திர பூமி ஆத்தி மேடு

மாலை பிரசவம்
மணிக்கணக்கல்ல
ஆயினும் ஆயிரம் பறவைகள்
தங்கிடும் இளைப்பாறும்
இறைவன் கொடுத்த வீடு
இன்றைய தலைமுறை
பெயரைக் கூட கேட்டிராத
மேற்கு வீதி ஆத்தி மேடு
அலைபாயும் மனங்களில்
நிம்மதி தேடி அலைமோதும் ஓரிடம்.

●





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- ஒலுவில் நழீம் ஹனீபா -

# அப்பாவின் அன்பு

தாயின் பாசம்
உணர்வில் கலந்தது

தந்தையின் அன்பு
வாழ்வில் சிறந்தது



வலிகள் சுமந்து
பெற்றாள் அன்னை

வேதனைகள் தாங்கி
வளர்த்தார் தந்தை

அம்மா எமக்கு
உலகைக் காட்டினாள்

அப்பா வாழ
வழி காட்டினார்

வியர்வை சிந்தி
உழைத்து உயர்ந்தார்

பிள்ளைகள் நலனுக்காக
தன்னலம் மறந்தார்

கரம் பிடித்து
அறிவை வளர்த்தார்

அதட்டி நல்லொழுக்கம்
நன்று புகட்டினார்

உன்னதமாய் உழைத்து
உணவு ஊட்டினார்

எதிர்காலம் மிளிர
துயரங்கள் தாங்கினார்

அவரின் தியாகம்
என்றும் சிறப்பே

மறைந்தும் நினைவுகளாக
உயிர் வாழ்கிறார்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை



ஈரைந்து மாதங்கள்
கருவறை ஏந்தி
ஊணும் உறக்கமும்
பல தினம் துறந்து
வேதனை நோய் எனப்
பல விதம் ஏற்று
மரணத்தின் வாசலில்
துணிவுடன் நின்று
சிசு முகம் பார்த்ததும்
உன்முகம் மலர்ந்ததே.

உதிரம் பிழிந்து நீ
அமுதமாய் ஊட்டினாய்
அன்புடன் பாசமும்
பொழிந்தெனைப் போற்றினாய்
ஈ நுளம் (பு) பெறும் பாயின
தீண்டிடா வண்ணம்
கவசமாய் காத்தாய்

வண்ணம் வண்ணமாய்
ஆடைகள் தந்தாய்
பரிவுடன் எனைக்
கைகளில் ஏந்தி
பக்குவம் பகர்ந்து
பள்ளியில் சேர்த்தாய்.
நாளொரு மேனியாய்
வளர்வது பார்த்தாய்
அகமது கண்டு
முகமது மலர்ந்தாய்.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா -

# போனதெல்லாம் போகட்டும்



ஏழ்மையான குடிசையிலே
எறும்பு போல வாழ்கின்றோம்
தாழ்மை சூழ நாளெல்லாம்
தாழ்ந்துதானே போகின்றோம்!

வாழ்க்கை ஒரு வட்டமுன்னு
வருந்திடாம இருக்கிறோம்
ஆனபோதும் பசியால
ஆனந்தமின்றி துடிக்கிறோம்!

வயசு போன தாத்தாவும்
வாடி வதங்கிய பாட்டியும்
என்னுடைய பெற்றோரும்
நானும் ரெண்டு அக்காவும்

இளமையெல்லாம் தொலச்சிபுட்டு
கனவயெல்லாம் கலச்சிபுட்டு
சக்கையாக வாழ்கின்றோம்
துக்கத்தால மாள்கின்றோம்!

வெக்கப்பட்டு வாழ்றதுக்கும்
வேலி போட்டு வாழ்றதுக்கும்
வெறும் வயித்த அடமானம்
வெச்சிருக்க முடியலியே!

ஆசைபட்ட துரைசேரு
அங்கயிங்க அலைவாரு
ஓசை கேட்டிடாதபடி
ஒருக்கா என்ன தொடர்ந்தாரு!

ஓடி ஒளிஞ்சி ஒதுங்கினேன்
ஒரு புறாவப் போல பதுங்கினேன்
களவாணி துரைய பாத்துபுட்டு
ரெண்டு கண்ணும் பிதுங்கினேன்!

நேரம் காலம் தெரியல்ல
புத்திகூட தெளியல்ல
ஓங்கி நானும் அறஞ்சிபுட்டேன்
ஓடி மீண்டும் மறஞ்சிக்கிட்டேன்!

இரண்டு நாளு லீவெடுத்தேன்
அடுத்த நாளு கொழுந்தெடுத்தேன்
அஞ்சு மணிக்கு காசெடுக்க
அஞ்சியபடி நான் போனேன்!

கொழுந்த அளந்து பாத்துபுட்டு
பருந்த போல பாத்தாக
பாதி காச குறச்சிப்புட்டு
மீதி காச திணிச்சாக!

சீறும் பாம்பு போலானேன்
சீக்கிரமே வாய் தொறந்தேன்
ஞாயம் கேட்டு சண்ட போட்டு
வேலயால துரத்தப்பட்டேன்!

வெட்டிக்கத பேசுறதுக்கும்
திட்டி என்ன தீக்குறதுக்கும்
புதிய கூட்டம் புதிதாக
புத்தி மாறி சுத்துதுங்க!

போனதெல்லாம் போகட்டும்
ஆனதெல்லாம் ஆகட்டும்
இனி வாற காலத்துல
வசந்த காத்து வீசட்டும்!!!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிஸ்வா ஸலாம் -
தர்கா நகர்.

# விதவையின் குரல்



இனி வாழ்க்கை அவ்வளவுதான்
என்பது நானே தீர்மானித்ததா
இல்லை சமூகமும் உறவுகளும்
தீர்மானித்துக் கொண்டதா

இது உன் விதியென்று
கூறித் தப்பிக்கப் பார்க்கிறார்கள்
தீப்பார்வைகளுக்குள் சிக்கித்
தீக்கிரையாவது நானும்
என் உணர்வுகளுமல்லவா

கத்திமேல் நடக்கும்
வாழ்க்கையிது கத்திக்
கதறிப்பார்த்தும்
கணக்கில் சேர்வதில்லை
எங்களின் ஆற்றாமையும்
அழுகுரலும்

அடாவடித்தனமாய்
ஆக்கிரமிக்கப் பார்க்கிறார்கள்
ஒழுக்கமாய் வாழ்வளிக்கச் சொன்னால்
கௌரவக் குறைச்சலாம்
நல்லவர்களாய் நடமாடும்
குள்ளநரிகள் இவர்கள்

உதவுவதாய்க் காட்டிக்கொண்டு
ஏதோ எதிர்பார்க்கிறார்கள்
உதறிவிட்டு ஓடிப் போகவும்
வழியின்றி வறுமை
வாசல் வரை வந்து
பயங்காட்டுகிறது

எங்களுக்குள்ளும் கனவுகள்
எதிர்பார்ப்புகள் தேடல்கள்
இன்னும் தீர்ந்து போய்
விடவில்லை

ஆசைகளை அடகுவைத்து விட்டோம்
தேவைகளையும் குறைத்துக்
கொண்டோம்
இனியென்ன
குறை சொல்லி மனதைக்
கூறுபோடாமல் இருந்தாலே போதும்
பட்டமரமாகவேனும்
வாழ்ந்து விட்டுப் போகிறோம்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலில்லா நாய்கள்



சாப்பிட்டு முடிந்ததும்
வால் இல்லாத
நாய்கள் அதிகம்.

கசப்புத் தெரியாத
பாகற்காய்கள் மலிவு.

நயவஞ்சகக் கடல்களும்
சமுத்திரங்களும்
இரு கண்களாகி விட்டன.

சிரிப்புப் பாம்புகளை பரிசளிக்கும்
முலாம்பூசிய ஆன்மீக அடுப்புகள்
இலவசமாய்
அடுப்படிக்குள் வருவது ஆபத்து.

சில சிரிப்புகள் பட்டால்
நைல் நதியின்
இதயம் கருவாடாகிவிடும்.

வெண்மையான பேச்சுக்களின்
பின்னால்
சிகப்பு
கடுஞ் சிகப்பு
காங்குகளின் பழுப்பு
கழுகுகளின் குணங்கள்
கிழவிகளின் புறுபுறுப்புகள்
இதை போன்றதை இன்னும்
நீங்களே சேருங்கள்.

நிதானமாக
ஊர்களை வாசித்துப் பாருங்கள்
நடிப்பவர்களுக்கு
நடிப்பவர்களே
விறகுகள்.

நடிப்பவர்களுக்கே
நடிப்பவர்கள்
எதிரிகள்.

ஒரு வேதநூலை உடையோர்
நான்கு நிறத்து
கட்டிடங்களாகி விட்டனர்.

சில ஆன்மீக போதனைகளில்
ஐந்து விரல்களும்
சுட்டு விரல்களாய்.

வாலில்லா
நாய்கள் அதிகம் என்றோமே!

நாமிந்த கூட்டத்தில்
கழிந்து விடுவோமே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டோடு மாப்பிள்ளையாய் போனவனின் ஒரு நாள் வாழ்க்கை இது....

நானும் இவனுக்கு குறைஞ்சவளா
தாலின்னு ஒண்ணு கட்டிட்டா
வேலைக் காரியா நான் இவனுக்கு
என்னோட தராதரம் தெரியாதவன்...

ஒண்ணுக்கு ரெண்டு பிள்ளையாச்சு
உருப்படியா ஏதாச்சும் செஞ்சானா
என்னோட வீடுமட்டும் இல்லையினா
வீதியிலதான் இவன் கிடந்தது
உறங்கணும்...

உழைக்கேன்னு சொல்லிட்டுப் போறான்
ஒரு மாசம் கழிச்சேதான் வாரான்
குடிக்கானோ கூத்தியாளுக்கு
குடுக்கானோ
முழுகாசும் கையில வரல...

'தலையெழுத்து' இவன எனக்கு
கட்டிவச்சு தொலைச்சிட்டாங்க
சொன்னாலும் சுரணை இல்லை
போயும் தொலைய வில்லை...

சொந்தத்துல நான் வாக்கப் பட்டா
சுகமாத்தான் வாழ்ந்திருப்பேன்
கண்ட பயலுக்கு வாக்கப்பட்டு
காலமெல்லாம் நிம்மதி இல்ல...

என்ன சொல்லி என்ன செய்ய
எனக்குன்னு வந்த இம்சை
முதல் எழுத்து பிள்ளைக்கு வேணும்
அதுக்காவது இருந்துட்டு போட்டும்...



ஆத்திரத்தோட அவள் சொன்னதை
அமைதியா நின்னு கேட்டுகிட்டான்
வீடு வாசல் இல்லாத வெறும்பய
வீதிலதான் படுத்து கிடக்கணும்...

நாலு காசு இல்லாத பய
நாயப்போலதான் கஞ்சி குடிக்கணும்
இன்னும் ஏன் உசுரோடு இருக்கான்னா
இரண்டு பிள்ளைக்கும் இன்னும்
உழைக்கணுமே...

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சம்மாந்துறை மஷூறா -
மருதமுனை.

# சிவப்பு ரோசாக்கள்

**சி**ன்னஞ் சிறியதானதோர்
சிவந்த மொட்டு கண்டு
தாய்மைப் பூரிப்பின் உச்சத்தில்
பெருமிதம் கொண்டததந்த
சிவப்பு ரோசாச் செடி.

நாற்று நட்டவனும்
கரிசனையோடு பராமரித்தான்.
முகை விரித்து வாசம் வீசும்
நாளையெதிர் பார்த்திருந்தான்.
தாய்ச்செடியின் பூரிப்பில்
தன் பாங்கும் கருதி
புளகாங்கிதமடைந்தான்.

சிவப்பு ரோசா சிரித்தது.
வாசம் வீசி வசீகரித்தது.
செய்வதறியாது
திகைத்தது ரோசாச் செடி.
வண்டுகளின் ரீங்காரம்,
ஓயாது ஒலித்தது.

ஒளித்து வைக்கவா முடியும்?
பாதகமறியாச் சிவப்பு ரோசா,
காற்றிலாடிக் களித்தது.

ஒன்றாயிரண்டா...
ஈர்மூன்று வண்டுகள்,
சிவப்பு ரோசாவை மேய்ந்தன.
எதிர்க்க முடியாது மூர்ச்சையாகி,
கற்பிழந்து உயிரிழந்து,
ஓராயிரம் கனவுகளோடு,
மடிந்து போனாள் சிவப்பு ரோசா.

நாளையவள், வாய்க்கால் நீரில்
ஊதிக் கிடப்பாள்.
காகங்கள் கண்டுபிடிக்கும்.
வன்புணர்வாற்றலுடை வண்டுகள்,
குற்றம் நிரூபிக்கப்படாமல்,
பூக்களைத்தேடி ரீங்கரிக்கலாம்.
பாவம் சிவப்பு ரோசாக்கள்தான்.

●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து...




அஸ்ஸலாமு அலைக்கும்.

ஏப்ரல் மாத இதழ் சிறப்பாக வந்திருக்கிறது. கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும் இதழுக்கு மெருகூட்டும் வண்ணமாக அமைந்திருக்கிறது. வடிவமைப்பில் கவனம் புரிகிறது. வாழ்த்துகள் தோழரே... நன்றி!

**- தமிழ்நெஞ்சம் அமின்**
பிரதம ஆசிரியர்,
தமிழ் நெஞ்சம் மாத இதழ்,
பிரான்சு.

ஐந்தாவது ஆண்டின் சிறப்பிதழாக வெண்ணிலா சஞ்சிகையின் 17வது இதழ் வெளிவந்திருக்கிறது.

பல்வேறுபட்ட சுவாரஷ்யமான கலை இலக்கிய தகவல்களோடு காலாண்டு இதழாக வெளிவருகின்ற வெண்ணிலா சஞ்சிகை ஐந்தாவது அகவையில் கால் தடம் பதிப்பதை நினைகையில் அகம் மகிழ்கிறது.

பாடசாலை காலத்தில் தனிமனித எண்ணத்தில் உருவாகிய கலை இலக்கிய செயற்பாடுகளில் வெளிப்பாடாக பல்வேறு தடைகளைக் கடந்து பின்னர் மறு உருவாக்கம் பெற்று இன்று ஐந்தாவது ஆண்டாகவும் வெற்றி நடைபயிலும் வெண்ணிலா சஞ்சிகை வாசகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பையும் கனதியான படைப்பாக்க கூறுகளை கொண்டதுமாகவே காணப்படுகிறது.

கிழக்கு மாகாண அரச இலக்கிய விருது விழா தொடரில் 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த சஞ்சிகைக்கான விருதினை 2024 ஆம் ஆண்டு வெண்ணிலா சஞ்சிகை பெற்றுக் கொண்டது. இன்னுமதன் படைப்புலக சிறப்பியல்புகளை திரை இட்டு காட்டுவதாகவே அமைகிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, இலக்கிய விமர்சனம் என பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளை கொண்டு தரவரிசைப் படுத்தப்பட்டிருக்கும் வெண்ணிலாவில் பதிப்புத் திறமை மூத்த, இளம் எழுத்தாளர்களுக்கான முன்வரிசை களத்தினை கொடுப்பதாகவே காண முடிகிறது.

அதன் முன் அட்டை படங்களில் இதுவரை அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் எழுத்தாளர்களின் வரிசையை நோக்குகின்ற போது அக் கவிஞர்கள் அல்லது எழுத்தாளர்கள் ஜீவிய காலத்தில் வாழ்த்தப்பட வேண்டியவர்கள் என்பதே திண்ணம். இத் தனித்துவமான போங்கு சஞ்சிகை ஆசிரியரையே சார்ந்து இருக்கும் என்பதே நிஜம்.

வெண்ணிலா சஞ்சிகையையும் அதன் ஆசிரியரையும் கௌரவிக்கும் விதமாக அண்மையில் ஸ்கை தமிழ் மீடியா பிறைவட் விமிட்டட் இலங்கையில் நடாத்திய **ஸ்கை தமிழ் விருது விழா 2024** இல் சஞ்சிகை ஆசியருக்கு விருது வழங்கி இருந்தமை இன்னும் கூடுதல் சிறப்பம்சமாகும்.

**- இவன் கவிப்பொய்கை**
**ஜவ்ஸன் அஹமட்**
துணிந்தெழு மாத இதழ்
ஆசிரிய குழு உறுப்பினர்.

கவிஞர் பீ. ரீ. அஸீஸ் சிறந்த இலக்கிய ஆளுமை. அவரை வெண்ணிலா காலாண்டுச் சஞ்சிகை வெளியிட்டமை மகிழ்ச்சி. நல் வாழ்த்துகள்.

**- கவிஞர் ஏருர். கே. நௌஸாத்**

காலாண்டிதழாய்க்
கண் சிமிட்டும்,
வெண்ணிலாவே!
தேனான சுவை கொண்ட
தித்திப்பான ஆக்கங்களுடன்,
பதினேழாம் இதழ்தனிலே,
பன்முகம் காட்டுகிறாய்!

பொன் மலராம்
வெண்ணிலா மஞ்சரியே!
நீ மண்ணிலே எண்ணிலா
இதழ்களை ஈந்திட,
என்றென்றும்,
என் பொன்னான
நல் வாழ்த்துக்கள்!

**- கலாபூஷணம்**
**சபீனா வைத்துள்ளாஹ்.**

இனிய வாழ்த்துகள் கவிஞரே! தங்கள் இலக்கிய முயற்சி மிகவும் மெச்சத்தக்கது.

**- எழுத்தாளர், கவிஞர்**
**அலெக்ஸ் பரந்தாமன்.**

---

**அடுத்த இதழ்: 19**
**எதிர்வரும் ஒக்டோபர் 2025**
**முதலாவது வாரம்**
**வெளிவரும்.**

---

**இதழ்: 19 இல் பிரசுரிப்பதற்கான ஆக்கங்களை அனுப்பவேண்டிய**
**இறுதித் தினம்:**
**15-09-2025**

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்மைய வெண்ணிலா காலாண்டுச் சஞ்சிகை இதழ்கள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் பிரதான வீதி, மருதமுனை Jesa Grafix இல் அச்சிட்டு ஜூலை 2025இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org